# ஈழமணி

241





## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்.

சிந்தாந்த சாகரஞ் செந்தமிழ்ப் பேழை திகழ் மதுரப்
பத்தோடு மேலெண் புராணக் களஞ்சியம் பாங்குசிவ
வித்தான திட்ட விளைநிலமென்று விளம்புகின்ற
முத்தான வாறுமுகநா வலரெம் முடிமணியே.



"ஈழமணி" ஆசிரியர்

திரு. க. க. முருகேசபிள்ளை அவர்கள்.

# ஈழமணி

## தமிழர் ஆக்கங் கருதிய திங்கள் வெளியீடு.

பொன்னின் மணிபோற் பொருந்தும் பொருளுரையான்
மன்னு மகத்திருளை மாற்றியே—இன்னொளிசெய்
தாழி யுலகினிடை யாண்டுபல வாழியவே
ஈழமணி யென்னு மிதழ்.

மலர் : 1 ] [ இதழ் : 1

ஆசிரியர் :

தென்புலோலியூர், திரு. க. க. முருகேசபிள்ளை

மார்கழி

1947

கொழும்பு விலாசம் :
97, நொறிஸ் ரோட்,
கொழும்பு.

யாழ்ப்பாண விலாசம் :
தென் புலோலியூர்,
பருத்தித்துறை.

# பொருளடக்கம்

பக்கம்

1. "ஈழமணி" வாழ்த்து

2. தமிழ் வாழ்க! — ஆசிரியர் ... ... 3

3. விந்தை முதியோன்
டக்டர். க. கணபதிப்பிள்ளை ... ... 4

4. ஈழ நாட்டின் பெயர்கள்
முதலியார்: குல. சபாநாதன் ... ... 6

5. ஈழமணித் திருநாடு
மு. வைத்தியலிங்கம் ... ... 13

6. திருக்குறளின்பம்
அருள். தியாகராஜா ... ... 14

7. நானும் நற்றிணை யுரையாசிரியர் நாராயணசாமி ஐயரும்
பண்டிதமணி, க. சு. ந. கி. பாரதி ... 17

8. பண்டைத் தமிழரும் சிவனும்
வித்துவான், க. முருகேசபிள்ளை ... ... 21

9. 'கூவுமினிய கோழி'
"முருகு" ... ... 25

10. நினைவு
26

11. அப்படியிருந்தது அந்தக் காலம்!
"பவன்" ... ... 27

12. பாவை வழக்கு
பொன். சின்னத்துரை ... ... 30

13. சிகிரியின் குகைச் சித்திரங்கள்
சோ. நடராஜன் ... ... 33

14. மஹாராணி
"பண்டிதர்" ... ... 37

15. பத்ருஹரி நீதி சதகம்
எஸ். என். ... ... 40

16. யாரை நோவேன்?
த. பாலசுப்பிரமணியம் ... ... 41

17. நீரதியும் நெருப்பறியும்
கு. பெரியதம்பி ... ... 46

# தமிழ் வாழ்க!

தமிழ் நாட்டினின்று சிறு கடலாற் பிரிக்கப்பட்டதாயுள்ளது நமது இலங்கை. இலங்கையை 'ஈழம்' 'ஈழநாடு' என்றே சங்க நூல்களும் தேவாரத் திருப்பாசுரங்களும் குறிக்கின்றன. தமிழ் நாட்டுக்கும் இலங்கைக்கும் மிகப் பழைய காலந் தொடங்கியே பெருந் தொடர்பு இருந்து வந்தது. ஈழத்துப் பூதந்தேவனார் முதலாகப் பலர் இலங்கையிலிருந்து தமிழ் வளர்ச்சிக்குத் துணை புரிந்து நின்றார்கள். சங்க நூல்களை நல்ல முறையிற் பதிப்பிப்பதிலும் ஈழத் தமிழரே முதன் முதலாக ஈடுபட்டார்கள். அகராதி இயற்றுவதிலும் மேலைத்தேய அறிவியல் நூல்களை மொழி பெயர்ப்பதிலும் கூட ஈழநாடே செம்மையான அத்திவாரத்தை ஆதியில் அமைப்பதாயிற்று. கிறிஸ்தவ நூலாகிய பைபிளைத் தமிழிலே சிறப்புகள் அமைய மொழி பெயர்த்துக் கொண்டவரும் ஈழத்து நல்லூர் ஆறுமுக நாவலரவர்களேயாவர்.

ஆறுமுக நாவலர், டக்டர். ஆனந்த. கே. குமாரசுவாமி, சுவாமி விபுலானந்தர் போன்ற அறிஞர்களை ஈன்ற ஈழத்தில், உயரிய திங்கள் வெளியீடொன்று தமிழர் ஆக்கங் கருதியதாய் வெளிவருதல் வேண்டுமென யாம் கொண்டிருந்த ஆசையானது, திருவருளால் இன்று நிறைவேறுகின்றதைக் கண்டு உவகையடைகின்றேம். நமது "ஈழ மணி"யின் வளர்ச்சிக்காகத் தமிழ் மக்களின் மனப்பூர்வமான ஆதரவினை வேண்டுகின்றேம்.

அடுத்து வரும் இதழினை விபுலாநந்தர் நினைவு மலராக வெளியிடுகின்றேம். அந்த மலரில் வெளியிடுவதற்காக அன்பர்களால் அனுப்பப்படும் கட்டுரைகள் அண்மையிலேயே எம்மைச் சேருதல் வேண்டும்.

இந்த இதழின் முகப்புச் சித்திரத்தை எழுதியுதவிய அன்பர், திரு. பொன். கதிரைவேற்பிள்ளைக்கு யாம் பெரிதும் கடப்பாடுடையேம்.

இப்போது லண்டனில் நடைபெறும் கலைப் பொருட் காட்சியில் வைக்கப்பட்டிருக்கும் " நடராஜ வடிவம் " தான் எமது முதலிதழ் முகப்பை அலங்கரிக்கின்றது.

ஆசிரியர்.

# விந்தை முதியோன்

[ இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர்
டக்ரர். க. கணபதிப்பிள்ளை அவர்கள், B. A. (Hons) Ph. D. ]

---

## 1.

உலகினர் போற்றும் ஓங்கிடு தொல்சீர்
நலமிகச் செறிந்து நன்கு விளங்கும்
[1]எகித்தென் பேருடை எருறு தேளத்து
சிறந்திடு பல்பொருள் செறிந்து நெருங்கி
இலகுறு கடைகளும் அழகுறு வீதியும்
வலனுடை வேந்தன் வளமா ளிகையும்
நகர மாந்தர் நன்மா டிகளும்
திகழுறு சிறப்பொடு சேர்ந்து சேண்
[பொருந்து
கீர்த்தி வாய்ந்த [2]கைரோ நகரம்
பாரோர் விரும்பும் பல்வளம் மிளிரும்;
அதாஅங்கண்,
தெருத்தெருத் தோறும் திரிந்து பிச்சை
வாங்கி யுண்டு வாணாள் கழிக்கும்
நல்கூர் மாக்கள் தொல்லார் குழாஅத்
[துள்
தந்தைதா யில்லான் தனியனோர்
[சிறுவன்
[3]பருடி யென்னும் பண்புடைப் பெயரோன்
துயரென் நிலைமை உலகத் திருத்தல்
காணா வுள்ளக் கழிபே ருவகையன்
கண்டோ ருள்ளம் கொண்டு பிணிக்கும்
அறியாப் பருவச் சிறியநற் குழவி
வீதி தோறும் விழைந்து திரிந்து
தண்ணளி மாந்தர் தவறா திட்டுழிக்
கொண்ட பிச்சை உண்டு வளர்ந்து
வந்தான் பேர்நகர் வாழும்
ஏனை வறிய ஏர்மகார் போலென்.

---

## 2.

சின்னஞ் சிறுபணி முன்னி யியற்றும்
பன்னிடு பருவம் துன்னி வந்ததும்
கடைத்தெரு வாங்கண் கருது பல்
[பண்டம்
மிடைந்து விற்கும் மேவுநல் வணிகர்
இட்டிடு சில்பணி தொட்டுநன் காற்றி
முட்டில் லாது முனைந்து நடந்துழி
வணிக னொருவன் மனதி லிரங்கி
வனப்புறு தன்னுடை வளம்பெறு
[கடைக்கு
வாயிலி னின்று வாயில் காக்கும்
வாயிலா ளனாய் வைத்தனன் பருடியை
அத்தகைப் பணியை ஒத்துநன் காற்றி
வந்திடு வேளை நந்தியே பருடியும்
நெடிது முயன்று நெடுங்கணக் கெழுதப்
பயின்று கொண்டனன் பண்பொடு
[படித்தே;
அதனால்,
பருடிதன் நேர்மைப் பாங்கினை யறிந்த
வணிகர் தலைவன் பணியுறு மவனைத்
தங்குதன் கடைக்குத் தருகணக்
[கெழுதும்
கணக்க னாகக் கருதி யமைத்தனன்;
ஈங்கனம் பருடி இயலுறு பணியைச்
சிறிதும் தவறான் செய்திடு போதினின்
வணிகன் பருடியை வந்தடைந் தோர்
[நாள்
கண்ணீ ராருக் கலுழ முகத்துடன்
"என்பணி தன்னை எள்ளள வேனும்
தவறா தாற்றும் தகவுறு குழந்தாய்!
இனிநீ யென்னோ டிருக்க வேலா

---

1. Egypt 2. Cairo 3. Bahrudi

பிறிதோர் தலைவனைப் போய்நீ யடைந்து
கடமை செய்யக் கருதிடு மைந்த,
என்னிட மிருந்த ஏர்பொருள் முழுவதும்
தொலைந்து போயதென் துன்புறு [செய்தி
வந்ததின் றெனக்கு வருத்தஞ் செய்தது;
[1]வார்பரி வாழும் வன்கணர் கப்பற்
கொள்ளைக் காரர் கொண்டென் கப்பலை
ஏகின ரென்றே யானறிந் தனனால்;
என்பண மொழிந்தேன் என்றெழில் [நின்றதால்
அந்தோ கெட்டேன் அரியவென் மகளை
யாது செய்வேன் யாங்கன மவளை
மணவினை யாற்றி மகிழ்வொடு [காப்பேன்?
தங்குவழி யறியேன் தத்தளிக் [கின்றேன்''
என்று வணிகன் இரங்கி யரற்றலும்
பருடி யவனைப் பணிவொடு நோக்கி
''ஐயா வணிகவென் னன்புடைத் [தலைவ!
எளியேன் றன்னைநீ அருகனென் [றெண்ணின்
நின்மக டன்னை யானே மணப்பன்
அன்னாள் பொருட்டாய்த் துன்புறேல் [சிறிதும்;
அதாஅன்று,
என்சிறு பணியை இயற்றிச் சேர்த்த
பொருள்சிறி துண்டு பொருந்தியென் [னிடத்தே,
அப்பொரு டன்னை அருமுத லாக
ஒப்புட னெடுத்தே ஓர்ந்துளம் [பொருந்தி
இருவே நாமும் ஒருவே மாக
வணிகஞ் செய்திடின் வான்பணம் [முன்போல்
பெருக்கி வளர்க்கப் பெரிதும் சான்றிடும்
என்றியா னெண்ணும் எழில்பெறு [தலைவ
நின்னுளம் யாதோ நேர்வுற [மறியேன்''
என்று பரிவாய் எடுத்து மொழிதலும்
வணிகனும் கேட்டு நனியா ராய்ந்து
பருடி தன்னுடன் மருவியே வணிகம்
ஆற்ற விசைந்தனன் ஆர்பொரு [ளீட்டவென்.

---

### 3.

சிறுபணி யியற்றிச் சிறுகச் சேர்த்த
பருதன் கைப்பணம் பகரத் தகுந்த
தொகையன் றெனினும் துன்னுநல் [வழியான்
ஆய்ந்து வணிகம் ஆற்றின னாதலின்
தொடங்கிய திங்கள் முடிந்திடு முன்னர்
வணிகந் திரும்பவும் வளர்ந்தோங் [கியதால்;
அவ்வணம் விளைந்த செவ்வியைக் கண்டு
வணிகனும் மகளை மகிழ்ந்து முற்பட்டே
அவண்மே லாற்றுக் காதல் பொருந்தி
ஏக்குற் றிருந்த நீக்கறு பருடிக்குக்
கொடுத்தா னருமணைக் கிழத்தி யாக;
ஓராண் டகவை ஒழிந்த பின்றை
ஓமா ரென்பெய ரோங்கிய மைந்தனைப்
பன்னிடு குணத்தோன் பருதனப் [பருடியும்
பெற்றன னாகிப் பெரு மகிழ் வுடனே
உற்றநல் லறங்கள் ஒருவா றிட்டினன்;
சிலநா ளிவ்வகை சென்றதன் பின்னர்
வணிகர் தலைவனும் வணிகத் [தொழிலைப்
பருடிதன் கையிற் பகர்ந்தொப் படைஇ
இல்லத் திருந்தே இளநன் மகவொடு
களித்துநன் காடிக் காலங் கழித்தனன்;

1. Barbary States

# ஈழ நாட்டின் பெயர்கள்

---

ஈழ நாட்டின் பெயர்களை அறிந்து கொள்ளுதல் அதன் சரித்திரத்தை அறிந்து கொள்ளுதலின் ஒரு பாகமாகும். இந் நாட்டில் பண்டைக் காலத்தில் வாழ்ந்த இயக்கர், நாகர் முதலிய மக்கட் குழுவினரும், இதனைக் காலத்துக்குக் காலம் தரிசித்த பேர்பெற்ற பிரயாணிகளும், இதனை வென்று ஆட்சி புரிந்த சோழர், பாண்டியர், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் முதலியோரும் இத் தீவில் இற்றை ஞான்று வாழ்ந்து வரும் சிங்களர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர், மலேயாளத்தார், முதலியோரும் தத்தம் மொழிக் கேற்ற பெயர்களை இத் தீவிற்கு இட்டு வழங்கலாயினர். ஈழ நாடு எனினும் இலங்கை எனினும் ஒக்கும். இத் தீவின் பல்வேறு பெயர்கள் மட்டு மன்றி இத் தீவிலுள்ள ஊர்களின் பெயர்களும் சரித்திரத் தொடர்புடையன என்பது யாவரும் நன்கறிந்த விஷயம்.

முதலியார்: குல. சபாநாதன்

ஊர்ப் பெயர் இடப் பெயர் வரலாறு ஒரு தனி ஆராய்ச்சித் துறையாகும். இத் துறையில் நம் நாட்டில் ஈடுபட்டு உழைத்தோர் மிகச் சிலரே. எனினும் இவ் வறிஞர்களின் ஆராய்ச்சியின் பயனாக மறைந்து கிடந்த சரித்திர உண்மைகள் பலவற்றை யாம் அறிந்து கொள்ளும் பாக்கியம் கிடைத்தது.

கீழ்மாகாணத்திலுள்ள மட்டக்களப்பு எனும் ஊர்ப் பெயர் 'மட்டிகள் நிறைந்த குளம்' எனப் பொருள்படும். 'Mattikalapu' எனும் போர்த்துக்கேய பதத்தின் திரிபு என வண. எஸ். ஜி. பெரேரா அவர்கள் கருதுகின்றார்கள். இக்கொள்கை போர்த்துக்கேயர் ஆட்சியை நினைவூட்டுகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் காணப்படும் இணுவில், கோக்குவில் முதலிய ஊர்ப்பெயர்கள் சிங்களச் சொற்கள் என ஸ்ரீ. ச. குமாரசுவாமி அவர்கள் தாம் எழுதிய, 'வட மாகாணத்துள்ள சில இடப்பெயர்களின் வரலாறு' எனும் சிறந்த ஆராய்ச்சி நூலில் எடுத்துக் காட்டி இருக்கின்றார்கள். வில அல்லது வில் என்பது சிங்களத்தில் குழி, குளம், செதுப்புநிலம் எனப் பொருள்படும். இக்கொள்கை யாழ்ப்பாணத்தைச் சிங்களர் முன்னொரு காலத்தில் ஆண்டனர் என்பதை நினைவூட்டுகிறது. வண. சுவாமி. ஞானப்பிரகாசர் அவர்களும் யாழ்ப்பாணத்திலுள்ள சில இடப்பெயர்களின் வரலாற்றை ஆராய்ந்து கட்டுரைகள் எழுதியுள்ளார். கீழ் மாகாணத்தில் காணப்படும் குறுமண்வெளி, கோக்கட்டிச் சோலை, திருக்கோயில், சாய்ந்தமருது முதலிய இடப்பெயர்கள் தூய தமிழ்ச் சொற்களாக இன்றும் நின்று நிலவுவது தமிழரின் தொடர்பை எடுத்துக் காட்டுகிறது. இங்ஙனமே வன்னிப் பகுதியிலுள்ள இடப் பெயர்கள் தமிழரின் தொடர்பைநன்கெடுத்துக் காட்டுகின்றன.

இலங்கைக்குப் பல பெயர்கள் இருப்பது போல உலகில் வேறெந்தத் தீவுக்கும் இருக்குமெனக் கூறமுடியாது.

இயக்க வேந்தனாகிய குபேரன் இலங்கையில் ஆட்சி புரிந்தான் எனப் புராணங் கூறுதலால் இத் தீவு இயக்க தீவு எனப் பெயர் பெற்றது. இனி நாகர்கள் முன்னொரு காலத்தில் இலங்கையில் வாழ்ந்தமையால் இத் தீவு நாகத் தீவு எனவும் பெயர் பெற்றது.

பண்டை ஞான்று இலங்கையானது தமிழ் நாட்டின் ஒரு பகுதியாய் இருந்ததென்பதே சரித்திர ஆராய்ச்சியாளர்

துணிபு. அங்ஙனமாயின் இந் நாட்டின் பழம்பெருங் குடிகள் திராவிட வகுப்பினர் என்பது அவர் கருத்து. கந்தபுராண காலத்தில் சூரபத்மன் ஆட்சி புரிந்த பொழுது, கார்த்திகேயப் பெருமான் இந் நாட்டிற்கு வந்த வரலாற்றைக் கதிர்காமம் என்னும் திருத்தலம் இன்றும் நினைவூட்டிக் கொண்டிருக்கின்றது என்பர் சேர். பொன். அருணசலம் அவர்கள். களுகங்கை கடலோடு கலக்கும் இடத்தின் ஒரு கரை வேலபுர மெனவும், மற்றொரு கரை தேவ சத்துரு கரை — Desastra Kalutara) தேசஸ்தர துறை யெனவும் வழங்கப்படல் இப்போரினை நினைவூட்டுகின்றதென முற்கூறிய அறிஞர் குறிப்பிட்டிருக்கின்றனர்.

இங்ஙனம் ஒரு பெருங் கண்டத்தின் பெரும் பகுதியாயிருந்த இலங்கையானது பன்முறை கடற்கோட்பட்டதென்பது சரித்திர நூல்களிற் றெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அன்றியும் கடலடுத்த நாடுகட்கெல்லாம் கடற்கோள் வரலாறு ஏற்படுதல் இயல்பு. எனவே இலங்கைக்கும் பல கடற்கோள்கள் ஏற்பட்டிருக்கு மென்பது மறுக்காது ஒப்பக் கூடியதேயாம். அங்ஙனமானல் இப்பொழுதுள்ள இலங்கையின் நிலப்பரப்பு இன்னும் பன்மடங்கு விரிந்திருக்க வேண்டுமென்பது சொல்லாமலே பெறப்படும். ஆழிசூழ் இலங்கை ஆயிரக்கணக்கான மைல்களுக்குப் பரந்திருந்த தென்ப. இராவணனுடைய ஆட்சியின் பின்னர் ஒரு கடற்கோள் கூறப்பட்டிருக்கின்றது. இராம ராவண யுததம் கி. மு. 2387 அளவில் நிகழ்ந்த தெனச் சிங்களச் சரித்திரம் குறிப்பிடுகிறது. சேர் வில்லியம் ஜோன்ஸ அவர்கள், இந் நிகழ்ச்சி கி. மு. 1810 அளவில் எனக் குறிப்பிட்டிருக்கின்றார். பந்துவாசன் காலத்திலும் (கி. மு.500), களனி திஸ்ஸன் காலத்திலும் (கி. மு. 200), இத் தீவிற்குக் கீழ் மேற் றென் பாகங்கள் கடலுள் ஆழ்ந்தன எனச் சிங்களச் சரித்திரம் கூறுகின்றது. இன்னும் கடையம் பொத்த, லங்காவிஸ்தாரய, (Kadaimpota, Lanka Vistaraya) என்னும் நூல்களால் களனி என்னும் இராசதானி கடலிலிருந்து 28 மைல் தூரத்தில் இருந்ததென அறியக் கிடக்கின்றது. 1,00,000 பட்டினங்களையும், 970 நெய்தற்பாக்கங்களையும், 470 முத்துக் குளிப்பவர் இருந்த கிராமங்களையும், எல்லாமாக இலங்கை நாட்டின் 12 இல் 11 பாகத்தைக் கடல் மூடிற்றென இராசாவலி எனும் சிங்கள நூல் குறிப்பிடுகின்றது.

இலங்கையின் கீழ் மேற் றென் பகுதிகளே ஆழிவாய்ப்பட்டனவென்பது மிகப் பொருத்தமான கூற்றேயாம். இலங்கையின் தென்கீழ்க் கடலிலிருந்து ஒளிகாலும் கலங்கரை விளக்கம் கட்டப்பட்டிருக்கும் கற்பாறை (Great Bass Light House) இன்னும் இராவணன் கோட்டையென்றே யழைக்கப்படுகிறது. இன்னும் மாணிக்கவாசக சுவாமிகளும், "ஆர்கலி சூழ் தென்னிலங்கை" யெனக் குறிப்பிட்டிருத்தலும் அவதானிக்கற் பாலது. "தென்" எனுஞ் சொல்லுக்கு வேறு பொருள் கூறுவாரு முளரெனினும், இச் சொல் தென்பாண்டிநாடென்றாற் போல, திசையைக் குறித்து நின்றது எனக் கோடல் நேர் பொருள். இராவணன் திருக்கோணேசர் கோவிலை நிறுவினன் என்பது கன்னபரம்பரை. இராமர் இராவணனுடன் போர் தொடுத்தற்கு முன்னர் முனீசுவரத்தில் வணங்கினரென சேர். அருணசலம் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். சேதுபந்தனத்திற்கு 'இராமரணை' எனும் பெயருண்மையும் ஈண்டு நினைவு கூர்தற்பாற்று. சீதா பிராட்டியாரின் பெயர், நுவரெலியாவுக்கும் ஹக்கலைக்கும் இடையிலுள்ள சீத்தலவா (சீதை வெளி) சீதால (சீதை யருவி) சீதாகுண்ட (சீதை குண்டம்) எனும் இடப் பெயர்களானும், பொய்ச் சீதை உருவத்தை இந்திரசித்து எரித்த இடமெனக் கருதப்படும் சீதாவாக்கையெனும் இடப்பெயரானும், இலங்கையில் இன்றும் நின்று நிலவுகின்றது. இராவணனுடைய மனைவி மண்டோதரி மாணிக்கவாசக சுவாமிகளாற் புகழப்பட்டிருத்தலையும் ஈண்டு நினைவுகூர்தல் நன்று.

இன்னும் இராமாயணக் கதைகள் பலவாறுக மலைநாட்டிற் கேட்கப்படுகின்றன. இவற்றுட் சிலவற்றை மேஜர் போர்ப்ஸ் என்னும் சரித்திர அறிஞர் தொகுத்துக் கூறியிருக்கின்றூர். இராமாயணத்திற் கூறப்பட்ட இலங்கை வேறு, இப்பொழுது இலங்கையென அழைக்கப்படும் தீவு வேறு என வாதிப்பாருமுளர். அத்தகையார் இலங்கையின் ஓர்பாகம் ஆழிவாய்ப் பட்டதனை நினைவுகூர்ந்து இத்தீவின் மலைநாட்டினைச் சுற்றிப் பார்ப்பார்களாயின், தங் கொள்கையிற் றளர்ச்சியுறுவர் என்பதற் கையமின்று.

### இலங்கையெனும் பெயர்கள்

இலங்கையெனும் பெயர் எக் காரணம் பற்றி உண்டாயிற்றென இக்காலத்தில் துணிந்து கூற முடியவில்லை. இச்சொல், இலட்சம் அல்லது இலக்கம் எனும் சொல்லின் மருவெனக் கொண்டு, இத்தீவுக் கருகில் இருந்த இலட்சம் தீவுகள் ஆழிவாய்ப்பட்டன எனும் கன்ன பரம்பரையொன்றினை நினைவூட்டுகின்றதென்பர் மேஜர் போர்ப்ஸ். இலக்கம் எனும் சொல் ஒளியெனவும் பொருள்படுதல் (எல்லே யிலக்கம்...தொல். உரி) எனும் நூற்பாவால் இனிது துணியப்படும். ஒளியென ஒரு பொருள்படும் எல், இலக்கம் என்னும் இரு சொற்களினின்றும் முறையே ஈழம் என்பனவும், இலங்கை, லங்கா என்பனவும் பிறந்த இயைபு ஈண்டு நோக்கி யின்புறத் தக்கது.

இலங்கை யெனுஞ் சொல்,

"கடல் சூழிலங்கைக் கயவாகு வேந்தன்"

எனச் சிலப்பதிகாரத்திலும்,

"இலங்கா தீவத்துச் சமனொளி யென்னுஞ் சிலம்பினை யெய்தி"

என மணிமேகலையிலும்,

"தொன்மாவிலங்கைப் பெயரொடு பெயரிய—நன் மாவிலங்கை.........."

எனச் சிறு பாணற்றுப் படையிலும்,

"இலங்கையீழத்துக் கலந்தரு செப்பு" எனப் பெருங்கதையிலும் வந்துள்ளது.

இரத்தினத்தீவம்: இவ்விலங்கை கடற்கால்வாயால் இரு பெருங் கூறுகப் பிரிக்கப்பட்டுளது. முன்னது வடபாற் கண்ணது. பின்னது தென்பாற் கண்ணது. இரத்தினத்தீவம் எனுஞ் சொல், "இரத்தினத் தீவத் தோங்குயர் சமந்தத் துச்சி மீமிசை.........." என மணி மேகலையில் வந்துள்ளது. இத்தகைய பாகுபாடின்றி இலங்கை முற்றினையுங் குறித்த பெயராகக் கருதுவாருமுளர். சமந்தகூடத்திற்கு அண்மையில் இரத்தின புரியெனுஞ் சிறந்த நகரம் இருத்தலும் ஈண்டு நினைவு கூர்தற்பாற்று. இலங்கை இரத்தினக் கல்லுக்குப் பெயர்போனவிடமாகும்.

ஈழம்: ஈழம் எனும் பெயர் இலங்கை முழுவதற்கும் பொதுவாகவும், வடபாற் கூறுகிய யாழ்ப்பாணத்திற்குச் சிறப்பாகவும் வழங்கப்பட்டிருக்கின்றது. இப்பெயர் முதலில் இந்தியா என்னும் பெயர்போல யாழ்ப்பாணத்திற்கு இடப்பட்டதாயிருந்து பின்னர் இலங்கை முழுவதற்கும் வழங்கிற்றுப் போலும். இங்ஙனமின்றி முதன்முதலில் இலங்கை முழுவதற்கும் உரிய பெயராயிருந்து நாளடைவில் அதன் ஒரு கூற்றுக்கு வழங்கப்பட்டதாகக் கொள்ளினும் கொள்ளலாம். "இலங்கை யீழத்துக் கலந்தரு செப்பு" எனப் பெருங்கதையில் வரலால் இலங்கையின் ஒரு பகுதி ஈழமெனுங்கொள்கை வலியுற்றமை காண்க. இன்னும் "ஈழத் துணவும்" எனப் பட்டினப் பாலையில் இச்சொல் ஆழப்பட்டிருக்கிறது. பழஞ் சிங்களம் 'எலு' எனவழங்கப்பட்டு வந்ததென்பது சிங்களர்க்கும் உடம்பாடு. எலு என்பது தமிழின்பாற் பட்டதொன்றெனச் சொற்பிறப் பாராய்ச்சி வல்லுனர் சுவாமி ஞானப்பிரகாசர் குறிப்பிடுகின்றூர். அவர் கூறுவது:—"பரத கண்டத்தோடு ஒருகாலம் இணைந்திருந்த தாகிய நம் இலங்கையிலே ஆதிதொட்டு தமிழின் ஒரு பாகதமே பேசப்பட்டது என்ற உண்மை எல்லாருக்குஞ்சம்மதம். இங்கே

பாகதம் என்றது ஒரு பாஷையின் சிதைந்த உருவத்தை.........அதுவே மேலும் திரிந்து எலு எனப்படுகிற சிங்களம் ஆயிற்று என்பது எனது கொள்கை". (ஈழகேசரி—15-8-37) ஈழம் என்னுஞ் சொல்லடியாகவே இலங்கையின் ஏனைய பெயர்கள் தோன்றினவெனக் காலஞ்சென்ற வழக்கறிஞர் பிறிற்றோ அவர்களும் முதலியார் இராசநாயகம் அவர்களும் குறிப்பிட்டிருக்கின்றார்கள். முதலியார் அவர்கள் கூறுவது:—"அக்காலத்தில் இலங்கையில் வசித்த நாகரும் இயக்கரும் 'எலு' என்று இக்காலத்திற் பிழைபட வழங்கப்படும் ஈழு வென்னும் நிறைவற்ற பாஷையே பேசி வந்தார்கள். அதனால் இலங்கைக்கு ஈழம் என்றும், ஈழ மண்டலம் என்றும் பெயர் உண்டாயது. ஈழம் சீழம் என மருவிச் சிஹழம், சிங்களம் என மாறியது. சீழம் என்னும் பெயரிலிருந்தே சீழம்தீப், சேரண்டிப் என்னும் அராபிய நாமங்களும், சிலாங், சிலோன் என்னும் மேலைத்தேயத்தவரிட்ட பெயர்களும் வந்தன. 'சிஹ' வென்னும் பாலிப் பாஷைச் சொல் 'சிங்கம்' என்னும் பொருளை யுடையதானபடியால், சிகழம், சிங்களமாக மருவியது அதிசய மல்ல. விஜயன் மிருகேந்திரனாகிய ஒரு சிங்கத்தின் வழித்தோன்றலானபடியால், அவன் வழித்தோன்றினோரும் சிங்களவர் என்றழைக்கப்பட்டார்கள் என்னும் மகாவமிசக் கூற்று உண்மையுமன்றிச் சிங்கள சாதியாருக்கோர் பெருமையுந் தராத வெற்றுரை யாதல் காண்க"—(யாழ். சரித்திரம் பக். 11—12) இனி, சிறீ ஈழம், சிஹளம், சிங்களம் ஆயிற்றெனக் கொள்வாருமுளர். இந்த ஈழத்திற்கும் சுமேரியாவிலுள்ள ஈழத்திற்கும் தொடர்புண்டென்பது நிச்சயிக்கப்படுமாயின், தமிழர் நாகரிகம் பரவியிருந்தமைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாதல் கூடும்.

தமிழர் வாழ்ந்த நாடு தமிழகம் என்றாயினாற்போல ஈழர் வாழ்ந்த நாடு ஈழமென்றாயிற்றாதல் வேண்டும். சேரர், சோழர், பாண்டியர் என்ற தமிழரின் ஒவ்வோர் இனம்போல், ஈழரும் மற்றோரினமாய் இருத்தல்கூடும். இவ் வீழர்கள் தாம் இலங்கையில் நாகர்களுக்கும் சிங்களர்களுக்கும் முன்பு இருந்த பழங்குடி மக்கள். ஈழர் என்னுஞ் சொல்லையே ஆரியர்கள் இயக்ஷர் என வழங்கினார்கள். ஆரியர்களுக்கு ழகரவெழுத்தொலி இல்லாமையால் அதற்கியைந்த ஷகாரமாக்கி இயக்ஷர் எனத் திரித்து வழங்குதல் கூடும். இவ் வீழர் தலைவன்தான் மிகப் புகழ்பெற்ற இராவணன் என்பவனும். குவேனியும் இவ் வீழர் தலைவியே. இவ் வீழர் எனும் பெயர் சரித்திரவாராய்ச்சி யுடையார்க்குப் புலனாகாதுபோனது வருந்தத் தக்கது. ஈழர்கள் கல்வி, கைத்தொழில் வேளாண்மை முதலியவற்றிற் சிறந்திருந்து வாழ்ந்தவர்களெனப் பழைய நூல்களான் உணர வருகின்றது. 'ஈழத்துணவும்' என்னும் பட்டினப் பாலையான் வேளாண்மை புலப்படும். 'ஈழத்துச் செப்பு' எனும் பெருங்கதையானும், 'ஈழவக்கத்தி' எனும் நச்சினார்க் கினியர் எடுத்துக்காட்டானும் விஜயன் கண்ணுற்ற பொழுது ஈழர் தலைவி குவேனி நூல் நூற்றுக் கொண்டிருந்தனளென்னும் மகாவம்சக் கூற்றானும் கைத்தொழிற் றிறமை பெறப்படும். ஈழக் குலச் சான்றோர் வரலாற்றால் ஈழரது போர்ப்பயிற்சியும், ஈழத்துப் பூதன்றேவனார் வரலாற்றால் ஈழரது கவிப் புலமையும் பெறப்படுகின்றன.

இனி ஈழம் என்பது பொன், கள், கிழக்கு எனப் பல பொருள் தந்து நிற்றலின் இப் பொருளைக் கருத்தில் வைத்துப் புராணகாரர் பல கதைகளை உண்டாக்கி விட்டனர். பொன்மலை யெனப்படும் மேருவின் ஒரு சிகரமே ஈழ நாடாயினதென்பது பௌராணிகர் கூற்று. ஈழுவர் எனுங் குடியினர் இந்தியாவிற் காணப்படலால், அவர்கள் இத்தீவினின்றும் இந்தியாவிற் குடியேறியவர்களாயிருத்தலுங் கூடும். ஈழ நாட்டிலிருந்து தமிழ் நாட்டிலும், மலையாளத்திலும் குடியேறியவர்கள் 'ஈழவர்' எனவும், திருநெல்வேலியில் குடியேறிய ஈழத்துப் பிள்ளை

மார் 'இல்லத்துப் பிள்ளைமார்' எனவும் வழங்கப்படுதலும் ஈண்டு நினைவு கூர்தற் பாற்று.

மும்முடிச்சோழமண்டலம்: இலங்கையின் வடபகுதியை வெற்றிகொண்ட இராஜராஜன் தனது நாட்டுள் ஒரு பகுதியாக இதனைக் கருதி இதற்கு மும்முடிச் சோழமண்டலம் எனும் பெயரிட்டழைத்தானென்பது தென்னிந்திய சாசனங்களால் அறியக்கிடக்கின்றது.

சிங்களம் அல்லது சிங்களத் துவீபம்: சிங்களர்வாழும் இடம் என்பது இதன் பொருள். சிங்களம் எனும் தீவில் வாழ்ந்தவர்கள் சிங்களர் எனப் பெயர் பெற்றனர் என்பது வைபவமாலையுடையார் கூற்று. இங்ஙனமன்றி சிங்களர் எனும் மரபினர் வாழ் இடம் சிங்களமாயிற்றென்பாருமுளர். இடப்பெயர் ஆராய்ச்சி வல்லுநர் திரு. S. W. குமாரசாமியவர்கள், 'சிங்களம்' எனும் சொல் சமஸ்கிருத மகாபாரதத்தில் வந்துளதெனக் குறிப்பிட்டிருக்கின்றார். அங்ஙனமாயின் சிங்களர் எனும் மரபினர் தோன்றுதற்கு முன்னரே சிங்களம் என்னும் இடப்பெயர் இருந்திருத்தல் வேண்டுமெனக் கருத இடமுண்டு. மேலும் இவ்வறிஞர் கூறுவது: சிம்ஹ அல்லது சிங்க என்பது திராவிட தானப் பெயர்களிலே *தலைநிற்றலானும் மத்திய இந்தியாவிலும், மற்றுஞ் சிலவிடங்களிலும், ஆண் மக்கள் தம் இயற்கைப் பெயரோடு சிங் (சிங்கம்) என்னுஞ் சொல்லைச் சேர்த்து வழங்குதலானும், அவ்வண்ணம் வழங்குஞ் சாதிகளிற் பலவற்றை வடதிராவிடரெனவும், திராவிடக் கலப்புடையோரெனவும் ஆங்கிலக் கலைஞர் அறைதலானும், நாடகத் தமிழிலே சிங்கன் என்பதன் பொருள் குறவனகையாலும், விஷ்ணுவுக்குச் சிங்கேசுவரன், சிங்கப் பெருமாள், சிங்கதேவன், நரசிங்கனெனும் நாமதேய முண்மையானும் இராவணன் மகன் முதலிய இராக்கதர் சிலரும், அசுரர் சிலரும், மற்றுஞ் சில வேந்தரும் சிம்ஹ என்னுஞ் சொல்லைத் தனித்தேனும் வேறு சொல்லோடொட்டியேனும் தம் பெயராக்கொண்டிருந்தமையானும், சிங்வோ எனப் பெயரியவொரு சாதி கடாரத்திலே இருக்கின்றமையானும், சிம்ஹ என்னும் வட சொற்கு அரசகுமாரன், தலைவன் நாதனெனவும் பொருளுண்மையானும், சிங்கப் பட்டம் எனப் பெயரிவொரு பட்டம் பெரும்பாலும் வேளாளர்க்குண்மையானும், கேசத்தினலேனும், முகத் தோற்றத்தினலேனும், வீரசக்தியினலேனுஞ் சிங்கத்தையொத்தவொரு சாதியாரைச் சிங்கர் எனச் செப்புதல் தகுதியாதலானும், நாக வழிபாடுடைய மக்கட்கு நாகர் எனும் பெயர் அமைந்தவாறு, சிங்கதேவனை வழிபட்ட மாந்தர்க்குச் சிங்கரெனும் பெயர் அமைதல் முறைமையாதலானும், சிங்களம் என்னும் ஸ்தானப் பெயரிலுள்ள சிங்க என்பது சிங்கள மகா வம்சத்திற் சொல்லிய மிருகேந்திரனைக் குறியாது, பண்டைநாட் பரதகண்டத்தும் ஈழமண்டலத்தும் பரவியிருந்த (நாகரையொத்த ஒரு சாதி நரேந்திரரையேனும், சிங்கேசுவரனையேனும் குறித்தது போலும்)—(வடமாகாணத்துள்ள சில இடப்பெயர்களின் வரலாறு—பக் 17, 18.) சிங்களர் எனுஞ் சொல் கேரளர், போசளர், குந்தளர் என்றாற்போலும் ஆரியச் சொற்சிதைவாகிய இனப் பெயராயிருத்தல் வேண்டும். போசன் மரபினர் போசளர், குந்தன் மரபினர் குந்தளர், கேரன் (சேரன்) மரபினர் கேரளர் எனப் பொருள்படுமாறு, சிங்களர் என்பதும் சிங்கன் மரபினர் எனப் பொருள்படும்; சிங்கன் எனும் பெயர் பகையரசர்களாகிய யானைகளுக்கு தான் சிங்கம்போல்பவன் என்னும் கருத்தால் தனக்குத் தானே இட்டுக்கொண்ட பெயராதல் பொருந்தும்; இங்ஙனமின்றிச் சிங்கன் எனும் சொல் வந்த வரலாறு உலகியலுக்கொவ்வாத புனைந்துரை வகையால் மகாவமிசத்திற் கூறப்பட்டு இக்காலத்து வழங்குகின்றது. சிங்களர்கள் பெரும்பான்மை தமிழ்க் கலப்புடையரென்பது அவரது மொழி நடையிலே தெரிந்து கொள்ளலாம். சிம்ஹ என்பது சிங்க என வருவதும், தேவனும்

* சிங்பூர், சிங்கபாத்து, சிங்கயிர், சிங்கம்பட்டி, சிங்கநல்லூர், சிங்கபுரம், சிங்காசலம், சிங்கப்பூர்.

பிரியதர்ஸ் என்பது தேவநம்பிய தீஸன் என வருவதும் தமிழ்க்கலப் பென்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. (தேவனம்பிரியதர்ஸ் என்பது மகதநாட்டரசன் அசோகச் சக்கரவர்த்தியின் பெயர்). சிங்களர் விஷ்ணுவையும், கதிர்காமக் கடவுளையும் பத்தினித் தெய்யோவையும் (கண்ணகி) இன்னும் வழிபட்டு வருகிறார்கள். அன்றியும் கண்டியில் ஆண்டு தோறும் நடக்கும் (Perahera) பெருவிழாவில் இத் தெய்வங்களே முதன்மை பெற்றிருந்தமை சரித்திரவாயிலாற் பெற்ற உண்மை.

இனி, தமிழொழி பதினேழ் நிலங்களுள் முதற் கூறப்பட்டிருப்பது சிங்களம். இதனை நன்னூலுரையாசிரியராகிய மயிலைநாதர் எடுத்துக் காட்டியிருக்கின்றார். அவர் கூறுவது: தமிழொழி பதினேழ் நிலமாவன: "சிங்களஞ் சோனகஞ் சாவகஞ்............தாமிவையே" என்பன. அருமணம், காம்போசம், ஈழம், கூவிளம், பல்லவம்: என்பன முதலானவை இவற்றின் பரியாயமும் இவற்றின் பேதமுமாய் இவற்றுள்ளே அடங்குமென்க. இவற்றின் மொழிகளும் வந்தவழி அறிந்துகொள்க.

"கன்னித் தென்கரைக் கட்பழந் தீவஞ்
சிங்களங் கொல்லங் கூவிள மென்னு...."

தாபிரபன (Taprobane) பண்டைக் காலத்து யவன (உரோம) கிரேக்க ஆசிரியர்களாய Oncscritus, Diodorous Siculus, Ovid, Strabo, Dionysius Periegetes Pomponius Mela, Solinus Polyhistor, Pliny முதலியவர்கள் இத் தீவு 'தாபிரபன' எனும் பெயரால் அழைக்கப்பட்டதென அறிந்திருந்தார்கள். இது மிகவும் பழையதொரு பெயர். இச்சொல் Tap-raban அல்லது Tab-ravan எனப் பிரிக்கப்பட்டு இராவணன் தீவு எனப் பொருள்படுமென்பர் ஒரு சாரார். இது தம்பபன்னியெனச் சிங்கள நூல்களால் இத்தீவுக்கிடப்பட்ட பெயரின் மருவென்பர் பிறிதொரு சாரார். தம்பபன்ன என்பதன் பொருள் செந்நிறமுடையது என்பது. விஜயனும் அவன் பரிவாரமும் முதன்முதல் இத் தீவில் இறங்கியபொழுது களைப்பினாலும் அலுப்பினாலும் நடக்கச் சக்தியற்றுத் தங்கள் கைகளையூன்றிக் கொண்டிருந்தார்களெனவும் தம் கைகள் செந்நிறம் படிந்தமைகண்டு 'தம்பபன' எனப்பெயரிட்டார்களெனவும் மகாவம்சம் கூறும். இத்தகைய வெற்றுரைகள் பல சிங்கள மகாவம்சத்தில் உளவென்பதற்கு இஃதோர் எடுத்துக் காட்டாகும். தென்னிந்தியாவில் தாமிர பரணியாற்றுக் கருகிலிருந்த தமிழர் இங்கு வந்து குடியேறிய பொழுது இத் தீவுக்கு இப்பெயரிட்டனர் என்பது சாலும். அன்றேல் தென்னிந்தியாவில் தமிழரைக் கண்ட பிறதேயத்தவர்கள் இங்கும் மகாவலிகங்கையையும் தமிழரையும் கண்டபொழுது, இத்தீவிற்கும் அப்பெயரையிட்டழைத்தனரெனக் கோடலும் ஒன்று. இதுவே சேர். பொன். அருணாசலம் அவர்களது கொள்கையாகும். இப்பொழுது பொதியின் மலையிலே பிறந்து கிழக்கோடி கொற்கையிலே கடலோடு கலக்கின்ற தாம்ர பரணியாறு முன்னொரு காலத்தில், அஃதாவது இப்பொழுதுள்ள கடல் கன்னியாகுமரிமுனைக்கு வடபால் இல்லாத பொழுது, கொற்கைக்கும் கிழக்கே நிலத்தோடி வந்தது, இலங்கைவரையும் ஓடி இலங்கையினுள்ளும் சென்றதாதல் பற்றி அவ்வாற்றின் பெயரே பெயராக இலங்கைக்கு வழங்கினரெனக்கொள்ளுதலுஞ் சான்று கிடைப்பின் உறுதிப்படும்.

பாலாசி முண்டு (Palaesimoundu) பிற்காலத்துக் கிரேக்கரும் உரோமரும் இத்தீவினைப் பாலாசிமுண்டு எனக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இதைத் தமிழ்ச் சொல் எனக்கொள்வர் முதலியார் இராசநாயகம் அவர்கள். பழைய சீழமண்டலம்—சிலமண்டலம்...ஈழமண்டலம், இவற்றிலிருந்து ஏனைய பெயர்கள் வந்த வரலாற்றை முன்னர்க் குறிப்பிட்டுள்ளாம். ஆண்டுக் காண்க. பரசிறீ மண்டலம் என்பதன் மருவென்பர் வின்சென்ற் ஆசிரியர். இஃது ஓர் பட்டினத்தின் பெயரெனவும், இலங்கையின் வடமேற்குப் பகுதியில் இருந்ததெனவும் கூறுவர் பிறிடாம்

ஆசிரியர். மேஜர் வோர்ப்ஸ் எனும் சரித்திர வல்லுநர் இச்சொல் சிங்கள மொழியினின்றும் பிறந்ததெனக் கொண்டு—பாலயசிய மண்டலம்—கீழ்நாடு எனப் பொருள்படு மென்பர். Pali-Simanta-Palai Simundu—பாலிசி மந்த எனும் வடமொழிப் பதத்தினின்றும் போந்த பெயரெனவும், தரும நூற்றலைமை எனப்பொருள்படுமெனவும் பிறிதொருவர் கூறியுள்ளார்.

பாலாவி மன்று என்பது பாலாவி ஓடும் வெளியிடம். பாலாவி மன்று என்பது பாலாசி முண்டெனக் கிரேக்கர்கள் வழங்கியிருக்கவேண்டு மென்பர் சிவங். கருணைய பாண்டியப் புலவர் அவர்கள். பாலாவி மன்று என ஓரிடத்தின் பெயராக விருந்ததனையே இலங்கை முழுதிற்கும் பெயராகக் கிரேக்கர்கள் வைத்துக்கொண்டார்களாதல் வேண்டும். இந்தியா என்பதும் கிரேக்கர்கள் அவ்வாறே இட்ட பெயரென்பது ஈண்டு நினைவுகூர் தற்பாற்று. மன்று மண்டு எனத் திரிந்து முண்டெனச் சிதைந்ததென்றல் பொருந்தும். நீலகிரியைச் சார்ந்த மன்று எனும் பல ஊர்களின் பெயர்கள், உதக மண்டு என்றாற்போல மண்டென வழங்குவது கண்டுகொள்க.

சாலிக (Salika): "தாபிரபன எனப் பழம் பெயர்பூண்ட தீவு இப்பொழுது சாலிக என அழைக்கப்படுகின்றது" எனத் தொலமி என்பவர் எழுதியிருக்கின்றார். சலாவ அல்லது சாலியர் எனும் ஒரு வகைச் சாதி இலங்கையிலுண்டு. இவர்கள் இலங்கைக்கே சிறப்பாக வுரியவர்கள். முன்னொருகால் கூலியாட்களாகவும் பின்னர் கறுவாப்பட்டையுரிக்கும் தொழிலாளர்களாகவும் வாழ்ந்துவந்தார்கள். இவர்களுடைய வரலாறு பலபடத் திரித்து வழங்கப்படுதலின், உண்மை வரலாற்றுப்பகுதி தெரிந்திலது. இனி, சாலிய என்பது சீலம் அல்லது சீழம் எனும் சொல்லின் மருவென்பாருமுளர். மலையாளத்தார் இதனை "சைலத்த" எனப் பெயரிட்டழைத்தனர்.

சலாபதீபம்: Salaba-Dipa; சலாபம் என்பது முத்துக்குளித்தல் எனப்படும். இப்பெயரால் இத்தொழிற்சிறப்பு மிகுந்த பட்டினமும் இலங்கையிலுண்டு. முத்துக்களாலும்வாசனைத் திரவியங்களாலும் லாபத்தையுண்டாக்கித்தன்னகத்தே பிறதேயத்து வணிகர்களை யிழுக்கும் ஆற்றல் வாய்ந்த தீவு என்பது இதன் பொருள் போலும்.

சேறண்டிப் (Serendib) Selen-divis: அராபிய ஆசிரியர்கள் Edirisi, Soleyman, Abou-Zeyn முதலியோர் இட்டழைத்த பெயர் 'செறண்டிப்' என்பது. டிவிஸ் (Divis) எனும் சொல் தீவு எனும் பொருளது. இதுவே பின்னர் மருவி Siren, Zeilan, Ceylon, சிலோன் என்றாயிற்றென்பர் ஒரு சாரார்.

முதற்புத்தராகிய காகுசந்தன் காலத்தில் இத்தீவு ஒச்சதீவம் எனவும் கோனகம்ம புத்தன் காலத்தில் வர துவீபம் எனவும், காசியப்ப புத்தன் காலத்தில் 'மத துவீபம்' எனவும் வழங்கப்பட்டுவந்ததென மகாவம்சம் குறிப்பிடுகின்றது. புத்தருடைய விரிவான வரலாற்று நூல்களில் அவர் இலங்கைக்கு வந்த வரலாறு கூறப்படவில்லையெனக் கருதுகின்றனர் ஒரு சில ஆராய்ச்சியாளர். ஒபிர், தர்ஷிஸ் என எபிரேயர் குறிப்பிட்டவற்றின் ஓர் பகுதி இலங்கையெனவும், சாலமோன் அரசன் தனது கப்பற்படைமூலம் பொன், வெள்ளி, இபம், மயிற்றோகை முதலியவற்றைப் பெற்றானெனவும் நம்பப்படுகின்றது. சீயம் (Siam) தேசத்தவர் இதனைத் "தேவ லங்கா" வென்றழைத்தனர்.

இவ்வாற்றால் இலங்கைப் பெயராராய்ச்சி இலங்கை வரலாற்றுண்மை ஆராய்ச்சிக்கு வாயிலாதல் கண்டுகொள்க.

# ஈழமணித் திருநாடு

மு. வைத்தியலிங்கம்

---

1. இன்பம் பொழி யிலங்கைத் தாயைப் போற்றுவோம்—அவள்
இன்னலெல்லா மொழிந்து வாழச் செய்குவோம்
துன்பம் நிறைந்த விந்தத் தொல் புவியையே—உயர்
தூய சுவர்க்க மெனத் தோன்றச் செய்குவோம்.

2. காலிமுகக் கரையின் கண் கவர் காட்சி—காதற்
கன்னியரோ டிருந்து கண்டு களிப்போம்
ஆழிவலம் வருமெம் ஈழத் தழகைக்—காண
அன்னியர் யாவரையும் கூவி யழைப்போம்.

3. இந்து சமுத்திரத்தின் ஈழக் கரையில்—இன்பம்
பொங்கித் ததும்பு மெழிற் பூவைய ரோடு
சந்திர மண்டலத்தின் மாட்சியைக் கண்டே—மனம்
சாந்த மடைந்திருப்போம் சஞ்சலம் விட்டே.

4. மாலைக் கதிரவனின் மஞ்சட் கதிர்கள்—மலை
போல அலையெழுமெம் நீலக் கடலில்
சாலப் படிதல் தையல் வாழ்நுதலிலே—ஒரு
சாந்தத் திலக மெனத் தான் துலங்குமே.

5. வெள்ளை மணற் பரப்பில் வேலைக்கரையில்—வீரம்
அள்ளிப் பொதிந் தமைத்த செந்தமிழ்ப் பாட்டைக்
கிள்ளை மொழி மடவார் பாடிடக் கேட்டு—இன்ப
வெள்ளப் பெருக்கில் நெஞ்சை விட்டிருப்போமே.

6. பண்டு அரசிருந்த கண்டி நகரும்—அதன்
பாங்கர் அமைந் தொளிரும் சோலை வளமும்
அண்டர் பிழைக்க நஞ்சு உண்டசிவனும்—பாதம்
கொண்டு ஒளிபதித்த குன்றையும் காண்போம்.

7. வள்ளி மணாளன் வாழும் மாநகர் செல்வோம்—அங்கு
மாணிக்கக் கங்கையினி லாடிக் களிப்போம்
புள்ளி மயிலின் மிசை யேறிவருவான்—கந்தன்
புகழைத் தினமும்பாடிப் போற்றி செய்குவோம்.

8. செந்தமிழ்ச் செல்வமெங்குந் தேங்கிடச் செய்வோம்—ஈழத்
தேசநலத் திற்காகச் சேவை புரிவோம்
பைந்தமிழ்க் கல்விபாரிற் பரவிடச் செய்வோம்—என்றும்
பரம பதத்தில்மனம் பதிந்திடச் செய்வோம்.

# திருக்குறளின்பம்

[ அருள். தியாகராஜா. ]

———

" சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த விருவி னைக்கு மாமருந்து—முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனர்
பன்னிய வின் குறள் வெண்பா"

தெய்வப் புலமைத் திருவள்ளுவர் அருளிச் செய்த திருக்குறள் வேதமாவது எமது செந்தமிழ் நூல்களுக்கெல்லாம் தலைமணியாகத் திகழ்வது. இந்நூலானது எல்லாச் சமயத்திற்கும், எல்லாச் சாதியினர்க்கும், எக்காலத்திற்கும் பொதுவாய், நடு நிற்பதாய், எல்லாராலும் பொன்னேபோற் போற்றப்பட்டு வருகின்றது. திருக்குறளைப் போன்றதொரு நூல் வேறு எம்மொழியிலும் காண்பதரிதென்று பல மொழிகளிற் புலமை மிக்க அறிஞர்கள் கூறுகின்றனர். மேல்நாட்டினரெல்லாம், தமிழ் மொழி மிகத் தொன்மையும் பெருமையும் வாய்ந்த தென்பதைத் 'திருக்குறள்' மூலமாகவே தெரிந்திருக்கின்றனர். ஒரு நூலின் சிறப்பையும் பயனையும் விளக்குவான் புகுந்த நன்னூலாசிரியர் "அறம் பொருளின்பம் வீடடைத னூற் பயனே" யென்று மொழிந்துள்ளார்.

இத் தன்னிகரில்லாத தனிச் செந்தமிழ் நூலை, "இறையனர் களவியலுக்கு" இனியதோர் நல்லுரை வகுத்த நக்கீரரும் தொல்காப்பியம், பத்துப் பாட்டு, சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், முதலிய சீரிய நூல்களை நாம் இனிது பயிலும்பொருட்டு, உரை செய்து உபகரித்த இளம்பூரணர், நச்சினர்க்கினியர், பேராசிரியர், சேனவரையர், அடியார்க்கு நல்லார், சங்கர நமச்சிவாயர் முதலிய உரையாசிரியர்களும், தங்களுடைய உரைகளில் வாய்ப்பு நேர்ந்துழி, நன்கு எடுத்தாண்டிருக்கின்றார்கள். இத்திருக்குறளுக்கு "தருமர், மணக்குடியர், (மணக்குடவர்) தாமத்தர், பரிதி, திருமலையர், மல்லர், கவிப் பெருமாள், காளிங்கர், நச்சர், பரிமேலழகர்" முதலிய பதின்மர் உரை செய்திருக்கின்றார்கள். இவற்றிற் கெல்லாம் தலை சிறந்து விளங்குவதாய், தற்போது யாவராலும் பொன்னேபோற் போற்றப்பட்டு வருவதாய், திருக்குறளோடு ஒத்த பெருமையுடையதாய் நிலவுவது, உலகளந்த பெருமாளின் திருவடித் தொழும்பு பூண்டு அவர்க் கருச்சனை செய்த பரிமேலழகியாரின் உரையேயாம்.

இந்நூலின் சொற்றொடர்களையும், கருத்துக்களையும், இளங்கோவடிகளும், சீத்தலைச் சாத்தனரும், முறையே சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலுமெடுத்தாண்டிருக்கின்றார்கள்.

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழு
தெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழையென்
றவப்
பொய்யில் புலவன் பொருளுரை
தேருய்"
(மணிமேகலை—22)

இதுவுமன்றிச் சைவ சமய ஆசிரியர்களிலொருவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள், தாமருளிச்செய்த திருநெல்வாயில்—திரு அரத்துறை என்ற திருப்பதிகத்தில்,

"பொறிவாயி லிவ் வைந்தினையும் அவியப்
பொருது"

"உறங்கி விழித்தா லொக்கு மிப்பிறவி"
"அகர முதலின் எழுத்தாகி நின்ருய்"

எனப் பாடியிருத்தல் உற்று நோக்குதற் குரிய தொன்ரும்.

பெரிய புராணமென்று வழங்கப் படும் திருத்தொண்டர் புராணத்தை இவ் வுலகுய்யும் பொருட்டு "பத்திச் சுவைநனி சொட்டச் சொட்ட" அருளிச் செய்த சேக்கிழா ரடிகள்,

"புண்டரிகத் தவள் வனப்பைப் புறங் கண்ட தூநலத்தைக்
கண்டு கேட்டுண் டுயிர்த்துற் றுணர்ந் தார் காதலினல்"

(ஏயர்கோன் கலிக்காமநாயனர் புராணம். 267) என்று மொழிந்த திருப்பாட்டில்,

"கண்டு கேட்டுண் டுயிர்த் துற்றறியுமைம் புலனும்
ஒண்டொடி கண்ணேயுள"

என்ற அருமைத் திருக்குறள் மணியை அப்படியே அமைத்திருக்கின்ருர்.

இனி சந்தான குரவர்களிலொருவ ராகிய கொற்றவன்குடி உமாபதி சிவா சாரியார், தாமியற்றிய 'நெஞ்சு விடு தூது' என்னுஞ் சைவ சித்தாந்த நூலின்கண்,

"தலைப்பட்டார் தீரத்துறந்தார் மயங்கி,
வலைப்பட்டார் மற்றையவர் என்று நிலைத் தமிழின்
தெய்வப் புலமைத் திருவள்ளுவருரைத்த
மெய்வைத்த சொல்லை விரும்பாமல்"

எனத் திருகுறளை அப்படியே எடுத்து ஆண்டிருக்கின்ருர். திருக்கடவூர் உய்ய வந்த தேவனருந் தாமியற்றிய திருக்களி ற்றிப்படியாரிலே,

"சார்புணர்ந்து சார்புகெடவொழுகி னென் [றமையாற்
சார்புணர்பு தானே தியானமு மாஞ்—சார்பு
கெட வொழுகினல்ல சமாதியு மாங் கேதப்பட
வருவதில்லை வினைப்பற்று"

என்று கூறியவற்றை

"சார்புணர்ந்து சார்பு கெட வொழுகின் [மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்"

என்ற குறளுடன் ஒப்பு நோக்குக.

"இல்லாரை யெல்லாரும் எள்ளுவர் செல்வரை எல்லாருஞ் செய்வர் சிறப்பு" என்ற இவ்வருமைத் திருக்குறளானது, சுந்தரமூர்த்தி சுவாமிகளுடன் திருக்கை லாயத்திற்கு ஒருங்கு சென்ற சேரமான் பெருமாணயனரால், உலாக்களுள் முதன் மை பெற்று விளங்கும் "திருக்கைலாய ஞானவுலா" வில் எடுத்துரைக்கப்பட்டது. சிவஞான போதமென்னும் ஒப்புயர்வில் லாச் செந்தமிழ்ச் சைவநூலை அருளிய மெய்கண்ட தேவரும், அந்நூலின் 5-ம் சூத்திரத்தில் இரண்டாமதிகரணத்தின் 2-ம் செய்யுளில் "கண்டு கேட்டுண்டுயிர்த் துற்றறியுமைம் புலனைக் கண்டுடனய் மன் னுதலைக்காண்" எனவருளியிருத்தல் பே ரறிஞர்களின் ஆராய்ச்சிக்குரியதொன் ரும். செந்தில் முருகன் திருவருளால் ஊமை நீங்கப்பெற்றுச் சைவத்தை இமய முதற் குமரிவரை நாட்டிய குமர குருபர சுவாமிகள், அக்காலத்தில் மதுரைமா நக ரில் அரசுபுரிந்த திருமலை நாயக்கனின் வேண்டுகோட்கிணங்கி, திருக்குறளின் சாரத்தை 'நீதிநெறிவிளக்கம்' என்ற நூ லாகச் செய்தாரெனக் கூறுப. வடநூற் கடலும், தென்றமிழ்க் கடலும், நிலைகண் டுணர்ந்து முழுதுண்டு தேக்கிய, சிவஞான முனிவரரும், திருக்குறளிலுள்ள 133 அதி காரத்திற்கும், ஒவ்வோரதிகாரத்திலும் ஒவ்வொரு குறளை எடுத்து, 133 வெண் பாக்களடங்கிய "சோமேசர் முதுமொழி வெண்பா" வென்ற நூலையியற்றியிருக் கின்ருர்.

ஆலவாய் அவிர் சடைக் கடவுள் மீ தும் திருப்பரங்கிரி முருகன்மீதும், அன்பு பூண்டு அவர்கள் மேல், 'கல்லாட' மென் னும் நூலைப் பாடியுள்ள, கல்லாட ரென் னும் புலவர், திருக்குறள் சமய நூலல்ல, பொது நூல்தானென்று பின் வருவன வற்ருல் வலியுறுத்துகின்ருர்.

''சமயக் கணக்கர் மதி வழிகூறு
துலகியல் கூறிப் பொருளிது வென்ற
வள்ளுவன் றனக்கு வளர்க்கவிப்புலவர்முன்
முதற்கவிபாடிய. ...............''

(கல்லாடம் 15-ம் அகவல் 20-24)

இதுகாறும், மேற்கூறியவற்றால், புத்தசமண சமயிகளாலும், சைவ சமய குரவராலும், சந்தானசாரியர்களாலும், பழைய உரையாசிரியர்களாலும், தற்போது மேலைத் தேசத்தவர்களாலும் திருக்குறள் பொன்னே போற்போற்றித் தழுவப்பட்டதென்பதை நன்கு காண்கின்றோம். இன்னும் இங்கு கூறப்படாத புலவர்களாலும், பிறசமயத்தவராலும், போற்றப்பட்டதென்பது பெரிதுங் கருத்திற் பதிக்கற்பாலதொன்றாம்.

திருக்குறளிலுள்ள பல பாக்களிலிருந்து வள்ளுவர் கல்வியினிடத்தே பெரியதோர் விழைவும் ஆர்வமும், உள்ளவரென்று தெரிகிறது. இவர் கல்வியை மிகுதியாக வற்புறுத்தினதுபோல் வேறொன்றையும் வற்புறுத்தவில்லை. அதன் பெருமையை இவர் கல்வி, கல்லாமை, கேள்வி யென்னும் மூன்று அதிகாரங்களால் தெரிக்கின்றார். அன்றியும் அறிவுடைமை, அவையறிதல், அவையஞ்சாமை, சொல்வன்மை, என்பனவும் கல்வியோடு தொடர்புடைய அதிகாரங்களேயாம். இவர் கல்வியைக் ''கேடில் விழுச்செல்வ'' மென்றும், எண்ணும் எழுத்துங் கண்ணென்று போற்றுதற்குரியதென்றும் உரைக்கின்றார். ''கல்வியினூங்கில்லைச் சிற்றுயிர்க் குற்றதுணை'' என்று 'நீதிநெறிவிளக்கத்தில்' கூறப்பட்ட மந்திர மொழியை முன் நன்குணர்ந்துபோலும் வள்ளுவர் ''ஒருமைக்கட்டான் கற்ற கல்வி யொருவற் கெழுமையு மேமாப்புடைத்து'' என்று உறுதிமொழி கூறிப்போந்தார். ''எழுமையு மேமாப்புடைத்து'' என்பதற்குப் பரிமேலழகியார் ''ஏழுபிறப்பினுஞ் சென்றுதவுதலை யுடைத்து'' என உரை செய்திருக்கின்றார். உதவுதல்—நன்னெறிக்கணுய்த்தல். இனிக் கல்வியினாற் புதிது புதிதாகத் தோன்றும் இன்பத்தை,

''அறிதோறறியாமை கண்டற்றாற் காமஞ்
செறிதோறும் சேயிழை மாட்டு''

என்று மிகவுஞ் சுவைபட உவமித்துள்ளார்.

''யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு'' இக்குறளில்

ஆசிரியர் திருவள்ளுவர் ''யாதுமூரேயாவருங்கேளிர்'' ராகச் செய்யும் சிறப்புடைய கல்வியை ஒருவன் தானிறக்குமளவுங் கல்லாது கொன்னே தன் வாழ்நாளைக் கழிக்கிறதற்காகப் பரிவும், கழிவிரக்கமுங் கொள்கின்றார்.

# நானும் நற்றிணை உரையாசிரியர் நாராயணசாமி ஐயரும்

கவுணியன், பண்டிதமணி, க. சு. ந. கி. பாரதி எழுதியது.

நற்றிணை யுரையாசிரியர் அ. நாராயண சாமி ஐயரைத் தமிழ் உலகம் பெரும் பாலும் அறியும். அவர் என் சிறிய தந்தையர்பால் கல்வி கற்றவர்; ஆதலினாலே அவரிடத்தில் யான் பாடம் கேட்க நேர்ந்தது. அவருடைய சிறு குடிசை கும்பகோணத்தில் இருந்தது; அக் குடிசையின் ஒருபுறம் நூல்நிலையம்; மற்றொருபுறத்தில் ஒரு சிறிய எழுத்துப்பெட்டி. அவ்விடத்திலேதான் அவர் கீழே உட்கார்ந்துகொண்டு தம்முடைய எழுத்து வேலைகளைச் செய்வார். அவரிடத்தே கல்வி பயிலும் மாணவர்களும் அவ் விடத்துக்குத்தான் வருவார்கள். யானும் சங்க நூல்கள் பலவற்றையும் அவரிடத்திலேதான் கற்றேன். பெரும்பாலும் எமது கல்விக்குரிய காலம் இராக்காலமாகத்தான் இருந்தது. எமது ஆசிரியர் அடிக்கடி தாம் கல்வி பயிற்றும் இடத்தைக் காவேரி அன்னையின் அகன்ற கரைக்கு மாற்றிக்கொள்வார்; அவ்விடத்தே பயிலும் கல்வியில் அதிக வளம் ஏற்படுமன்றே? காலமும் இரவு; இடமும் காவேரியின் மணல் நிறைந்த கரை; அக் கரையின் இரு மருங்கும் மின்சார வெளிச்சம் நிரை நிரையாகப் பிரகாசித்துக்கொண்டிருக்கும். அக்காலக் கல்வி முறையையும், காவேரி யன்னையின் காட்சியையும் இன்றும் என் மனம் கண்டு விம்மியதில் ஆச்சரியம் ஒன்று மில்லையன்றே?

இலக்கியங்களில் வந்துள்ள இயற்கைகளை இயற்கைக்கேற்ற மாபு வழுவாமல் விளக்குவதில் எம் மாசிரியருக்கு ஒப்பானவர்களை யான் என்றும் கண்டிலேன். யான் அவரிடத்தே கேட்ட சில விளக்கக் குறிப்புக்களைக் குறிப்பிடும் நோக்கமுடையேன். "பாம்பு வெகுண்டன்ன தேறல்" (சிறுபா. 237) என்னும் அடி ஒருநாள் ஆராயப்பட்டது. ஆசிரியர் முதலில் அதன் உரையை நச்சினார்க்கினியர் உரைத்தவாறே, "பாம்பின் விடம் ஏறி மயக்கினாற் போன்ற கள்" என்று கூறினார். நாங்களும் தலையை யசைத்துக்கொண்டே படிப்பில் முனைந்திருந்தோம். ஆசிரியர் அவ் வடிக்கு இன்னொரு விசித்திரமான உரையையும் கூறினார்; அதைக் கேட்டு நாங்கள் சொக்கிப்போய்விட்டோம். அவர் எங்களை நோக்கி "மாணவர்களே, கள்ளை வார்க்கும்போது, அக் கள் நுரைத்து "ஸ் ஸ் ஸ் ஸ்" என்று இரைவதை நீங்கள் கேட்டிருக்கவில்லையா?" என்று கேட்டார். நாங்கள் எல்லோரும் ஒத்தபடியே "ஆம் ஐயா! அதனைக் கேட்டிருக்கிறோம்" என்று கூறினோம். அவர், "அப்படியானால் வெகுட்சியடைந்த பாம்பிற்கும், கள்ளிற்கும் இன்னொரு ஒப்புமை கண்டீர்களா?" என்று கேட்டார். எங்கள் மகிழ்ச்சியை அளந்தறிவார் யார்? பின்னர் முதுவேனிற் காலத்திலே ஒருநாள்: ஆசிரியரோடு நாமனைவரும் குளத்துக்கு நீராடப் போனோம்; முதுவேனிற் காலமாதலின் வெயிலால் வாடி வதங்கிப் போனோம். சற்றுத் தூரத்தே ஓர் ஆலமரம் நின்றது; அம் மர நிழலை நம் மனைவர் உள்ளமும் நாடிற்று; அதனை நாடிச்சென்று இளைப்பாறினோம். ஆசிரியர் நம்மைப் பார்த்து, "இந்த நிழலைப் போல் நீங்கள் கற்ற இலக்கியங்களில் எங்கேயாவது பார்த்ததுண்டா?" என்று கேட்டார். நாம் எல்லாரும் சற்றுநேரம் ஒன்றும் ஞாபகத்துக்கு வாராமையினாலே விழித்தபடி இருந்தோம்; ஆசிரியரும் புன்முறுவல் பூத்திருந்தார்; நான் உடனே "ஐயா! கயம்புக்கன்ன பயம்படு தண்ணிழல்" என்று ஞாபகப் படுத்தினேன்; ஆசிரியர் மகிழ்ந்து என்னைத் தட்டிக்கொடுத்தார்; ஆசிரியர் கலா விநோ

தார் அல்லவா? "கயம்புக்கன்ன பயம்படு தண்ணிழல், என்பதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்டுவிட்டார். நாமெல்லோரும் "ஜிலு, ஜிலு என்றிருக்கும், ஐயா" என்று கூச்சலிட்டோம்; அப்போதும் ஆசிரியருக்குப் புன்முறுவல் தான்; புன்முறுவலோடு, "நல்லது, வாருங்கள்" என்று அழைத்துக்கொண்டு குளத்துக்குப் போனர். எல்லாரும் குளத்தில் இறங்கி முழுகினேம்; ஆசிரியர், "பிள்ளைகளே! நீங்கள் அம் மர நிழலில் அநுபவித்ததை, இக் குளத்தில் அநுபவித்தலோடுஒன்றுசேர்த்துஉணருங்கள்" என்றூர். இயற்கையோடு சேர்ந்து நான் அநுபவித்ததை எவ்வாறு சொல்ல வல்லேன்? மிக்க இளமையில் நான் மூழ்கியனுபவித்த குளமும், என் தோழரும், ஆசிரியரும், என் இளமையும் இன்று என் மனக் கண்முன் நிற்றலை, இலக்கிய உணர்ச்சியுடையவர் அறியாமல் இருக்க முடியுமா? இவைபோல ஆசிரியரோடு சேர்ந்து விளங்கிக்கொண்ட பொருள்கள் பல; அவற்றை ஏற்ற சந்தர்ப்பங்களில் தனித்தனி விபரிக்கும் நோக்கமுடையேன்.

ஆசிரியர், நற்றிணைக்கு உரை எழுதிக் கொண்டிருக்கும்போதே எங்கட்கும் நற்றிணையைக் கற்பித்துவந்தார். ஒருநாள் "கடவுட் கற்சுனை" (நற்றிணை. 34) என்னும் செய்யுள் பாடம் சொல்லப்பட்டது. இவ் வரலாற்றைச் சொல்லுமுன் என் மழவிளம் பருவத்தே நிகழ்ந்த தொன்றையும் கூறவேண்டியிருக்கிறது.

"மோய்தா ரணிகுழல் வள்ளியை
வேட்டவன் முத்தமிழால்
வைதாரையு மங்கு வாழவைப்போன்
வெய்ய வாரணம் போற்
கைதா னிருப துடையான்
தலைபத்துங் கத்தரிக்க
எய்தான் மருகன் உமையாள்
பயந்த விலஞ்சியமே"

என்னும் கந்தரலங்காரச் செய்யுள் அக் காலத்தே கேட்கப்பட்டது. இதில் உள்ள "முத்தமிழால் வைதாரையுமங்கு வாழவைப்போன்" என்னும் பகுதிக்கு, "மூன்று தமிழால் தம்மை இகழ்ந்துபாடினேரையும், அந்த முத்தியுலகத்தில் வாழவைப்போன்" என்றும், "முத்தமிழால் வாழ்த்தினவரையன்றி வைதாரையும் வாழவைப்போன்" என்றும் ஆசிரியர் உரை கூறினர். அவ்வுரை நாட்செல்லச் செல்ல, அறிவேற ஏற என் மனதுக்கு ஏற்றதாகத் தோன்றவில்லை; அதனை ஏற்குமாறு உரைத்தாரும் இலர். பின்னர், நற்றிணை உரையாசிரியரிடம் யான் வந்து சேர்ந்தேன். இக் காலத்தேதான் ஒருநாள் கடவுட் கற்சுனை என்னும் நற்றிணைப்பாடல் ஆராயப்பட்டது. ஆசிரியர் பாடலுக்கு உரை கூறினர். அப் பாட்டின் பொருள் வருமாறு:—

அறிவொழுக்கங்கள் முதலிய எல்லாவற்றினும் தம்முள் ஒத்த ஒரு தலைவனும் தலைவியும் ஒரு சோலையில் எதிர்ப்பட்டார்கள்; அவர்கள் பெற்றேரும் பிறரும் அறியாமல் அவ் விடத்தே புணர்ந்தனர்; அவர்கள் காதலும் வளர்பிறைபோல வளர்வதாயிற்று; அக்காலத்தே, தலைவன் ஏதோ ஒரு காரணத்தால் தலைமகளைப் பிரிந்து சென்றான்; அப் பிரிவுக்காற்றத தலைவி காதல்நோய்க் கடுமையால் வாடி வதங்கிப்போயினள்: அவள் உண்ணலும் உண்ணாள்; உறங்கலும் உறங்காள்; ஆயத்தாரோடு பயிலலும் பயிலாள்; அவள் நிலையைக் கண்டவர்கள், தலைவி பூஞ்சோலைகளிலும், செய்குன்றுகளிலும், அன்ன பிறவிடங்களிலும் உலவி வரும்போது, தெய்வம் தீண்டிவிட்டது போலும் என்று கூறத் தலைப்பட்டனர். அவள் நிலையைக் கண்ட தாயும் ஓகோ! இவளைத் தெய்வந்தான் தாக்கிற்று என்று கருதிவிட்டாள். தலைவன் மார்பு தாக்கியதை அவள் எவ்வாறறிவாள்? அக்காலத்தே இந்நிலை கண்டால் வெறியாட்டயர்வித்தல் மரபு; வெறியாடுமிடங்களில் முருகன் தோன்றி அருள் செய்வான் என்பது அக் காலத்து மக்களின் பெரு நம்பிக்கை. எதற்கும் முதன் முதலாக வேண்டுவது நம்பிக்கை ஒன்றே.

சமய சாஸ்திரங்களும் இதனையே வற்புறுத்தும். முருகன் உறையுமிடங்கள் இவை யிவை எனக் கூறிவரும் நக்கீரர், "வேலன் தைஇய வெறியயர் களனும்" என்று கூறலும் காணத்தக்கது. நம்பிக்கையுடைய நற்றாய் முருகனுக்குப் பூசை செய்விக்க நினைந்தாள்; பூசை செய்யும் பூசாரியின்மேல் முருகன் உருவேறித் தன் மகட்கு நேர்ந்த துன்பத்தை இதுவெனக்கூறி நீக்குவான் என்றும் கருதினாள்; அவ்வாறு கருதிப் பூசாரியை அழைப்பித்தாள்; அவனைப் பூசை செய்யுமாறு வேண்டிக்கொண்டாள்; பூசாரியும் சகல பூசனைத் திரவியங்களையும் அழைப்பித்துக்கொண்டு பூசையைத் தொடங்கினான்; பூசை முடிவில் முருகுத் தெய்வம் அப் பூசாரியின் மேலேறி ஆடத் தொடங்கிற்று. இவ் வாட்டமே வெறியாட்டம் எனப்படும். இவற்றையெல்லாம் அறிந்த தலைமகளது தோழி, அவ் வெறியாடு களனுக்கு வந்தாள்; முருகன் வேலைக் கையிற் பிடித்து ஆடுதலினாலே வேலன் எனப்படும் பூசாரியின் ஆவேசத்தைக் கண்டாள். அவள் தலைவியின் நோயை நன்கறிவாளன்றே? ஆதலால் உருவேறிய முருகனைப் பார்த்து அவள் சொல்லுகின்றாள்: "முருகவேளே! தலைமகள் நோய்க்குக் காரணம் தலைமகன் தாக்குதல் ஒன்றே. அந் நோய் நின்றாக்கலால் உண்டாயிற்றென்று எல்லாரும் கருதும்படி செய்து, அன்னை கொடுக்கும் பலியை உண்ண அவாவி, இவ் வெறியாடு களத்துப்பூசாரியின்மேல் வந்தாய்; நீ, கடவுளேயாயினும் ஆகுக. நீ உண்மையாக மடமையுடையோனாவை; அம் மடமையோடு நீ நெடுங்காலம் வாழ்வாயாக" என்று இல்லறத்தொடு தலைவியைப் பொருத்துமாறு நின்று உரத்துக் கூறினாள். அதனைக் கேட்டவர், தலைமகள் நோய்க்குக் காரணம் இன்னதென்று அறிந்தனர்; தலைமகளை அவள் நோய்தீரத் தலைமகனுக்கு மணம் முடித்தனர் என்பது குறிப்பு. அப் பாடல் வருமாறு :—

கடவுட் கற்சுனை யடையிறந் தவிழ்ந்த
பறியாக் குவளை மலரொடு காந்தட்
குருதி யொண்பூ வுருகெழக் கட்டிப்
பெருவரை யடுக்கம் பொற்பச் சூர்மகள்
அருவி யின்னியத் தாடும் நாடன்
மார்பு தரவந்த படர்மலி யருநோய்
நின்னணங் கன்மை யறிந்தும் அண்ணாந்து
கார்நறுங் கடம்பின் கண்ணி சூடி
வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்
கடவு ளாயினும் ஆக
மடவை மன்ற வாழிய முருகே.

குறிப்பு :—தேவையான பகுதி : நாடன்.........முருகே. நாடன்=நாடனாகிய தலைவன்; மார்பு தரவந்த= அவன் மார்பைப் புணர்ந்த காரணத்தால் அம் மார்பு தருதலானே வந்த; படர்மலி=அவனைக் கருதுதலால் குறைதலில்லாத; அருநோய்=நீங்கற்கரிய இக் காமநோய்; நின்னணங்கு=நின்னால் வருத்திக் கொடுக்கப்பட்டது; அன்மை யறிந்தும்= அன்று என்பதை நீ நன்றாக அறிந்தும்; அண்ணாந்து=தலை நிமிர்ந்து; கார்=கார்காலத்து மலரும்; நறும்=நல்ல வாசனையுள்ள; கடம்பின்=கடப்ப மலரின்; கண்ணி=மாலையை; வேலன்=பூசாரி (படிமத்தான்)

இப் பாட்டிலே, "கடவுளாயினும் ஆகுக" என்ற அடிகளைக் கண்டபோதே என்னை யறியாமல் ஒரு கவர்ச்சி அவ் வடியின்மேற் சென்றது; ஆசிரியர் அவ் வடிக்குப் பொருள் கூறிமுடித்தார்; முடிந்தவுடன் யான், "ஐயா! சற்று நில்லுங்கள், நில்லுங்கள்." என்று ஆரவாரித்தேன்; ஆசிரியர், "என்னடா, பித்துற்றனையோ? ஏனிங்ஙனம் ஆரவாரிக்கின்றாய்?" என்று கேட்டார்; "ஐயா, ஓராராய்ச்சிக்கு இடமிருக்கிறது" என்றேன். "என்ன, கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தது போலப் புதிய ஆராய்ச்சியா?" என்று நகைத்தார். 'யான் அதற்கு மேற்பட்டதையா' என்றேன். 'அப்படியானால் அதை நான் கேட்கத்தான்வேண்டும்' என நகையாடியவாறே உரைத்தார். இங்கே முருகன் மடமையுடையான் என்று இகழப்பட்டானல்லனோ? என்றேன். அதற்கென்ன தடை? இதுதானா உன்னாராய்ச்சி? என்றார் ஆசிரியர். ஐயா! சற்றுப் பொறுத்தருளல் வேண்டும் என்றேன்; ஆசிரியர், ஏ, நவநீதம்! வீண்காலம் போக்காதே; எனக்கிருக்கும் வேலை உனக்குத் தெரியு

மே? என்றார். ஐயா! கேளுங்கள் என்று யான் சொல்லத் தொடங்கினேன்: "முத்தமிழால் வைதாரையுமங்கு வாழவைப் போன் என்றிருக்கின்றதே? அந்த வைவு தானேயா இந்த வைவு" என்றேன். அது கேட்ட மாணவர் "சபாஷ்! நவநீதம்" என்றார்கள்; ஆசிரியர் என் கன்னத்தைத் தடவிக்கொடுத்தார். "நீயொரு பெரும் புலவனாக வாழ்வாய்" என்று ஆசீர்வதித்தார்; யானும் ஆசி பெற்றவனாதலால் மிகுந்த மகிழ்ச்சி கொண்டேன்.

அதன் உரை விளக்கம் :—

தமிழ் என்பது இலக்கணம். அஃது இயல், இசை, நாடகம் என மூவகைப் படும். இசைத்தமிழ், இசைப்பகுதிகளின் இலக்கணம்; நாடகத்தமிழ், நாடகப் பகுதிகளின் இலக்கணம்; இயற்றமிழ், இசை நாடகப் பகுதிகளை மேற்கொள்ளாதவற்றின் இலக்கணம். எழுத்துச் சொற்பொருளோடு, பண், தாளம், அபிநயம், ஆட்டம் முதலியவற்றை உணர்த்தும் இசை, நாடகத்தமிழ் நடத்தலை நோக்கி அவற்றை மேற்கொள்ளாத தமிழ் இயற்றமிழ் எனப்பட்டது. முத்தமிழால் என்றது, மூன்றுவகை இலக்கணங்களை ஆதாரமாகக்கொண்டு எனவும்; வைதவர்கள் என்றது, வெறியாட்டிடத்தே நீ மடவோனை வையென வைதவரை எனவும் உரை பெறும். தலைமகளின் நோய் நீங்க வெறியாட்டயரும்போது, அவ் வெறியாட்டிடத்தே தோழி கூற்றாக முருகனை இகழ்வது இலக்கணமாயிற்று. அதனைக் "களம் பெறக்காட்டினும்" (தொல். கள. 23) என்னும் சூத்திரப்பகுதியால் அறிக. முத்தமிழால் வைதற்கு இடங்கொடுத்தவர், இலக்கியப் புலவரும், அவ் விலக்கியம் கண்டு இலக்கணம் வகுத்த இலக்கணப் புலவரும், அத் துறைக்குக் கூற்றாகநின்ற தோழியும், அக் கூற்றுக்கு இலக்காக நின்ற தலைவியும் தலைவனும் ஆவர். இவரெல்லாம் தலைமக்கள் இருவரையும் இல்லற நெறியிற் பொருத்துமாறே அம் முருகனை வைதார். அவர்கள் வைதவையும் நல்லனவின் பாற்பட்டுப் புகழ்ந்துரைத்தனவேயாகும். இங்ஙனம் புகழ்ந்துரைத்தலாகும் என்பது தோன்ற அங்கு வைதாரையும் எனப்பட்டது.

பண்டைய நூல்களிலும் கம்பராமாயணம், வில்லி பாரதம் முதலிய நூல்களிலும் இங்ஙனமே கண்டனவற்றை யெல்லாம் கால மிடந்தரின், திருவருளை முன்னிட்டு வகைப் படுத்திக் கூறும் நோக்கமுடையேன்.

35098

# பண்டைத் தமிழரும் சிவனும்

புலோலி, வித்துவான். க. முருகேசபிள்ளை

தமிழகத்தில் பண்டுதொட்டுச் சிவன் பூசிக்கப்பட்டவரா? அன்றி வட நாட்டிலிருந்து ஆரியரால் கொண்டுவந்து நாட்டப்பட்டவரா? என்னும் பல வினைக்கள் இன்று நிலைபெறக் காண்கின்றோம். சிவன் என்னும் தெய்வம் பண்டைத் தமிழ் நாட்டில் தோன்றிப் பண்டு தொட்டு தமிழரால் வணங்கப் பெறும் தெய்வங்களுள் தலைசிறந்த தெய்வமாகவே கொள்ளக் காண்கின்றோம். தமிழ் மக்கள் குமரி எல்லைக்கு வெகு தெற்கேயுள்ளதும் இன்று கடல் கொள்ளப்பட்டதுமான லெமூரியாக் கண்ட முதல் கங்கை சிந்து நதிகள் பாயும் பிரதேசங்களுக்கு அப்பாலும் பரவி இருந்தனர். பல ஊழிகள் கலந்த பின்பு வட வேங்கடந் தென் குமரி இடை வரை அடங்கிக் குடியேறுதற்கு முன்பு தமிழர் சிந்து, கங்கைக் கரையோரங்களில் இருந்தனர் என்பதற்குப் பல ஆதாரங்களுண்டு. தமிழருக்குள்ளே வேளாளர் என்னுஞ் சாதியார் தம்மைக் கங்கா குலத்தவர் என்று கூறுவர். கன்னட தேச வேளாளர் தம்மைக் கவுடரென்றும் கொங்கு தேச வேளாளர் தம்மைக் கவுண்டரென்றும் வழங்குவது இவர் கங்கைக் கரையினின்றும் கவுட தேசத்திலிருந்தும் வந்தவரென்பதற்குச் சாட்சி பகரும். மைசூர்ப் பிரதேசத்தை வேளாளர் படையெடுத்து அதனைக் கைக்கொண்டு கங்கை வாடி என்று பெயர் வழங்கினர். அந் நாட்டதிபனும் தன்னைக் கங்கா வம்சமென்றும் பெல்லால மன்னரென்றும் வழங்கியதைப்பண்டைக்காலப்பட்டையங்களிலும் கல்வெட்டுக்களிலும் காணலாம். தமிழர் ஆரியர் வருகையால் பண்டைத் தமிழ் மக்கள் கங்கைப் பிரதேசத்தை விட்டு தென் திசை நோக்க (வங்காளத்துக்கு வடக்கே நேபாளத்துக்குக் கிழக்கே) திமில் என்னும் சாதியார் மிகுதியும் வசிக்கின்றார்கள். அவர்கள் தமிழரின் தொடர்புடையவர்களே. இத் திமில சாதியாரின்பாஷையாகிய திமில் தமிழ் மொழியைப் பெரிது |மொத்திருக்கிறது. கங்கைக் கரையில் தமிழுக்கென்று ஒரு துறைமுகமின்று மிருக்கிறது.

சிவன் செஞ்சடையமைந்த ஒரு சிவந்த உருவமைந்த தோற்றமுடையவராகக் காணப்படுகிறார். அவர் முக்கண்ணுடையவர். புலித்தோலணிந்து போருக்குரிய மழுப்படை தரித்து ஒரு எருதின் மேலூர்ந்து வருவார். இவருடைய வாசத்தானம் கைலையங்கிரி. இக் கைலை கங்கை சிந்து பிரமபுத்திரா நதிகள் உற்பத்தியாகும் தானத்துக்கு அண்மையில் இமையமலையின் வட பாகத்திலுள்ளது. சிவன் மலையரசன் மகளாகிய பார்வதியை மணந்தவர். தமிழர் வளர்ந்த நாடே சிவ வழிபாடுகட்கு இடம் பெற்றிருந்தது. தமிழர் ஆதி தொட்டு வாழ்ந்திருந்த நாடுகளுள்ளும் தென்னிந்தியாவே சிவன் சம்பந்தமான சைவ வழிபாட்டுக்குத் தலைமைத் தானமாக இருந்தது. உண்மையான சிவன் ஆதியில் ஒரு சுத்த திராவிட தெய்வமென்றே சொல்லப்படுகின்றார். இதிகாச சின்ன காலங்களின் முன்புள்ள ஓர் ஊழியிலேயும் தமிழர்களுடைய சுய சமயம் சைவசமயமே. அவர்கள் கடவுள் சிவனே. தத்துவ சாஸ்திரத்திலே சிவன் பிரபஞ்சத் தோற்றத்துக்கும் ஒடுக்கத்துக்கும் காரணர். அவரின் பழைய பெயர்களுள் பசுபதி என்னும் பெயரும் ஒன்று. சிவனின் உருத்திர சம்பந்தம் வெளிப்படை.

சிவபெருமான் வட இந்தியாவிலோ அதற்கப்பாலோ நின்று வந்தவரென்றதும் சில அறிஞர்களுடைய சூழ்ச்சமான ஊகங்களேயொழிய அசைவின்றித் தாபிக்கப்பட்ட உண்மைகளல்ல. ஆயின் ஒரு வகைச் சிவ வழிபாடு பண்டு தொட்டுத் தமிழகத்திற் பயின்றுவரப்பட்டது

என்பதிலோ மயக்கமின்று. சிந்து நதிப் பள்ளத்தாக்கிலுள்ள மொகெஞ்சதாரோ அறப்பா எனனும் இரு இடங்களிலும் சமீப காலத்தில் அகழ்ந்து காணப்பட்டுள்ள பழைய நகரங்கள் கி. மு. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவைகளாய்ப் பழைமை வாய்ந்தவைகளென ஆராய்ந்தறியப்பட்டிருக்கிறது. இப் பழைய தலை நகரங்களில் கண்டெடுக்கப்பட்டவான நூற்றுக்கணக்கமைந்த சித்திரங்களையும் சிலைகளையும் ஆதாரமாகக் கொண்டு இப்போது நாமறியக் கூடியதாக இருக்கிறபடி இற்றைக்கு ஐயாயிரமாண்டுகளுக்கு முன்னே அஃதாவது ஆரியர் வட இந்தியாவைச் சேருதற்கு ஆயிரம் வருடங்களுக்கு முன்னாதல் சிவனின் குணங் குறிகளமைந்த ஒரு தெய்வ ரூபம் மட்டுமன்று அதற்கு மேற்பட்ட தத்துவமுள்ள பெண் தெய்வமும் பல மிருக மரத் தெய்வங்களும் யோனி லிங்கங்களும் தமிழரை மிக ஒத்த பண்டைத் தமிழ்ச் சாதியாரால் பூசிக்கப்பட்டு வந்தன. ஆதலின் சிவனது அம்சம் தமிழ் அம்சமே. சிவனது தமிழ் அம்சம் தமிழ்ப் பழங்குடிகளுள் ஆதிதொட்டு இருந்துவந்த தெய்வத்தினின்று யாவராலும் கிரகிக்கப்பட்டுள்ளதென்பதில் ஒரு சிறிதும் மயக்கமின்று. சிவனுக்குக் கொடுத்தோதப்படுங் குணங்களுள் ஒன்றாகிய கூத்தாடல் பண்டைத் தமிழ்க்குடிகளுள் சிறந்த இலக்கணமாயிருந்தமையும் ஈண்டு கவனித்து நினைவில் வைக்கத்தக்கது.

சிவன் என்னும்பெயர் பூர்வவடமொழி வேதங்களிற் காணப்படவில்லை என்பது யாவரும் அறிந்த விஷயம். சிவனிடத்துப் பிற தெய்வங்களின் குணங்கள் பலவற்றைப் பிற்காலத்தில் ஏற்றிச் சொல்லுவாராயினர். சிவபெருமான் இயற்கையில் சாந்த மூர்த்தியே. சிவனைச் சில சந்தர்ப்பங்களில் கோபமுடையவராகவும் கூறியுள்ளார்கள். தமிழ்ச் சுய ரூபத்தை மேலும் நன்றாய்த் தெரிந்து கொள்ளுதற்கு ஆதாரமாக ஆரியர் தமிழ்த் தெய்வத்தினிடத்து ஏற்றிக் கூறிய அக்கினி அம்சம் ஆதியனவற்றை நாம் உற்று நோக்குவோமாக. பிற்காலத்துச் சிவன் அக்கினியோடு ஒற்றுமைப்படுத்திப் பேசப்பட்டிருக்கின்றமை எவரும் அறிவர். சிவனுக்குரிய சிறந்த நாமம் அரன் என்பது. இது பற்றிப்பிடிப்பது எரித்தழிப்பது என்னும் பொருளுள்ளதாய் வேதத்தில் அக்கினி தேவனின் நாமமாயுள்ள ஒரு குறியீடு. ஆதலினாற்றான் சிவனுக்கு “எரியலாலுருவமில்லை” எனத் தமிழ்ச் சுருதிகளும் கூறிப் போந்தன. “தீமேனியான்” “அனலேந்திக்காடுறைவார்” “காடெரியாடுவோன்” “ஆரழல்போற்செய்யர்” “காடுடைய சுடலைப் பொடிபூசி” ஆதிய சமய குரவர் கூற்றுக்களையும், சிவன் அக்கினிப் பிழம்பாய் நின்று தமது முதன்மையை நாட்டிய வரலாற்றையும் ஒப்பு நோக்குக. அக்கினி மூன்றிடத்தது மூவகைப்பட்டது என்னும் வேதக் கொள்கையை ஒட்டி சிவனும் இவ்வுலக அக்கினி சூரியன் சந்திரன் ஆகிய இம் மூன்றோடும் ஒற்றுமைப்படுத்திப் பேசப்பட்டுள்ளார். அவரது திரிநேத்திரங்கள் முத்தீயே யென்பர். முக்கண்ணுள் ஒன்றாகிய சூரியனோடும் தனியேயும் சிவன் ஒற்றுமையாக்கப்பட்டுள்ளார்.

சிவனை விடையூர்தியாக நூல்கள் பெரும்பான்மை கூறினும் சிறுபான்மை குதிரை வீரனாகவும் காட்டும் மதுரைத் திருவிளையாடல் நரிபரியாக்கிய படலங் காண்க. திருவாசகத்தினுள்ளே சிவனது ஊர்தி வான்புரவியாமெனச் சொல்லியதும் இதையே போலும். வான்புரவியுடைமை சிவன் அக்கினியொடு சம்பந்தம் பூண்டமையால் எழுந்த ஒரு விசேடணமாம். அக்கினி தேவதை வேதத்தில்—“ரோகிதாச்சுவ” செங்குதிரையையுடையது என்று சொல்லப்படும் அக்கினியோடு சம்பந்தமுடைமையால் சிவனும் குதிரையூர்தியாக எண்ணப்பட்டார்.

ஆதிச் சிவன் தென் தமிழ் நாட்டுத் தெய்வமென்பதனை அவருக்குள்ள தெட்சணா மூர்த்தி என்னும் நாமங் காட்டுகின்றதெனலாம். ஆதிச் சிவனின் சுயவடிவமோ எளிதிற் பிரித்தறியக்கூடியதன்று. சர்ப்ப வழிபாட்டோடு கூடிய நெருங்கியு

சம்பந்தம் அவருக்குண்டென்பது குறிக்கப்பட்டது. மாணிக்கவாசகர் காலத்திலும் அவர் "புயங்கன்" "புயங்கப் பெருமான்." எனும் பெயரால் அதி உருக்கமாக அழைக்கப்பட்டார். இந்நாமம் சர்ப்பாபரணரென்பதனல் ஏற்பட்டு மிருக்கலாம் என எண்ண இடமுண்டு.

ஆதிகாலத்துச் சிவவழிபாடு அவரது சாந்தரூபத்துக்கொப்பச்சாந்தமான உறுப்புக்களோடுதான் கூடியிருந்தது. செடிற் குத்தியாடல் நிலத்தில் வீழ்ந்து புரளுதல் ஆதியன இன்று சிவன் வழிபாட்டோடு கூடியதாகக் காணப்படுகின்றது. கிருஷ்ண வழிபாட்டோடு கூடிய சிலகாமாதுரம் முதலியவைகள் ஆதிச் சிவன் வழிபாட்டோடு கூடியனவாகத் தெரியவில்லை. உபவாசம் முதலிய சரீர வதையோடு கூடிய செயலே மெய்யான பக்தி யென்ற எண்ணம் பொதுவாக இன்றும் நிலைபெற்றதாக இருக்கிறது. தற்காலத்துள்ள அறிவாளிகளும் உண்மைச் சிவபக்தியானது ஆடுதல், பாடுதல், நாத்தழுதழுத்தல், மயிர்க்கூச்தெறிதல், பித்தர் பிசாசம்பிடித்தவரை ஒத்திருத்தல் ஆதியாங் குணங்களில் விளங்குமென்ற கருத்துடையராக ஆண்டாண்டுக் காணக் கிடக்கின்றனர்.

இக்காலம் சிறப்பாக மேலைத்தேச நாகரீக முடையவர்களிடத்தில் சிவனைப் பற்றிய சிறந்த மன எண்ணமானது முழு முதலிறைவனன உண்மைக் கடவுளுக் குரிய இலக்கணங்கள் அமைந்ததாகவே விளங்குகின்றது. சிவன் என்னும் நாமம் ஏகமான பரம்பொருளின் மறுநாமமாகவே விளங்கப்கிடுகின்றது. சித்தாந்த சாத்திரங்களிற் கூறப்படும் சிவரூப இலக்கணம் ஏகான்மவாதிகளாகிய பிற இந்திய சமயத்தவர் கூறும் கடவுளர்களுக்கெல்லாம் மேற்பட்ட தெய்வமென்பதில் ஒரு சிறிதும் ஐயமின்று.

பண்டைத்தமிழர் தமிழ் நாட்டில் வணங்கிய தமிழ்ச்சிவன் ஆதியில் தமிழ் நாட்டுக்குவந்த ஆரியருக்கு முற்றும் உவப்பில்லாதவராய் இருந்தாரென்று தோற்றமாகிறது. பிராமணர் சிவனிடத்தில் எவ்வளவு அவமதிப்புடையவராக இருந்தனர் என்பது அவர்கள் இன்றைக்கும் சிவ நின்மாலியத்தை உண்ணுது விடுவதனல் விளங்கும். பிராமணர் இதற்குச் சொல்லும் நியாயம் என்னவெனில் சிவன் பிரமஹத்தி தோஷம் உள்ளவரென்பதாம். இதனல் சிவன் ஆரியர் கொள்கைக்கு மாருன வேருெரு சமயத் தெய்வமாக இருந்தவர் என்பதும் அர்த்தமாகக் கூடும். சிவன் ஈற்றில் ஆரியருடைய எதிர்வாதங்களை வென்று ஆரியருள்ளும் ஒரு தெய்வமாக ஏற்கப்பட்டதையே தக்கன் வேள்வியின் சரிதங் காட்டுகின்றது என்பர் மேலைத்தேச நிபுணர். தாருகாவனத்துக் கதையும் பண்டைக் காலத்தில் தென்னுட்டில் வாழ்ந்த பண்டைத் தமிழ்ச் சைவமக்களுக்கும் வேதாந்த சமயத்தவரான ஆரியருக்கு மிடையில் நடந்த சமய வாதத்தையே குறிப்பாகக் காட்டுகின்றதென்பர் போப் முதலாம் ஆசிரியர்கள்.

சிலர் சிவன் உற்பத்தியை இமய மலைக்கும் அப்பால் வெகு தூரத்தில் வைக்கின்றனர். சிவன் துரானியரின் தெய்வங்களுள் ஒன்ருயிருந்து பின்பு தமிழ்த் தெய்வமும் ஆயினர். இக் கொள்கையாளர் தமிழர் துரானியரோடு கலந்துகொண்டபின்தான் இச் சிவ வழிபாடு தென்னுட்டில் தலைப்பட்டதென்பர். வேறுசிலர் தமிழர் ஆதிநாகரீகராகிய அக்கந்தியர், கல்தேயர் இனத்தவரென்று கூறுவர். தமிழரை அக்கந்தியர் முதலியோரோடு ஒற்றுமைப் படுத்துதற்குப் பாஷை இனம் ஆதியவற்ருேடு வேறு சில ஏதுக்களும் காட்டப்படுகின்றன. ஆரியர் தென்னுட்டுக்கு வருமுன்னமே தமிழர் வானசாஸ்திரப் பயிற்சி பெற்றிருந்தவராகக் காணப்படுகின்றது. பண்டைத் தமிழ் நூல்களில் வழங்கியிருக்கிற தமிழ் இராசிப் பெயர்கள் நாண்மீன் பெயர்கள் என்பனவற்ருல் தெளிவாக விளக்கமாகின்றது. வான சாத்திரத்தில் தமிழர் எத்துணைத் திறமையுடையவரோ அதேபோல அசீரிய கல்தேய நாடுகளிலுள்ளவரும் வானசாத்திரத்தில் திறமையுடையவராகவிருந்தனர். இவ் வானசாத்

திரத் தொடர்பைக் கொண்டு தமிழருக்கும் அசீரியருக்கும் கல்தேயருக்கும் இன மூண்டென்றும் கொள்ள இடமுண்டு. ஆதி தொட்டு இந்தியாவில் மரக்கலப் பயிற்சி யுடையவர்களாக இருந்தவர்கள் பண்டைத் தமிழ் மக்களே. சங்க இலக்கியங்களிலும் "பெருநீரோச்சுனர்" என்று கூறப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. இக் காரணங் கொண்டு அவர் பாரசீகக் குடாக்கடலையடுத்த பிரசித்திபெற்ற கடலோடிகளின் இனத்தவராக உள்ளவரென்றுங் கூறுப. இவ் வெடுத்துக்காட்டை எடுத்தாளுவோர் அசீரிய கல்தேய நாட்டிலிருந்தே தமிழர் கடலைத்தாண்டித் தென்னிந்தியாவில் வந்திறங்கினவரென வுங் கொள்வர்.

தென்னிந்தியாவிலே பல இடங்களில் சிறப்பமைந்த பழஞ் சமாதி வகைகள் உண்டு. இதேபோல வமைந்த சமாதிவடிவங்கள் பண்டை நாளில், இத்தாலி பிரித்தானியா வாதியாமிடங்களிலிருந்தன. அக்கந்தியரோடு பண்டைத் தமிழரை ஒற்றுமைப் படுத்துவதற்கு ஆன்றோர் பலமான இவ் வேதுவை எடுத்துக்காட்டுவர். கூறிய சமாதி வகைகளை ஐரோப்பிய மொழியில் மெனீர் (Menhirs) பரோ (Barrows) கிஸ்துகள் (Cists) டோல்மென் (Dolmens) குரோமிலெக் (Cromlechs) எனப் பெயர் கூறப்படும். இவ் வைந்தனுள் முதலாவதாகவுள்ள மெனீரென்பது—பிரதேசஞ் சேமித்த இடத்தில் நாட்டும் ஒரு நெடுங்கல். பிற்பட்ட காலத்தில் இது தமிழ் மக்களுள் வீரக்கல் என்றும் நடுகல் என்றும் வழங்குகின்றது. இரண்டாவதான பரோவென்பது—சமாதியின்மேல் மண் குவித்துச் செய்யப்படும் ஒரு மேடு. மூன்றாவதான கிஸ்து என்பது நாற்புறமும் அறைபோற் கற்களை நிறுத்தி மேற்றளத்திலும் ஒரு பெருங் கற் கவிழ்த்துச் செய்யப்படுவது. பிரேதக் குழிகட்குக் கல்லறையென்னும் பெயர் இக் கிஸ்து என்பதிலிருந்து வந்தது போலும். நான்காவதான டோல்மென் என்பது பல நடு கற்கள் மேல் ஓர் பலகைக் கல் வைத்து மேசைபோல் இணைக்கப்பட்டிருப்பது. ஐந்தாவதான குரோமிலெக் என்பது டோல்மென் போன்ற கற் கட்டிடத்தைச் சூழ விருத்தாகாரமாகவேனும் அண்டாகாரமாகவேனும் சதுரமாகவேனும் வேலி போற் பல கற்களை நாட்டப்பட்டிருப்பது. அக்கற்றெகுதி பண்டைச் சரித்திர ஆராய்ச்சி வல்லோர் துணிவின்படி இவ் வாறான சமாதிக் கற்களை நாட்டும் வழக்கமுடையோர் அக்கந்திய வகுப்பைச் சேர்ந்த புராதன மக்களாகிய கெல்ற் சாதியாரேயாம். ஆகவே, இதனல் இத்தாலி முதலிய பூர்வக் குடிகளும் ஆதித் தமிழரும் ஒரு வகுப்பாரென்று ஒருவாறு பெறலாம். பெறவே அக்கந்தியருடைய மலைத் தெய்வங்களே தமிழருடைய சோமசுந்தர சிவனும் முருகவேளும் என வந்தன வென்று ஊகிப்பவருமுண்டு.

இத் தோடமையாது வேறு சிலர் சிவன் மங்கோலிய உற்பத்தி உடையவரென்றும், சீனரும் தமிழரும் ஒரு குடும்பத்தவரெனறும் பல ஒற்றுமைகளைக் காட்டி வலியுறுத்துவர்.

ஆகவே, பண்டைத் தமிழ் மக்கள் வணங்கிவந்த சாந்த மூர்த்தியாகிய சிவனின் தன்மைகள் எல்லாத் தேயத்தவாலும் வேறு வேறு பெயரோடு கைக்கொள்ளப்பட்டனவென்பது புலனகும். ஆதி நாகரீகம் பெற்ற நாடுகளில் இந்தியா முதன்மையுடையது. சமயக் கொள்கைகளில் இந்தியா தேசம் எல்லாத் தேயங்களையும்விட முதன்மைவாய்ந்தது. சமயங்கள் ஆன்மாத்தீகக் கொள்கைகள் என்பன இந்தியாவிலிருந்தே எத் தேயத்துக்கும் பரவியன. சிவபெருமானின் பூரண அம்சங்களின் ஒவ்வொரு பகுதியே மற்றையோரால் வணங்கப்படுவது. "யாதொரு தெய்வங் கண்டாய் அத் தெய்வமாகியங்கே மாதொரு பாகனர்தாம் வருவார்" என்பது சுருதி. சிவபெருமானே "பிறவா யாக்கைப் பெரியோன்" என்று புகழப்பட்டிருக்கிறர். ஆரியர் இந்தியாவில் காலெடுத்து வைக்குமுன்னமே பண்டைத் தமிழர் சிவ வழிபாடுடையவராய் சிவபெருமானைத் தம் குல தெய்வமாகக் கொண்டாடி வந்தனர். அச்சிவனருள் எங்கும் பொலிவதாக.

# 'கூவுமினிய கோழி'

"முருகு"

கோழிகள் காலையிற் கூவுகின்றன. கூவுகின்ற கோழி எனவே அது சேவலாகத்தான் இருத்தல் வேண்டும். சேவல் தனது சிறகர்களை மோதிக் கொண்டே கூவுகின்றது. சிறகர்கள் அதன் கைகளே. ஆதலின் கை தட்டிக் கூவுகின்றன என்னலாம். அவைகள் கீழ்த்திசை வெளிறல் கண்டே கூவுகின்றன. அது சூரியனை வா என்று அழைப்பதுபோலவே தோன்றும். ஆன்றோர் ஒருவர் "வாவு பரித்தேரேறி வாவென்றழைப்பனபோல், கூவினவே கோழிக் குலம்" என்றனர். கோழிகளின் வரவேற்போடு சூரியன் வருகின்றான். வரவேற்புக்குக் கோழிகள் மாத்திர முரியன வல்ல. எத்தனையோ பிற பிராணிகளும் தத்தம் இன்னிசையிட்டு அழைக்கின்றன. அவ்விசைகளைக் கேட்டான்போல ஆதவனும் உதயம் செய்வான். எல்லா ஓசைகளிலும் சேவல்களின் ஓசை விடியற் காலையில் வீடுகளில் இன்பம் பயக்கின்றன. வைகறை யாமத் துயிலெழுதல் கோழிகளின் இயற்கை. மாந்தரை நேரங்காட்டித் துயில் எழுப்புதலும் அவற்றின் நற்குணங்களுளொன்று. இன்னிசை உதவித் துயில் உணர்த்துகின்றன. ஆழ்ந்த நித்திரையில் அமிழ்ந்தி அதே பக்கத்துத் துயில்கொள்வோரை எழும்பி மறு பக்கத்துத் திரும்பிப் படுக்கவும் வைக்கின்றன. ஆவணி புரட்டாதி மாதங்களில் இவற்றின் ஓசை இல்லங்களில் மிக் கொலித்தலைக் காணலாம். ஐப்பசி பிறந்துவிட்டாலோ—ஓசையும் அற்றுவிடுகின்றன. எத்தனையோ இனிய சேவல்கள் ஒரே நாளிலேயே—தீபாவலியிலேயே—இறந்து படுகின்றன.

கூவும் சமயங்களில் அவைகள் ஒன்றன்பின்னென்றாயும் ஒருமித்தும் கூவுகின்றன. இறக்கும்போதும் (பெரும்பாலும்) ஒரேநாளில் இறந்துவிடுகின்றன. இறக்கும் போதும் தம்மை வளர்த்தோரின்—மனிதரின்—மனதை மகிழ்விப்பதற்காகவே இறந்துபடுகின்றன. வளர்த்த மனிதர்களும் அதன் கணுள்ள பேரன்பால் தம் வயிற்றுகளினுள்ளே அடைத்து வைக்கின்றார்கள். இரண்டறக் கலக்கச் செய்துவிடுகிறார்கள் எனினும் பொருந்தும். மண்ணிற் கிடந்து மடியவிட அவர்கள் மனம் பொறுப்பரோ! அத்துணைப் பேரன்பு!! அஃது மனிதர் செய்யவேண்டிய பேருதவியன்றோ!!!

சேவல்களின் அங்கங்களின் அழகிய தோற்றத்தையும் மறந்துவிடுகின்றார்களே! பன்னிறங் கலந்த இறகுகள் பளபளவென இலங்கும். செம்முகம் சிறந்து வெற்றிவாள் வசித்து நிற்கும். கீழே நீண்டு தொங்கும் அதரங்கள் அழகிற் கழகு செய்யும்.

வாய் வீரத்துவம் கொண்டு போர்ச் சூரத்துவமற்ற பயங்கொள்ளிகளுக்கெல்லாம் சேவல்கள் புத்திபுகட்டும் போர்கள் செய்யத்தக்கன. இறப்பினும் பின்னிடாது நின்று எதிரேற்று இறந்து வீர சுவர்க்கமடையத்தக்க மானமே பொருளாகக் கொண்டுள்ளன. தங் கால்களையும் எதிரிகளைத் தாக்கும் படைகளாகக்கொள்ளுகின்றன. வளர்க்கும் நம்போன்ற மனிதர்களோ பயனற்ற பயங்கொள்ளிகள். இவர்களைத்தான் அச் சேவல்கள் கைகொட்டிக் கூவிப் பரிகசிக்கின்றன போலும்!

நந் தமிழர்களுக்கு ஆண்மை, வீரம், அழகு, ஒழுக்கம், புறங்கொடாமை, வைகறைத் துயிலெழல் ஆதிய நற்குணங்களைக் கற்பிக்கின்றன.

பல்லாண்டுகள் வளர்ந்து மாந்தர்க்கு நல்வழி காட்டத்தக்கன. ஓராண்டு ஈராண்டுகளில் எமலோகத்தை அடைந்து விடுகின்றன.

ஆண்மையும் வீரமும் உள்ள சேவல்களைக் கொன்றருந்தும் தமிழுலகம் ஆண்மையும் வீரமும் அற்று அழிந்து அன்னியரால் ஆளப்படுகின்றது. ஆண் கோழிகளையும் ஆடு முதலியவற்றையும் அழித்தருந்தும் இவ்வுலகத்தில் இன்று ஆண்மக்கள் தம்மாண்மை இழந்து பெண்மையின்பாற்படுகின்றனர் என்பது கண்கூடு.

"ஆண்மை வீர மற்றுவாழ மாரியத் தமிழர்காள்
ஆண்மை வீர மற்றுவாழ ஆனவா றறிதிரோ?
ஆண்மை வீர முற்றுவாடு கோழி கொன்றருந்தினீர்
ஆண்மை வீர முற்றுவாடி டாதவா றறிவிரே."

"காவலநேர நுமை யெழுப்பு கருத்தி னின்று
பாடுவோம்
சாலவே புறங்கோடாத தன்மை காட்டும்
வாழ்வுளோம்
சிலமாடு வீரமாண்மை அழகுவெற்றி சேர்ந்துளோம்
ஏலவே வதைக்க யாஞ்செய் தகவிலாமை
யென்கொலோ?"

என்று ஒரு கோழி அன்று பாடி முடித்தது.

---

## நினைவு

உள்ளமே மலர்ந்த தின்றெம்
உணர்ச்சிகள் மலர்ந்த வையத்
தெள்ளமு தனைய கன்னித்
தண்டமிழ் மலர்ச்சி பெற்றுள்
கள்ளமில் கல்வி வீரம்
கருமத்தில் அயரா வின்பம்
உள்ளன விங்கே சொர்க்கம்
மறுபடி மலரச் செய்வோம்.

# அப்படியிருந்தது அந்தக் காலம்!

—( பவன் )—

மத்தியானச் சாப்பாடு முடிந்த பின்பு எல்லோரும் சற்றே களைப்பாறிக் கொண்டிருக்கும் வேளை. ஒருவருக்காவது அவசியமான வேலை ஒன்றுமேயில்லை. தாழ்வாரத்திலே நிழலும் காற்றோட்டமுமுள்ள இடத்திலே வசதியாகக் காலையும் நீட்டிக்கொண்டு பெட்டியிழைத்துக்கொண்டிருந்தாள் பார்வதிக் கிழவி. தாயம் விளையாடிக்கொண்டிருந்தார்கள் பேரப் பிள்ளைகள். திண்ணையிலே கிடந்த வண்ணம் வாரப் பத்திரிகை யொன்றைப் பார்த்துக்கொண்டிருந்தார் முருகர்.' அவ் வேளையிலே "பத்திரிகை என்ன சொல்லுகுது?" என்று கேட்டுக்கொண்டே திண்ணையில் வந்து உட்கார்ந்தார் அடுத்த வீட்டுக் கந்தர்.

"ஏதாவதொன்றைச் சாட்டாக வைத்துக்கொண்டு ஒவ்வொரு மந்திரியும் ஊர் சுற்றித் திரியத் தொடங்கியாச்சுது. அப்பனே, ஊர் படுகிற பாட்டை என்னென்று சொல்லுகிறது" என்று பெருமூச் செறிந்தார் முருகர்.

"பிறந்தால் அவர்களைப் போலக் கொடுத்துவைத்துப் பிறக்கவேணும் கண்டரோ! பாருங்கோ, வேறொன்றுமில்லை; பாலைப் பழம்போல மாதச் சம்பளம் ஆயிரம் ரூபா. அங்கு மிங்கும் ஓடி யாடிக் களிக்கக் கோறணமேந்து செலவு கொடுக்குது. போற வாற இடமெல்லாம் மேள தாள மென்ன, மாலை செண்டென்ன, விருந்துச் சாப்பாடென்ன, அற்ப தயவின்பொருட்டு மானமின்றிப் பல்லைக் காட்டித் தெளெழுகப் பேசுவதற்குப் போட்டியிடும் கோட்டிகளின் குதூகலமென்ன, இடத்துக்கும் சமயத்துக்கும் தகுந்தபடி அந்த மந்திரிமாரிறுக்கும் பதிலுரைதானென்ன—ஐயோ, இதையெல்லாம் நினைக்கிறபொழுது அழவோ, சிரிக்கவோ? இந்த அதிகார வெறியைத்தானே 'தேச ஊழியம்' என்பது?" என்றார் கந்தர்.

அதற்கு முருகர், "என்ன செய்கிறது. காலமெல்லாம் மாறிப்போச்சுது. ஊரைக் குட்டிச்சுவராக்குகிறதற்காக எத்தனை வழிவகையெல்லாம் பிறக்கும். இன்ன இடத்துக்கு இத்தனையாந் திகதி போகிறதாம் என்று எத்தனையோ மாதத்துக்கு முந்தியே பிளான் வெளியாகிவிடும். ஏற்படுகிற தடைகளைச் சமாளிக்கிறதற்காக நேரத்தோடு எத்தனையோ பேர் தூது பேச வெளிக்கிடுவார்கள். அவர்களும் இலேசான ஆட்களல்ல. அடிபட்டாலும் உதைபட்டாலும் நாய்போல நன்றிமறவாத பிறவிகள். பெரும் பெரும் பதவியிலுள்ளவர்கள்தான். ஆனால், பாவம், அவர்கள் இப்படித் தாளம் போடாவிட்டால், "இந்தா விபீஷணா, இலங்கா ராஜ்யம்" என்று அவர்களுக்கு அந்தப் பதவி கொடுத்ததெல்லாம் வீணாகிவிடுமல்லவா!" என்று கெக்கமிட்டுச் சிரித்தார்.

அப்போது இவையெல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த பார்வதி, "இந்த மந்திரிமாருடைய ஊதாரித்தனமும் இடம்பமும் வெளிப்பகட்டுமான ஊர் விசாரணைகளையோ பிரயாணங்களையோ நினைக்கிறபொழுது, முந்தின காலத்திலே இங்கிருந்த வெள்ளைக்கார ஏசண்டுத் துரைமாரையெல்லாம் நாங்கள் தெய்வமென்று கும்பிட்டாலும் போதாது" என்றொரு வார்த்தை இடையே சொன்னாள்,

"ஓமோம். டைக் துரை, துவைனக் துரை, கோஷ்பரூத் துரை, பிறீமன் துரை—இப்படிப்பட்ட துரைமார் மூச்சுப் பேச்சில்லாமல், இரண்டாம் பேருக்குப் பறையடிச்சுப் பிரசித்தம் பண்ணுமல், எங்களுக்குச் செய்த நன்மைகளையும், அவர்கள் வாழ்ந்த தூய வாழ்க்கையை யும் என்றைக்காவது நாங்கள் மறக்கமுடியுமா?" என்ருர் கந்தர்.

அதற்கு, டைக் துரையென்று சொல்லுகிறபோது, அந்தப் புண்ணியவானுடைய காலத்திலே ஊர் எவ்வளவு செழிப்பாயும், சனங்கள் எவ்வளவு சந்தோஷமாயும் நீண்ட ஆயுள் உள்ளவர்களாயும் இருந்ததாம் என்றதைக் காட்ட எங்கள் அப்பர் எத்தனையோ கதையெல்லாம் சொல்லுவார்" என்று முருகர் சொல்ல, விளையாடிக்கொண்டிருந்த பிள்ளைகள் விளையாட்டை அவ்வளவில் நிறுத்திவிட்டு, "அப்பா! எங்களுக்கும் அந்தக் கதையிலொன்று சொல்லுங்கோ. கேட்க ஆசையாயிருக்குது" என்று கெஞ்சிக்கொண்டு அவரைச் சுற்றி வளைத்துக்கொண்டார்கள். அப்போது அவர் தொண்டையைச் செருமிச் சரிப்படுத்திக்கொண்டு பின்வருமாறு சொல்லலானுர் :—

"காலை எட்டரை மணியிருக்கும். உயரமான மண் வீதி. எங்கே பார்த்தாலும் ஜீவ களை ததும்பிக்கொண்டிருக்கிறது. சில வயல்களிலே உழவர் ஏரிற் பூட்டின எருதுகளை, 'சக்! ஹைக்!' என்று அதட்டி ஓட்டி உழுதுகொண்டிருக்கின்றனர். சில வயல்களிலே பள்ளர் வார்த்தையாடிக்கொண்டே நிரையாக நின்று மண்வெட்டியினுற் கொத்துகின்றனர். நெஞ்சளவிலே சேலையைக் குறுக்காகக் கட்டிக்கொண்டு தலையிலுள்ள மீன் சுமையைப் பிடிக்காமற் கைகளை வீசிக்கொண்டு அம் மணல் வீதி வழியே விரைந்து ஓட்டமும் நடையுமாகச் செல்லும் கரையாரப் பெண்கள் பேசுகிற ஊர்ப் புதினமும் காதில் விழுந்துகொண்டிருக்கிறது. அவர்களுடைய தலைச் சுமையிலுள்ள மீன்களைக் காகங்கள் பறந்து பறந்து கொத்திப் பார்க்கின்றன. மேலே பருந்துகள் வட்டமிட்டுப் பறந்து திரிகின்றன. வரம்புகளிலே உழவருக்குக் கொண்டுவந்து வைத்திருக்கிற உணவைக் காக்கைகள் திருட முயல அந்தக் காக்கைகளை நாய்கள் குரைத்துக் குரைத்து ஓட்டுகின்றன. ஊர் மனையிலிருந்தும் பட்சிசாலங்களின் பலவகைக்கானம் கிளம்பி வந்து செவியில் நிரம்பித் ததும்புகிறது.

வயல்களை யடுத்து வாழைத் தோட்டங்களும் பலவிதமான காய் கறித் தோட்டங்களும் கிடக்கின்றன. அவைகளுக்கப்பால் வானளாவிய தென்னை, பனை, கமுகு, மா, பலா, இருப்பை, வேம்பு முதலான பலவகை மரங்களும் செறிந்த கிராமங்கள். காட்சியோ கண்ணுக் கினியது. வஞ்சகஞ் சூதற்ற மக்களின் வாழ்க்கையோ மனதுக் கினியது.

இவைகளை யெல்லாம் கண்டு களித்துக்கொண்டு ஆனந்தமாகத் தன்னந் தனியே நடந்து போகிருர் ஓர் ஆங்கிலத் துரைமகன். கிராம வாசிகளுடைய கவனத்தைக் கவராமலிருக்கும் பொருட்டு வழக்கமான காற்சட்டை தொப்பி முதலியவற்றைக் கைவிட்டு இடத்துக் கேற்றபடி சாய வேட்டி ஒன்றை உடுத்துக் கொண்டார்.. மேலுக்கு ஒரு பனியன். தலையிலே துவாய்த் துண்டைக் கொண்டு மிண்டாஸ் கட்டு. கையிலே வெள்ளைச் சீலைபோட்ட குடை. காலிற் செருப்பு. இந்தக் கோலததுடன் யாரோ ஒரு பறங்கி இடை யிடையே இந்த ஊருக்கு வந்து போகிறவன் என்று மாத்திரம் பலரும் பேசிக்கொள்ளுவார்கள். ஆனல் இவரை இன்னரென் றறிந்தவர் சிலரே.

இத்துரை மேற் கூறிய மணல் வீதியிலே செல்லும்போது நடுத்தர வயதுள்ள மனித ஒருவன் ஒரு கையிலே பலகாரப் பெட்டியும் மற்றக் கையிலே பழந் தண்ணீர் முட்டியும் கொண்டு மிக வும் வேகமாக இவரை விலத்திக்கொண்டு போகிருன். அவனுடைய பரபரப்பையும்

அவசரத்தையும் அவதானித்த துரை "ஏன் காணும் இவ்வளவு அவசரம்?" என்று கேட்க, அதற்கவன் "என் தகப்பனார் வயலில் வேலை செய்து கொண்டிருக்கிறார். சாப்பாடு கொண்டு போக நேரம் பிந்தி விட்டது. இக் கணம் அவர் கோபிக்கப் போகிறார்" என்று சொல்லிக் கொண்டே சிறிதும் தாமதிக்காமற் போகிறான்.. "இவ்வளவு வயதாகியும் தன் தகப்பனிடத்தில் இத்துணைப் பயமும் கீழ்ப்படிவுமுள்ளவனாய் நடக்கும் இவனுடைய பிதா எப்படிப்பட்டவனாயிருப்பானோ" என்று ஆச்சரியமுற்ற துரையும் அவன் பின்னே கடுகி நடக்கிறார்.

அவன் தன் வயலுக்குப் போனவுடனே, அங்கு உழுதுகொண்டிருந்த முதியவர் ஒருவர் அவனைப் பார்த்து, "எடா பொடியா! ஏன் இவ்வளவு நேரமாச்சுது? வாழைத் தோட்டத்திலே அப்பு என்ன செய்யுதோ தெரியாது. முதல் அங்கே கொண்டுபோய்க் கொடுத்துவிட்டுப் பிறகு எனக்குக் கொண்டு வா" என்கிறார், அதற்கவன் "வாழைத் தோட்டத்துக்கு அவள் சின்னத் தங்கச்சி கொண்டு போகிறாள். இந்தச் சாமான்கள் இங்கேயே கிடக்கட்டும். அவள் வீட்டுக்குப் போகிற பொழுது இங்கே வந்து இவைகளை எடுத்துக்கொண்டு போவாள். சந்தையடியிலே ஓரணை மாடு விலைக்கிருக்குதாம். நான் அதை ஒருதரம் பார்த்து வரப் போகிறேன்" என்று சொல்லிக்கொண்டு பலகாரப் பெட்டியையும் பழந்தண்ணீர் முட்டியையும் ஒரு சுத்தமான இடத்தில் வைத்து மூடுகின்றான். அப்பொழுது முதியவர், "சரி, அதுக்கென்ன; பார்த்துக் கொண்டு வா. கண்டபடி விலை பேசிப் பிடி கொடுத்திடாதே. கிழட்டு மாடாயிருந்தால் அவதிப் பட்டு வாங்கி யிடாதே" என்று எச்சரிக்கை செய்கிறார். அதற்கவன், "கண்மூடித்தனமாக விழுகிறதோ! நான் கவனமாய்ப் பார்த்து வாங்குவேன் அப்பு" என்று கூறிவிட்டுச் செல்லுகின்றான்.

இவர்களுடைய சம்பாஷணையிலிருந்து, வயலில் உழுதுகொண்டிருந்த முதியவருடைய தகப்பன் வாழைத்தோட்டத்திலிருக்கிறாரென்பதையறிந்த துரைக்கு அந்தத் தொண்டு கிழவனைப் பார்க்க வேண்டுமென்னும் ஆவல் தொடங்கப் பார்க்கின்றது. ஆனால், கமான் வங்களாவிலே மணியகாரன், விதானை உடையார் முதலானோர் தம்மைக் காணும்பொருட்டு வரும் நேரம் அடுத்துவிட்டது என்னும் உணர்ச்சியினாலே, நாட்டு நடவடிக்கையை இனிமேற் சமயம் வாய்க்கும்பொழுது பார்க்கலாம், இப்பொழுது கமான் வங்களாவுக்குப் போவோம் என்று நிச்சயித்து உத்தியோகக் கடமையைச் செலுத்த வந்தவழியே திரும்பி விரைந்து நடக்கலானார் அந்தத் துரை".

இதைக் கேட்டுக்கொண்டிருந்த பிள்ளைகள் முன்னோரது நீண்ட ஆயுளுக்கு ஏதுவாயிருந்த வழிவகைகளைப்பற்றியும் அதிகாரிகளது குணதிசயங்களைப் பற்றியும் துருவித் துருவிக் கேட்கலாயினர். முருகர் குழந்தைகளுக்கேற்ற பதில் சொல்லிக்கொண்டிருந்தார். பிற கருமத்தின் மேற் செல்லவேண்டிய கந்தர் தாம்பூலந் தரித்துக்கொண்டு விடைபெற்றுக் கொள்ளப் பார்வதியும், "அப்படியிருந்தது அந்தக் காலம்! காலம் போகிற போக்கிலே எப்போதும் ஒரே மாதிரியிருக்குமா? என்றாலும் காந்தி மகான் முதலான உத்தமர்களும் தியாகிகளும் எங்கள் காலத்திலே வசிக்கிறார்கள். அவர்களை நினைத்தாலே மனச்சாந்தி யுண்டாகும். என்று சொல்லிக்கொண்டு தன் கருமத்திற் கண்ணாயினாள்.

# பாவை வழக்கு

போன். சின்னத்துரை

விவாகமும் நடந்தேறிப் பல நாட்களும் மறைந்தன. வாழ்க்கைச் சிறப்பின் பேருக ஒரு ஆண் குழந்தையும், பெற்ரேம். நாளாக நாளாக நம தில்லாள் நம்மில் சந்தேகம் கொள்ளத் தொடங்கி விட்டாள். அவளின் தோழியர் அவளை மன்மாற்றத்துள் ஆழ்த்திவிட்டனர்.

பெண்கள் எவருடனும் நான் சிரித்துக்கொண்டிருந்தால், வார்த்தையாடினல் அல்லது வார்த்தையாட மறுத்துவிட்டால் எனது மனைவியின் உள்ளம் பலபல மாற்றமடையும். வெளியிடங்கட்குப் போய் வரும்பொழுது ஏதும் வாங்கிக் கொண்டுவந்து கொடுத்தால்; கொடுக்கத் தவறிவிட்டால்; சுணங்கி வந்துவிட்டால் அல்லது நேரத்துடனேயே வந்துவிட்டாலும்கூட அவள் ஏதேதோ எல்லாம் ஆலோசித்துவிடுவாள். நான் அசையும் எவ்வித அசைவுகளும் ஏதோ ஒன்றன் காரணமாகத்தான் இவ்வாறு நடக்கின்றன என்பதே அவளது தப்பபிப்பிராய மாகும்.

என் ஆருயிர் அன்பன் சாமியுடன் உரையாடி முடித்துக் கடைத்தெருவில் அவனைப் பிரிந்தபோது மணி ஒன்பது அடித்தது. வீட்டை அடைந்தேன். குறைந்த வெளிச்சத்துடன் விளக்கு என்னை நோக்கிற்று. அறையினுட் புகுந்து மனைவியும் மகனும் துயில்கொள்ளுதலைக் கண்டேன். கட்டிலில் அமர்ந்து அவள் கைகளையும் தட்டி உடலையும் அசைத்தேன். பயன் கொடுக்கவில்லை. அதுவும் ஒரு அதிசய நித்திரைதான். சந்தேகமென்னும் பாம்பு அவள் மனதில் அன்று ஆடிக்கொண்டிருந்ததுபோலும்! "இல்லற வாழ்க்கையில் இதுவும் ஒரு தனியழகு" என்றது எனது உள்ளம். "எல்லாம் நன்மைக்கே" என்றது என் புத்தி.

அவளை விழிப்படையச் செய்தற்குச் சில புதிய முறைகளைக் கையாண்டு பார்த்தேன். அந்த அறிதுயில், மாருத்துயில் ஆகக் காட்சியளித்தது. அவள் நித்திரை கொண்டிருந்தாலல்லவோ துயில் உணர்வாள்; அவளை எப்படி உணர்த்தமுடியும்?

"ஐயோ, பாவம்! எவ்வளவோ உடம்பு இளைத்துவிட்டது. சமையல் சாப்பாட்டு வேலைகள் என்ருல் இலகுவான வேலைகளா? செய்து பார்த்தாலல்லவா அதன் வருத்தம் தெரியும்! பையனும் சும்மா விட்டு வைத்திருப்பான?" என்று அந்தச் சுவரில் நின்ற பல்லிக்குக் கூறினேன். அதுவும் ஏதேதோ சொல்லித் தலையையும் அசைத்தது.

நல்ல முன்பனிக் காலம். உடல் நடுக்கமும் கூட. அவளுக்கென அன்று வாங்கிவந்த சேலையை விரித்து அவளை மூடிப் போர்த்துவிட்டேன். 'நன்ருய்த் தூங்கு' என்றேன் என் மனைவியைப் பார்த்து. 'அம்மாவை உதைக்காதே' என்றேன் எனது குழந்தைக்கு. நாளைக்குச் சாப்பாடு தருவதாகச் சொன்னேன் எனது வயிற்றுக்கு. தலை இடிக்கிறது என்றேன் பனிக்காற்றுக்கு. வழக்கமான படுக்கைக் கட்டில் என்னை வரவேற்றுக்கொண்டது. ஆயினும் நித்திரா தேவிக்குக் காரியம் விளக்கமாயிற்று. அவளும் என்னை அணுக மறுத்துவிட்டாள். மனைவியின் யோகத்திலும் மேலான முறையில் நானும் யோகத்தைத் தொடங்கினேன். எனது பசியும், வழி வருத்தமும், சாந்தமும் அவளை உணர்த்தத் தொடங்கின. சற்றுநேரத்தின்பின் ஒரு விதமான அசைவு தோன்றிற்று. எனது கட்டிலில் அமர்ந்து அவள் ஏதேதோ சொல்லினள். எனது யோகமும் கலைந்திலது. யோகம் பயன் கொடுத்தது கண்டு எனது அகமும் முகமும் மலர்ந்தன.

பின்னரும் பலப்பல தந்திரங்களை அவள் உபயோகித்துவிட்டாள். அதன்படி நானும் சற்று விட்டுக் கொடுத்தேன். அவளும் அன்று வெற்றி அடைந்துவிட்டாள். உள்ளமும் புனித மடைந்தது. எனது வயிற்றுக்கும் உணவு கிடைத்தது. நாமும் ஓர் புதுவித இன்பம் பெற்றோம். எனினும் அப் புதுவித இன்பம் எமது பொய்த் துயில்களால் ஆனதென உணர்வதற்கு எனது உள்ளம் அப்போது உடன்படவில்லை.

பொழுதும் விடிந்தது. முன்னிரவில் பனியில் நடந்ததனால் எனது மண்டையினின்றும் தும்மல்கள் ஒன்றொன்றாகப் புறப்பட்டன. மனையாளும் ஒவ்வோர் தும்மல் வரும்போதும் நூறு, நூற்றாண்டு என்றே வாழ்த்திக் கொண்டே போயினள்.

பின்னரும் பல தும்மல்கள் பொலிந்தன. அவள் ஏதோ வேறுபாடாகக் கருதிவிட்டாள். "தும்மலின் காரணம் விளங்காமலா இருக்கு. நன்றாய் விளங்குகின்றது. யார் யாரோ தங்கள் உயிர் நட்பாளர்கள் உங்களைக் கருதுகிறார்கள். அப்பாடா! விடிந்தது விடியுமுன்னரே நினைத்து விடுகின்றார்களே. சரி சரி விரைவிற் புறப்படுங்கள். இதோ சமையல் ஆயிற்று" என்று அடுக்களை நோக்கி நடந்தாள் அவ் வம்மை.

"என்னடா, அநியாயம் இது தொட்டதற்கெல்லாம் காரணங்கள் வேறு பக்கமாகத் திரும்புகின்றனவே. தும்மல்களை அடக்குவதென்றே முடிவு செய்துகொண்டேன். இரண்டு தும்மல்களை அடக்கி ஒடுக்கி அழிவு செய்துவிட்டேன். மூன்றாவது தும்மல் மூக்கின் வழியை நோக்கிற்று. மூக்கின் மேற் கையிட்டு அதனோடு பொருதிக்கொண்டு நின்றேன். வெந்நீர் கொண்டுவந்த மனையாள் எமது போரைக் கண்டு விட்டாள். கருத்தும் கொண்டு விட்டாள். 'நன்று நன்று; மறைப்பதன் கருத்து எனக்குப் புரிகின்றது. உமது அருமைக் காதலிக்கு ஏன் இவற்றை மறைக்க வேண்டும்? நான் எதற்கும் உங்களைத் தடை செய்யமாட்டேனென்பது நீங்கள் அறிந்ததுதானே. நீங்கள் ஆடவரல்லவோ? நீங்கள் விரும்பிய எதையும் செய்துவிடலாம்தானே" என்று தனது முகத்தைத் திருப்பிக் கண்களையும் துடைத்துக் கொண்டாள்.

அட கடவுளே! எதைச் செய்தாலும் எல்லாம் தப்பாக முடிகிறதே என்று சற்றும் அசையாமல் யோசனை செய்து கொண்டிருந்தேன். போனவள் திரும்பவும் வந்து என்னை உற்று நோக்கினள். "வாருங்கள் சாப்பிடலாம்; சாப்பாடு ஆயிற்று; நேரமும் ஆகிறது. இதற்கெல்லாம் இத்தனை யோசனை ஏன்? தங்கள் விருப்பமே என் பாக்கியம். என் மட்டில் பிரியம் வைத்துவிடுங்கள். அப்புறம் எப்படியும் செய்யுங்கள்" என்றாள், தாழ்ந்த குரலில். அவள் துக்கம் அவள் நெஞ்சையடைத்தது.

யான் சில பல சத்தியங்களும் கூறி அவளைத் தேற்றினேன். அப்போதும் அவள் என்னை விட்டு வைத்தாளா? இப்படித்தானே உங்கள் காதலியைத் தேற்றுவது என்றாள் வேறு கருத்தில்.

'கண்ணே!வா, சாப்பாட்டைக் கொடு' என்று அடுக்களை புகுந்தோம். எங்கள் குழந்தையும் எம்மைக் கண்டு உண்மை அறிந்தாற்போல நகைத்து முத்தமும் கொடுத்தது. அத்துடன் உணவும் உடையும் பெற்று அன்றைய காரியமாகப் புறப்பட்டேன். 'கண்மணியைக் கவனித்து வாருங்கள்' என்றாள் புன்னகையுடன் நம் மனையாள்.

கண்மணியின் கருத்தை ஆராய்ந்து கொண்டே சென்றேன். சாப்பிடப் போகும்போது நான் 'கண்ணே' என்று அழைத்ததை அவள் தப்பர்த்தம் செய்துவிட்டாள். கண்ணிலும் (தன்னிலும்) சிறந்த கண்மணி போன்றாள் வேறொருத்தி உளள் என உறுதி கொண்டுவிட்டாள். அந்தக் கண்மணியைக் கவனித்து வருக என்பதுதான், அவளது பிரியாவிடை கொடுத்ததிற் கண்ட பிரியா அழகு.

நீண்ட வழிகளை எனது கால்கள் அளந்து தளந்து தீர்த்துக்கொண்டு நடந்தன. யோசனையில் ஆழ்ந்த எனது மனமும் எனது மனைவியின் மன நிலையை

முடிவு செய்துகொண்டு சென்றது. நானும் காரியங்கள் முடித்து வீட்டை வந்தடைந்தேன். மனமும் தனது யோசனையை நிறுத்தி ஒரு முடிவுக்குவந்துவிட்டது.

அவளின் மனோரதப்படியே அன்று தொடக்கம் கண்மணி என்றே அழைப்பதாக முடிவுசெய்துகொண்டேன். அன்று மாலை வெற்றிலை யுண்டபின் படுக்கைக்குப் போக விரும்பினேன். கண்மணீ! தாம்பூலம் தருக என்றேன். கொண்டு வந்தவள் உடனிருந்து அவற்றை மடித்துக் கொடுத்தாள். முக்கியமான சில விடயங்களை மொழிந்து கொண்டிருந்தோம். "இத்தனை நாளும் என்னைக் கண்ணே! கண்ணே! என்று அழைத்தீர்களே? இன்று கண்மணீ! என்று அழைத்ததில் ஏதோ விசேடமிருப்பதாகத் தோன்றுகின்றதே?" என்று எனது கைகளைப்பற்றி வினவினாள். "இத்தனை நாளும் கண்ணாக இருந்த நான் இன்று கண்மணி ஆனேனே. இதுவரை கண்மணியாயிருந்தவளை இன்றுதான் ஒத்தவள் ஆயினேன். ஆனால் அவள் இனி எம்மணியாவாளோ?" என்று பெருமூச்சு விட்டனள்.

அவள் முதுகைத் தட்டிக்கொடுத்து "அன்பே! அப்படி எவ்வித காரணங்களும், காரியங்களும் இல்லையே!" என்று பலவாறு விளக்கிக் கூறினேன். ஐயம் அகன்றவாறில்லை.

காரியம் வர வர முற்ற ஆரம்பிப்பதைக் கண்டேன். இதற்கோர் எல்லை வைத்துவிட வேண்டுமெனத் தீர்மானித்தேன். படுக்கையை நோக்கி நடந்தேன். தூக்கம் என்னை நோக்கவேயில்லை. நான் கற்ற கல்வியெல்லாம் அன்று பிரயோகித்துப் பார்த்தேன். பொழுதும் விடிய ஒரு முடிவுக்கொண்டேன். இனி என் மனைவி எனது பெயரில் மகிழ்ச்சி யடைவாள் என்றே நம்பிவிட்டேன்.

அடுத்த நாள் புது நாமகரணம் செய்வதற்குரிய நல்லோரையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். மதிய போசனம் முடிந்தது. சாய்ந்துகொண்டிருந்தேன், சாய்வு நாற்காலியில். மனைவியும் ஏதோ நினைத்து என்னண்டை வந்தனள்.

"கருமணியிற் பாவாய்! நின் கைவிசிறி
கொண்டேன்
பெருவியர்வை மாற்று பெரிது"
என்றேன்.

காற்று வீசிங்கொண்டே தனது பழைய பல்லவியை அவிழ்க்கத் தொடங்கினாள். ஏதோ கருதியனவெல்லாம் கதைத்துக் கொண்டிருந்தோம். காலம் அறிந்த என் காதலியும் "நேற்று மட்டும் கண்மணியாய் இருந்தவள் இன்று கருமணியிற் பாவை ஆயினளே! என் பாக்கியமே பாக்கியம்" என்றாள்; சற்று யோசித்தாள்; நாடியிற் கையை வைத்து நாடினாள். "இன்றுதான் உண்மை உரைத்தீர்கள்" என்றாள். நான் அவள் மகிழ்ந்தாள் எனவெண்ணி நானும் மகிழ ஆரம்பித்தேன்.

நல்ல கணக்கு ஒன்று என் முன் போட்டுவிட்டாள். கண்கள் இரண்டிற் கருமணி (கண்மணி) இரண்டு. கருமணியிரண்டிற் பாவையும் இரண்டு. இந்தப் பாவையும், அந்தப் பெண் பாவையும் சேர்ந்து உங்களுக்கு இரண்டு என்று கூறி என்னிடம் நின்று நீங்கப் பார்த்தாள். அவள் கரத்தைப் பற்றிக்கொண்டு,

"ஒருத்தி நீயன்றி வேறிவ் வுலகிடை
யுயிரன்னார்கள்
கருத்தினும் புகுந்திலார் காண் காரிகை!
கரவுட்கொண்டு
விருத்திகள் விரித்தல் வேண்டாம்
விடுக்குதி இனியும் மேன் மேற்
கருத்துகள் உரைத்தி யென்னிற்
கடவுளும் கலக்கம் காண்பர்"

என்றேன். 'சரிதான், உங்கள் பா அழகு' என்றாள். நானும் தங்கள் இல்லாள் அல்லளா? தங்கள் கல்வியில் பாதியாவது எனக்கு வராதா? உங்கள் செய்யுளே உங்கள் இரண்டு பட்ட நிலையை எனக்குக் காட்டுகின்றதே? எனப் பல வினாக்களும் விடுத்தனள்; கலங்குகின்றாள். நான் இனிச் செய்வது யாது? இவ்வழக்கில் உங்கள் தீர்ப்பு எப்படி? நம் மனையாளும் நானும் மன நிம்மதியாய் இருக்க ஓர் நல் உபதேசம் கூறுங்கள்.

S. Nadarasa
Supdt. of Translations
Official Language Dept.
Colombo

# சிகிரியின் குகைச் சித்திரங்கள்

சோ. நடராஜன்

நல்லதை எடுத்துக் கொண்டு கெட்டதைத் தள்ளி விடும் குணம் மனிதரிடத்து இயல்பாக இல்லை. அது வருந்தி உழைத்துக் கொள்ள வேண்டிய விஷயம். நல்லது எது கெட்டது எது என்பது விவாதத்துக் குரியது. இந்தப் பூமியில் மனிதன் வாழ்வை நடத்தத் துவங்கியும் பல ஆயிர ஆண்டுகள் கழிந்துவிட்டன. அதனால் எத்தனையோ வருடங்களாகச் சேகரித்த சம்பாத்தியம் மனித வர்க்கத்தில் பிதுரார்ச்சிதமாக இருந்து வருகிறது.... அவற்றுள் நல்லவை தீயவை என்பனவும் கலந்திருக்கின்றன. அன்னப்பட்சி பாலை நீரில் நின்று பிரித்து எடுப்பது அதற்கு இயல்பாகவே அமைந்த சுகுண விசேஷம். மனிதனிடத்தும் இந்த வகையான விவேகம் பழக்கத்தினாலும் அறிவினாலும் செயற்கையினாலும் தொன்று தொட்டு வந்துகொண்டிருக்கிறது. வாழ்க்கையில் எது நல்லது எது தீயது எது பயனுள்ளது எது பயனில்லாதது என்பதை அறிந்து கொண்டு வந்ததுபோலவே கலைத் துறையிலும் எது நல்லது எது பயனில்லாதது என்பதை அறிந்திருக்கிறோம். ஆனால், இந்த விவேக புத்தி நாகரீகம் பல வகையிலும் விசாலமடைந்துள்ள இக்காலத்தில் மிகவும் கஷ்டமான நிலைமையில் இருக்கிறது. மனிதன் குரங்கிலிருந்து விருத்தியடைந்தான் என்கிறார்கள் விஞ்ஞானிகள். குரங்கின் கையிலே பூமாலையைக் கொடுத்தால் அதைக் குரங்கு பல வகையில் ஆராய்ச்சி செய்கிறது. மனிதனும் அப்படித்தான். பார்த்ததை அது போலச் செய்வதும் மனிதனுக்கும் குரங்குக்கும் உள்ள சுபாவம். கலைகளும் ஒரு வகையில் இந்தக் குரங்குப் புத்தியைக் காட்டுகின்றனவென்று சமீபத்தில் ஜீவ சாஸ்திரம் பயின்று வரும் எனது இலக்கிய நண்பர் கூறினார். எந்த ஒரு விஷயத்திலும் அவர் சொன்னாற் சொன்னதுதான். மறு பேச்சுக்கு அவர் இடம் வைத்துக் கொள்வதில்லையென்பது அவருடைய எண்ணம்.

இலங்கையில் புராதன காலத்தில் நிலவிய சித்திரங்களைப்பற்றிக் கலைவாணர்களிடையே சமீபத்திலே விவாதம் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கொஞ்ச நாட்களுக்கு முன்னர் கொழும்பிலுள்ள சித்திர கலா சங்கத்தினர் அஜந்தா குகைச் சித்திரக் காட்சியொன்றை நடத்தினார்கள். அதில் உலகப் பிரசித்திபெற்ற அஜந்தா குகைச் சித்திரங்கள் பல காட்சிக்கு வைக்கப்பட்டன. அவை இலங்கையிலுள்ள சித்திரக் கலா ரசிகர்களிடையே மிகுந்த பரபரப்பை உண்டாக்கின. இலங்கையிலும் சிகிரி என்ற ஒரு மலைக் கோட்டை உண்டு. அது கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் காசியபன் என்ற சிங்கள அரசனின் அரண்மனையாயிருந்தது. அதன் பாறைகளில் அஜந்தா காலத்துச் சம்பிரதாயப்படி அற்புதமான பல சித்திர வேலைகள் தீட்டப்பெற்றன. அவை இன்னும் கலா ரசிகர்களுக்குப் பெரு விருந்தா யிருக்கின்றன. ஆனால் தற்போது உண்டான விவாதம் இவை எவ்வளவு தூரம் இந்திய சம்பிரதாயத்தைப் பின் பற்றின, எவ்வளவு தூரம் இலங்கைக்குச் சொந்தமான பண்பை யுடையன என்பது. இன்னொரு வகையில் சொல்வதானால் சிகிரிக் குன்றில் உள்ள குகைச் சித்திரங்

கள் முழுவதும் இலங்கைக்கே சொந்த மான தனிப் பண்புடையனவா? அல்லது, அவை முற்றாக இந்தியக் கலைப் பண்பையே உடையனவா? இன்றேல் இவ்விரு பண்புகளும் கலந்தனவா? என்பதே. மனிதனிடத்துக் கலை விஷயத்தில் கூடப் பார்த்ததைச் செய்யும் குரங்குச் சுபாவம் இருக்கிறதென்று எனது நண்பன் கூறிய கூற்றை வைத்துக் கொண்டு இந்தப் பிரச்சினையை ஆராய்வது பயனுடைய தாகும்.

கலை யென்பது கண்டதைச்செய்யும் குரங்குச் சுபாவமுடையது. ஆங்கிலத்தில் இதை 'இமிடேஷன்' (Imitation)என்பார்கள். ஆனல் இந்த இமிடேஷனில் மனேதர்மத்துக்கு நிரம்ப இட முண்டு. ஒரு கலைஞன் தமது ஆத்ம பாவத்தை வெளிப்படுத்துவதற்கு 'இமிடேஷன்' ஒரு இடை யூருகாது. லட்சணமான உருவ அமைவு அதாவது வெளிச் சட்டம் இமிடேஷனுகலாம். ஆனல் அந்த வெளிச் சட்டத்துள் அமையும் விஷயம் தனிப் பண்பைப் பெறலாம். "பூமியில் புதியது என்பது ஒன்றும் கிடையா" தென்பது ஒரு முதுமொழி. புதியது எப் பொழுதும் புதியதா யிருக்க முடியாது. அது பழமை பெற்றுச் சம்பிரதாயமாகிறது. இலக்கியத்தும் மற்றக் கவின் கலைகளிலும் இந்தச் சம்பிரதாயம் வெளிச் சட்டமாக அமைகிறது. அதைக் கலைஞர் பயன்படுத்திச் சொந்தக் கற்பனைகளைக் குயிற்றுகிருர்கள். இலக்கியத்திற் போலவே சங்கீதம், நாட்டியம், சிற்பம் என்ற கவின் கலைகளிலும் இந்தச் சம்பிரதாயம் அடிபட்டு வருகிறது. சித்திரக் கலையிலும் அப்படியே. வானத்திலே வால் வெள்ளி தோன்றுவது போலப் பூமியிலே அபூர்வமாய்க் கலைக் கற்பனைகள் தோன்றுவதில்லை. தெரிந்ததைக் கொண்டுதான் தெரியாததைத் தெரிய முயலுகிருேம். அறிந்ததைக் கொண்டு அறியாததைக் கற்பனை செய்கிருேம். அந்த முறையில் கற்பனைக்குப் பூரண சுதந்தர முண்டு. அழகால் உலகம் விரிந்து வளர்கிறதென்ருல் அழகை ஆக்குவது கற்பனையின் கடமை. எனவே கற்பனைக்கும் சம்பிரதாயமும் பழைய பண்பாடும், அடிப்பட்டு வந்த கொள்கைகளும், சமயக் கோட்பாடுகளும் இவை போன்றனவும் பிறவும் துணை புரிகின்றன. சிகிரிக் குகைச் சித்திரங்களை ஆராயுமிடத்து இவற்றைக் கருத்திற் கொண்டு ஆராய வேண்டியது அவசியம். அப்பொழுதுதான் சிகிரிச் சித்திரங்கள் எவ்வளவு தூரம் தனிப் பண்புடையன, எவ்வளவு தூரம் இந்திய கலைச் சம்பிரதாயத்தையும் சமயக் கொள்கையையும் இன்னேரன்ன பிறவற்றையும் அனுசரித்தன வென்பது புலனுகும்.

இச் சந்தர்ப்பத்தில், இந்தியாவில் தொன்றுதொட்டு அடிப்பட்டுவந்த கலை மரபு எத்தகைய தென்பதைச் சிறிது கூறவேண்டும். வேத காலத்துக்கு முந்திய பழைய திராவிடக் கலை . மரபைத் திட்டமாகக் கூறுவது தற்போதைய ஆராய்ச்சி அறிவுக்கு அப்பாற்பட்டது. வேத காலத்துக் கலைச் சம்பிரதாயம் பெரும்பாலும் வேள்விகளோடு சம்பந்தப்பட்டது. யாக குண்ட மமைத்தல், தேர் முதலியன கட்டுதல் போன்ற இத்தகைய பயன் கருதிய வழியிற்ருன் வேத காலக் கலைப் பிரவிருத்தி நடைபெற்ளது. பின்னர் பௌத்த சமயம் பெருக்கெடுத்து இந்தியாவெங்கும் கரை புரண் காலத்திற்ருன் உயர்ந்த கலா சிருஷ்டிகள் தோன்றின. அசோக மஹா சக்கரவர்த்தி மௌரிய சாம்ராச்சியத்தைக் கண்டு கலிங்கரை வலி தொலைத்துத் தெற்கு எல்லையை அடைந்த பொழுது உப குப்தரென்ற பௌத்த ஆசிரியரின் போதனையின் பயனுய் பௌத்த மதத்தைத் தழுவினர். இச்செயல் உலக நாகரீகத்துக்கே பெரியதொரு சம்பவமாயிற்று. சீனம், ஜப்பான், பேர்மா, இலங்கை ஆபிரிக்கா, மத்தியதரைக் கடற் பிரதேசம், மத்திய ஆசியா ஆகிய நாடுகளெங்கும் பௌத்த தூதர்கள் புத்த சோதியைப் பரப்பினுர்கள். சேர சோழ பாண்டிய நாடுகளும் பௌத்த கொள்கையை அனுசரிக்க முற்பட்டன. தாமிர பர்ணி யென்ற இலங்கையிலும் அசோக புத்தி

ரர்கள் புத்த சமயத் தூதுவராய் வந்து புதுமதம் பரப்பினர்கள். இதனல் இலங்கையில் புதியதொரு வாழ்வு உண்டானது. சிங்கள பாஷையும், புத்த சமயமும், நாட்டுமக்கட்கு வாழ்வு கொடுத்தது போக, ஓடும் ஆறுகளை மறித்துக் கட்டி நீர்த் தேக்கங்களேயும் குளங்களேயும் அமைத்து நீர்ப்பாசன வசதிகளை யுண்டாக்கவும், வசதி ஏற்பட்டது. அசோகன் தேசத்து எந்திர விற்பன்னர் இலங்கையிலும் குளம் தொட்டு வளம் பெருக்கினர்கள். கலைத்துறையில் வானளாவிய தாதுகோபங்கள் தோன்றின. அசோகனுக்குப் பின்னர் கி. பி. இரண்டாவது நூற்ருண்டில் புத்த சமயமே மாற்றமடைந்தது. ஹிந்து சமயக் கொள்கைகள் புத்த சமயத்திற் பெருகவுங் கலந்தன. பக்திக் கொள்கையும் கடவுள் வழிபாடும் புகுந்தன. இதுவே மகாயானக் கொள்கை. பரிநிர்வாணமடைந்த புத்த பகவானுக்கு நாமரூபங் கிடையாதென ஹீனயான பௌத்தர் கொண்டார்கள். அதனல் புத்தருக்கு உருவ வழிபாடு செய்தல் முறையன்றெனக் கருதினர். எனவே பழைய பௌத்தக் கொள்கைப்படி பௌத்த உருவங்கள் தோன்றவில்லை புத்தர் ஞான ஒளிபெற்ற போதி விருட்சம் புத்தர் பாதச்சுவடு இவற்றையே ஆதி பௌத்தர் வழிபட்டு வந்தனர். மகாயானக் கொள்கை பரவவே தியான புத்தரும், நிற்கும் புத்தரும், வஜ்ரபாணி பதும பாணிபோன்ற போதிசத்துவரும் விகாரங்களில் இடம்பெற்றனர். புத்தருடைய பழம் பிறப்பைக் கூறும் சாதகக் கதைகளிலுள்ள சம்பவங்களை விகாரங்களில் கல்லிற் செதுக்கியும், சித்திரத்தில் தீட்டியும் வழிபட்டார்கள். சாஞ்சி என்ற பழைய பௌத்த ஸ்தலத்திலும். அமராவதியிலும் இலங்கையில் அனுராத புரத்திலும் பௌத்த சிலைகள் தோன்றின. அனுராதபுரத்துச் சிற்ப வேலைகள் பெரும்பாலும் சாஞ்சி, அமராவதி ஆகிய இரு இடங்களில் தோன்றிய சிற்ப வேலைப் பாடுகளைப் பின்பற்றியே எழுந்தன. இது கி. பி. இரண்டாவது நூற்ருண்டு வரை உண்டான கலைச் சம்பிரதாயம். இதிலெல்லாம் இந்தியக் கலைமரபையே இலங்கையிலும் பின் பற்றினர்களென்பது தெளிவாகிறது. அக்காலத்தில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் நெருங்கிய கலைத் தொடர்பும் வியாபாரத் தொடர்பும் இருந்து வந்தது. மகாயான பௌத்த உருவச் சிலைகள் சிலவற்றில் கிரேக்கக் கலைப்பண்பும் கலந்தது. அக் காலத்தில் இந்தியாவின் வடமேற்கை கிரேக்க அரசர்கள் ஆண்டனர். அவர்களுட் சிலர் பௌத்த சமயத்தையும் இந்து சமயத்தையும் தழுவி யிருந்தார்கள். அதனல் அவர்களுடைய கலைமரபு இந்தியாவில் பரவுவதற்கும் ஏதுவாயிற்று.

கி. பி. இரண்டாவது நூற்ருண்டின் பின்னர் இந்திய அரசியல் குழப்பங்கள் உண்டாயின. பின்னர் மூன்ருவது நூற்ருண்டு துவக்கம் ஆரும் நூற்ருண்டுவரை இந்திய சரித்திரத்தில் பொன் யுகமென்று கொண்டாடப்படும்காலம்குப்தர்கள் அரசு கட்டிலேறினர். இந்தக் குப்தர் யுகம் கலைகட்குப் பேர்போனது. இந்துசமயம் மறுபடியும் அதன் உன்னத ஸ்தானத்தை அடைந்தது இக்காலத்தில்தான். சமுத்திரகுப்தன் புவிச்சக்கரவர்த்தி மாத்திரமல்ல கவிச்சக்கரவர்த்தியாகவுமிருந்தான். சங்கீதத்தில் மகா நிபுணன். அவனுடைய மகனை சந்திர குப்த விக்கிரமாதித்தன் காலத்தில்தான் இந்திய கவி சிரேஷ்டரான காளிதாசரும் மற்றைய நவமணிகளும் அவனுடைய ராச சபையை அலங்கரித்தார்கள். இந்தக் குப்த யுகத்தில் தான் அஜந்தாக் குகைச் சித்திரங்கள் தீட்டப்பட்டன. மேகவர்ணன் என்ற சிங்கள அரசன் குப்த ராஜாக்களோடு அந்நியோன்னியமான தொடர்பு கொண்டிருந்தான். குப்த மன்னர் இலங்கைப் பிக்குகளுக்கெனப் புத்தகாயாவில் ஒரு விகாரமும் அமைத்தார்கள். இந்த அந்நியோன்னியமான தொடர்பினல் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் போக்குவரத்து அதிகரித்தது. இந்தியக் கலைமரபு இலங்கையில் நெருங்கிப்பரவுவதற்கு மார்க்கமுமிருந்தது. கடந்த மகா யுத்தத்தின்போது இலங்கையில் ஏற்பட்ட உணவு

நெருக்கடிகாரணமாய் இந்தியக் காப்பி ஹோட்டல்கள் எங்கும் தோன்றி இந்தியப் பட்சணங்களான தோசை, இட்லி, வடை முதலியன சிங்களரிடையே அதிகம் பரவியதுபோல அக்காலத்திலும் இந்தியப் பண்பும் நடை உடை பாவனையும் பரவின. கலைமரபும் அதற்கு விலக்கல்ல. அஜந்தாக்குகைச்சித்திரங்களையும் அதே காலத்துச் சிகிரியாக்குகைச் சித்திரங்களையும்ஒப்புநோக்குவோர் அஜந்தா சிகிரியாவுக்கு வழிகாட்டியாயிருந்ததென்பதை மறுக்க முடியாது. அஜந்தாச்சித்திரங்கள் பௌத்த ஜாதகக் கதைகளைப் பெரும்லும் சித்திரித்திருக்கின்றன. இருந்தாலும் அவற்றிடை சாதாரண வாழ்க்கையைப் படம்பிடிக்கும் பல அம்சங்கள் காணப்படுகின்றன. கலைகள், புலன்களைத் தீயவழியில் செலுத்துவதால் அவை கூடா என்று கொண்ட ஹீனயானப் பௌத்தக் கொள்கை அஜந்தாச் சித்திரங்களில் கிடையா. அங்கே பத்திப் பிரவாகம் ஓடுகிறதைக் காணலாம். ஆனல் சிகிரியாச் சித்திரங்களில் அதே பக்திதான் தலைநின்ற ஜீவ சுருதியா என்பது விவாதத்துக்குரிய விஷயம். அப்சரசுகள் போன்ற அழகிய பெண்கள் கையில் மலர் தாங்கி மேகத்தில் மறைந்து நிற்கும் சித்திரங்களே சிகிரியை அழகுபடுத்துகின்றன. இவற்றின் அர்த்தமென்ன?

இலங்கையில் புதைபொருளாராய்ச் சித்துறைத் தலைவராயிருந்த H.C.P. பெல் என்பவர் இவற்றைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது, இப்பெண்கள் காசியப மன்னனுடைய அந்தப்புர வனிதையரென்றும் அவர்கள் கோவில் கும்பிடச் செல்லும் காட்சியே சித்திரிக்கப்பட்டிருக்கிறதென்றுங் கூறுவர். இவை அப்சர ஸ்திரீகள் தான். வானத்தில் மேகத்தினிடையே தோன்றுவதுபோல இந்திய சம்பிரதாயத்தையொட்டி இவையுந்தீட்டப்பட்டிருக்கின்றன என்பர் டொக்டர் ஆனந்தக் குமாரசாமி. அஜந்தாவிலுள்ள பக்திரசம் சிகிரிச் சித்திரங்களில் கிடையாது. அழகைச் சித்தரிக்கும் முக்கியமான நோக்கத்துடன் இவை வரையப்பட்டிருக்கின்றன என்பது பல அறிஞரின் கருத்து. எனவே கோவில் கும்பிடச்செல்லும் பெண்களின் சித்திரமா அல்லது அப்ஸரசுகளா அல்லது மன்னனுடைய அந்தப்புரப் பெண்கள் ஜலக்கிரீடையில் ஈடுபட்டிருக்கிறார்களா? என்பவை தீர்க்கவேண்டியவை. ஹவெல் என்ற சித்திர விற்பன்னர் வேறொரு கருத்தைத் தெரிவிக்கிறார். அரமனைப்பெண்கள், துஷிதமென்ற சுவர்க்கத்தையடைவதாகக் கனைக்காணும் பாவனையில் இவை வரையப்பட்டிருக்கின்றன. வாழ்க்கையில் காணப்படும் பிரத்தியட்ச சம்பவங்களும் கலைக்கு விஷயமாகின்றன. பழைய இந்தியச் சித்திர மரபை ஆராய்ந்தால் புலவர்கள் கவிதைகளில் வெளிப்படுத்தும் கற்பனைப் பொருட்கள் சித்திரக் காரருக்கு விஷயமாகி வந்ததைக் காணலாம். குப்தர் காலத்துக் கவி சிரேட்டர்கள் கவிதைகளில் வருணிக்கும் பெண்களின் உருவங்கள் சித்திரக் கலைஞருடைய தூரியங்களிலிருந்து படமாக வெளிவருதல் இயல்பு. அந்த வகையில் சிகிரியாக் குகைச் சித்திரங்களும் கவிஞர் கற்பனையில் கண்ட பெண்கள்தான் என்பதை ஒருவாறு கூறிவிடலாம். இவ்வாறு ஆராயுங்கால் சிங்கள எழுத்தாளரான மாட்டின் விக்கிரம சிங்க கூறும் வியாக்கியானம் பொருத்த முடையதாயிருக்கின்றது. இப்பெண்கள் ஜலக் கிரீடையில் ஈடுபட்டிருக்கும் ராஜஸ்திரீகளென்றும் மேகம்போலத் தீட்டப் பட்டிருப்பது நீர்த் தடாகமென்றும்,அவர்களுடைய கையில் ஜலக்கிரீடைக்கு அனுகூலமான நீர்ச் சல்லடையிருக்கிறதென்றும் அவர் குறிப்பிடுகிறார். அதற்கு ஆதாரமாகக் கவி சிலுமின, என்ற 13-ம் நூற்றாண்டுச் சிங்கள க்காவிய மொன்றிலுள்ள கற்பனையை மேற்கோளாகக் காட்டுகிறார். இக்காவியமும் சமஸ்கிருத காவியங்களின் மரபைக் கொண்டிருக்கிறது. இதையெல்லாம் நோக்குமிடத்து சிகிரிக் குகைச் சித்திரங்கள் இந்தியக் கலைமரபை அனுசரித்தே யெழுந்தன வென்பதும், இலக்கியக் கற்பனையைப் படம் பிடிக்கின்றன வென்பதும் இலங்கைக்குச் சொந்தமான சில தனிப் பண்பையும் உள்ளடக்கியிருக்கின்றனவென்பதும் தெளிவாகும்.

# மஹாராணி

"பண்டிதர்"

**பஸ்** நிலையத்துக்குப் போய் அங்கே கியூ வரிசையொன்றில் தொட்டுக் கொண்டு நின்றேன். மாத்தளைக்குப் போகும் பஸ்கள் நிற்கும் இடம் அது. மாத்தளையில் எனக்கு அண்ணர் ஒருவர் இருக்கிறார். அவரிடம் எனக்கு அலுவலும் இருந்தது. அதனால் புறப்பட்டேன்.

அலுவல் கல்யாணத்தைப் பற்றியது. யாழ்ப்பாணம் போய்விட்டு வந்த என் நண்பன் அவ் விஷயமாகப் பெரியோர்கள் கூடி நிச்சயிக்கப் பார்க்கிறார்கள் என்று அறிவித்தான். எனக்கு ஏக்கமாய்ப் போய்விட்டது. அண்ணரின் கால்களில் விழுந்தாவது மேற்படி விலங்குக்குள் மாட்டிக் கொள்ளாமல் வழி பார்க்கலாமா என்றுதான் அவரிடம் புறப்பட்டேன்.

ஆனால், இன்று பஸ்ஸிற்கு வெளிக்கிட்டுக் கொண்டிருக்கும் பொழுது எனக்கு அவரிடமிருந்தே ஒரு தபால் வந்தது. விஷயத்தை அவரே எழுதியிருந்தார். பறங்கிப்பெண் யாரோ ஒருத்தியுடன் நான் வெகு சினேகமாம்! இதை மஹா நுவரைக்கு வந்து சென்ற எங்கள் ஊர்க்காரர் ஒருவர் தந்தையிடம் மெதுவாகத் தெரிவித்தாராம். அதனாலேதான் எதிர்பாராத வேகத்துடன் திருமணம் ஒன்று எனக்குத் தீர்மானிக்கப் பட்டுக் கொண்டிருக்கிறதாம்! (யார் அந்தப் பறங்கிப் பெண் என்று என்னைக் கேட்கிறீர்களா? அறியேன், அடியேன்! அப்படியானால் எனது பக்கத்து வீட்டுக்காரர் பொய்யா சொன்னார் என்று கேளுங்கள்; சொன்னால் என்ன? ஒரு பொய் தானே சொன்னார் அப்படி யாயினும். ஆயிரம் பொய் சொல்வதற்கு இடமிருக்கிறதே ஐயா ஒரு மணத்தை முடித்து வைப்பதற்கு! இன்னுமொன்று! சொன்னவருக்கு ஒரு மகளும் இருக்கிற தென்றால் புரிகிறதல்லவா விஷயம் ?)

எனக்குத் தீர்மானிக்கப்படப்போகும் பெண் வெகு அழகியாம். மஹாராணியென்று பேராம். நன்றாகப் படித்திருக்கிறாளாம். இனிப் படிப்பிக்கும் நோக்கமாம். சமையலும் தெரியுமாம்! இப்படிப் பல எழுதியிருந்தார். எங்கள் சமையற்காரனுக்குத் தெரியுமே போதிய சமையல்: மஹாலக்ஷ்மியும் வேண்டாம், ஒரு மஹாராணியும் வேண்டாம், எனக்குச் சமைத்துப் போட என்று சொல்லிவிட்டு வரலாம் என்றுதான் புறப்பட்டேன்.

இப்படித்தான் என் நண்பன் ஒருவனுக்குத் தந்தை,தாய், தமையனார் சேர்ந்து ஒரு பெண்ணை முடித்து வைத்தார்கள். "பெண்ணென்று போய் முடிக்கப் பிசாசாய் முடிந்ததடா அது" என்று அவன் அழாக் குறையாக என்னிடம் சொல்வான்.

பஸ் வந்தது. இதற்கிடையில் சற்று மழை பெய்திருந்தபடியால் குடையுள்ளவர்களைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் நனைந்து போயிருந்தார்கள். எனது வண்ணான் மினுக்கிய உடுப்பு மடிப்புத் தளர்ந்து போனது. மலைநாடென்றால் மழையின் தொந்தரவு இப்படித்தான். ஒவ்வொருவராகப் பஸ்ஸில் ஏறினோம். முழுப்பேரும் ஏறிய பிறகு இன்னும் இடம் இருந்தது. வரிசையில் நின்று வீணாக நனைந்து கொண்டதுதான் என்று அலுத்துக் கொண்டிருக்கும் பொழுது, எனக்கு முன் சீற்றில் இருந்த யுவன் ஒருவன் திடீரென்று ஷேட் கொலரை இழுத்துவிட்டுக்கொண்டு வாசற்பக்கம் எட்டிப் பார்த்தான். யாரோ ஒரு இள நங்கை உள்ளே ஏறிக்கொண்டிருந்தாள். அவள்

முகத்தைப் பார்த்தால் வேறு எங்கேயோ பார்த்ததுபோல் இருந்தது!

மரத்திலே மாம்பழங்களைக் கண்ட சிறுவன் அவற்றை விழுத்தி அருந்தக் கல் அகப்படாமல் தவிப்பானே, அந்த மாதிரி எனக்கு முன்னல் இருந்த அந்த இளைஞன் தவித்தான். ஏனெனில் அவன் இருந்த சீற்றில் ஏற்கனவே மூவர் முட்டி மோதிக் கொண்டு உட்கார்ந் திருந்தார்கள். இப்போதுதான் எனக்கு ஞாபகம் வந்தது, கியூவில் நிற்கும்பொழுது மேற்படி இளைஞன் வைத்திருந்த சில்லறைக்குக் கடலை வாங்கிக் கொறித்துக் கொண்டிருந்தது. ஆனல் நான் ஒரு சிறு புண்ணியங் கட்டிக் கொண் டிருந்தேன் அங்கே. யாரோ கதறிய ஒரு பிச்சைக்காரிக்கு இரண்டு சதம் போட்டேன். அதனுற்ருனே என்னவோ என்னுடைய வாங்கில் இருவரே இருந்துகொண்டிருந்தோம். அதாவது நான் மற்றவரோடு சொருகி உட்கார்ந்தால் மேற்படி மங்கைக்குப் போதிய இடங்கொடுக்கக் கூடியதாயிருந்தது. அவளும் உட்கார்ந்து கொண்டு நன்றியறிதலைத் தெரிவித்தாள்.

மகிழம்பூவின் நறுமணம் அடித்தது; தலைக்கு வைத்து முடிந்திருந்தாளாக்கும். ஆனல் அதே நிமிஷம் எதையோ நினைத்துக் கொண்டவன் போல் என் மனத்திலே ஒரு கேள்வி எழுந்தது. யாரிவள்? எங்கேயோ எப்போதோ கண்டறிந்த பெண் போலத் தோன்றியது. ஆனல் குறிப்பாகத் தெரியவில்லை. முகத்தைக் கூர்ந்து பார்த்தேன். ஆமாம்; அவளே தான். ஆனல் எவள்.........?

எனது மடியிலே ஒரு புத்தகம் வைத்திருந்தது ஞாபகம் வந்தது. "ஆயிரம் வித முத்தங்கள்" என்று ஒரு புத்தகம். அட்டையிலே இருவர் முத்தம் சுவைக்கும் படம் ஒன்று. இளம் பெண் ஒருத்தியின் அருகில் மேற்படி புத்தகத்தின் அட்டையை வெளியில் தெரியவைத்திருந்தால் அது காவாலித்தனம் என்று மனது சொல்லிற்று. அதனல் அப்படியிருந்ததை எடுத்துப் புரட்டி வைத்தேன். இதை அவள் கவனித்தாள். சற்றே சிரித்தாள்; அவள் கவனித்ததை நான் கண்டேன். சிரித்தேன். அவள் தனது சிரிப்பை வாயை மூடி அடக்கப்பார்த்தாலும், இரண்டு கன்னங்களிலும் நாலு குழிகள் அழகாக விழுந்தன! அந்தச் சிரிப்பும் அந்த நான்கு குழிகளும் மறுபடியும் அவளை எங்கேயோ கண்டிருக்கிறேன் என்று நினைவூட்டின.

"தங்களை எங்கேயோ கண்ட நினைவாயிருக்கிறது............பெயரைச் சொல்வீர்களா?........." என்றேன்.

"மஹாராணி" என்ருள்.

மஹாராணி! ஒருவேளை அண்ணன் எழுதியிருந்தாரே அவளாயிருக்குமோ என்று நான் யோசித்துக்கொண்டிருக்க, "உங்களை எனக்குத் தெரியும்போலிருக்கிறது" என்ருள் அவள்.

"எப்படி? எங்கே?"

"யாழ்ப்பாணத்தில் லக்ஷ்மி வித்தியாசாலையில் வாசல் மகிழ மரத்தடியில்..."

மறுபடியும் மகிழம்பூ மணம் முகத்தில் அடித்தது. 'தலையில் மகிழம்பூ வைத்திருக்கிறீர்களோ?"

"இல்லை, மகிழம்பூத் தைலம்—மகிழ மரத்தடியில் ஒரு பெண்ணுடன் கதைத்துக்கொண்டிருந்தீர்கள்"

"ஆனல் அப் பெண் நீங்களல்லவே!!

"உண்மை"

"நான் தங்கையைக் காண வந்திருந்தேன் போலும் — ஓஹோ! இப்போதுதான் நினைவு வருகிறது......... ராதை வைத்திருந்தாள் ஒரு புகைப்படம். ராதையும் வேறொருத்தியும் அதில், அவ் வேறொருத்தி நீங்கள்!

அந்தப் படத்திலும் மஹாராணி சிரித்துக்கொண்டுதான் நின்ருள். கன்னத்தில் நான்குளழிலின் பள்ளங்கள் கிடந்தன. இதோ இப்போது அவை என் அருகில்!

"இதற்கு முன்னர் உங்களை நேரே பார்த்ததில்லை. அதனல்தான் முதலில் தெரிந்து கொள்ளவில்லை. இப்போதும் அங்கேதான் படிக்கிறீர்களோ?"

"இல்லை; இனிப் படிப்பிக்கும் நோக்கம்"

(அப்படித்தான் அண்ணனும் எழுதியிருந்தார்!)

முன்னுக்கிருந்த இளைஞன் எங்கள் பக்கம் திரும்பினன். அவன் வாயில் பற்ருத ஒரு சிகரெட்டுத் தொங்கிற்று. இரண்டு கைகளையும் நெருப்புப் பெட்டி கொழுத்துவதுபோல் பாவனை செய்து கொண்டு என்னை நோக்கி "இருக்கிறதா?" என்று ஒரு கேள்வி போட்டான். அவன் திரும்பிப் பின்னுக் கிருந்த பெண்ணைப் பார்ப்பதற்குக் கண்டு பிடித்த ஒரு சாட்டுத்தான் அது. "இல்லையே!" என்று நொந்தேன். பிறகு திரும்பி விட்டான் அந்தப் பயல்.

பஸ் போய்க் கொண்டிருந்தது. ஜனங்களும் கதைத்துக் கொண்டிருந்தார்கள்: ஆங்கிலத்தில் சிலர்; சிங்களத்தில் பலர். பஸ் மூலை ஒன்றிலே ஒரு தமிழன் இருந்தான். ஆனல் அவன் கதைப்பதற்கு வேறு தமிழர்களைக் கண்டு கொள்ளாத படியால் "சிவனே" என்று சுருட்டொன்றை இழுத்துக் கொண்டு பேசாமல் இருந்தான்.

"இதுதான் கெதாம்பை தெரியுமா?" என்று மஹாராணியைக் கேட்டேன். அங்கே தெருவின் இருமருங்கும் செங்கற்களும், மரங்களும் குவியல் குவியலாகக் கிடந்தன. அவைகள் இரண்டு மாதத்துக்குமுன் போட்ட பெரு வெள்ளத்துக்கு முன் வீடுகளாயும், மாடிகளாயும் இருந்தவை.

"கெதாம்பை ஹிரோஷமா போலக் கிடக்கிறதென்று படித்தேன். ஆனல் பத்திரிகைப் புழுகாக்கும் என்று நம்பவில்லை. ஆனல்...... ..."

எங்களுக்கு முன்னிருந்த இளைஞன் திரும்பினன், அடுத்த முறையாக. "அதோ பாரும், அந்த மலையின் ஒரு சிகரம் அப்படியே புரண்டு விழுந்தது. கீழே பள்ளத்தில் பத்துக் குடிசைகளும் பல ஜனங்களும் பாதாளத்துக்குப் போனர்கள்" என்ருன். அவன் வாயிலிருந்து புகை என் முகத்தில் அடித்தது.

"தெரியும்" என்று சற்று விறைப்பகச் சொன்னேன். அவன் பயந்து போனனே, உடனே திரும்பிக்கொண்டு விட்டான்.

பஸ் போய்க்கொண்டே யிருந்தது. ஜன்னல் வழியாக வெளியே பார்த்தால் எங்கும் ஒரே பச்சை! மலைகள் கருநீலம்! ஈடில்லாத அழகு! ஆனல், எல்லாவற்றையும்விட அந்த வீதி இனிமை! எத்தனை எத்தனை வளைவுகள்! இன்ப வளைவுகள் அவை! அவ் வளைவுகளிலே வண்டி வெடுக்கென்று திரும்பும்போது நாங்கள் இருவரும் உராய்ந்து கொள்ளச் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

"மாத்தளையிலே எங்கே போகிறீர்கள்?" என்றேன்.

"சின்ன ராஜாத்தி தெரு"

"வீட்டிலக்கம்?"

"106"

"நான் போவது 105-ம் இல. வீடு."

"எந்தத் தெருவிலே?"

"அதே தெருத்தான்!"

ஆச்சரியமாய்த்தான் இருக்கிறது. நம்பிக்கொள்ளவே முடியவில்லை. நமக்குப் பேசப்படும் பெண்ணே நம்முடன் பேசிக்

கொண்டிருக்கிறுள் என்றது வெறுங் கற்பனேயல்ல. அண்ணன், எதிர் வீட்டுக்காரர் மூலமாகவே எனக்குப் பெண் தேடினுர்! அவள்தான் எத்தனே உயர்தரமான பெண்.

தெரு மூலேயொன்றிலே, சினிமா விளம்பரத்தில் அழகி யொருத்தி பல்லிளித்துக்கொண்டிருந்தாள். எங்கள் சம்பாஷணேயாகிய வண்டியை எனக்குப் பிடித்த மாதிரி வெட்டித் திருப்பினேன். "உக்குவளேயிலே புதிய படமாளிகை ஒன்று முளேத்திருக்கிறதாமே?"

"தெரியவில்லே."

"மணி 5 தானே இப்போது? முதற் காட்சிக்குப் போகலாமாவென்று யோசிக்கிறேன்."

"யார் தடுக்கிருர்கள்?"

"நீயும் வரவேண்டும்!"

'நீ' என்ற சொல்லில் அவள் மகிழ்ந்ததை அறிந்துகொண்டேன்.

பஸ் நின்றது; ரயில் பாதைப் படலேகள் தெருவை மறித்து மூடப்பட்டிருந்தபடியால். உக்குவளேச் சந்திக்கு இன்னும் சிறிது தூரம்தான் போக வேண்டும்.

"இங்கேயே இறங்கி நடந்தாலென்ன?"

ஆமென்று இறங்கினேன். கை கொடுத்து அவளேயும் இறக்கினேன். பிறகு இருவருமாகப் போனேம். போகும்போது நான் திரும்பிப் பார்த்தேன். எங்களுக்கு முன்னுலிருந்த அந்த இளேஞன் என்னே நோக்கிக்கொண்டிருந்தான்!

ஆனல் அந்தப் பார்வையில் நான் சாம்பலாகிப் போய்விடவில்லே!

## பத்ருஹரி நீதி சதகம்

சமஸ்கிருத மூலத்திலிருந்து தமிழாக்கஞ் செய்யப்பட்டது.

[எஸ். என்.]

---

மகரமீன் வாயிலுறு மணிதனைக் கோள்ளலாம்
மறிதிரைக் கடல்தாண்ட லாம்
மாறிக்கனல் கொண்டு சீறும்பு யங்கத்தை
மாலையாய்ச் சிரசிலிட லாம்
பகருபேய்த் தேரிலே நீர்வேட்கை தீர்க்கலாம்
படுமணலி லெண்ணெய் கொளலாம்
பசியகா னெங்கணுந் தேடித்தி ரிந்திடிற்
பலமுயற் கொம்புபெற லாம்
புகருடைய வேழமது தாமரையி னூலினுற்
போற்றியிறு கக்கட்டலாம்
பூவில்வரு மதுவிலொரு துளிகொண்டு கடலினைப்
புதுமதுக் கடலாக்கலாம்
தகவுடைய வச்சிரக் கல்லின யனிச்சமலர்
நுனியாற் றுறித்துவிட லாம்
தான்கொண்ட முயலுக்கு மூன்றுகா லெனுமடையர்
தம்மனம் மாற்றலரி தே.

# "யாரை நோவேன்?"

—: த. பாலசுப்பிரமணியம் :—

அப்பொழுதுதான் நாங்களிருவரும் வீதி திரும்பினேம். பிரதம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுச் சிலநாள் ஆறுதலுக்காக வீட்டிலே தங்கியிருந்த எனது தகப்பனருடன் தன்னை மறந்து அளவளாவிப் பேசிக்கொண்டிருந்த எனது தோழன் முஸ்தபா "வாழ்வனைத்தும் மயக்கமெனத் தேர்ந்தேன், தேர்ந்தவாறே யான் அப்பாலோர் வழி பாராமல் தாழ்வுபெற்று இங்கிருந்தேன்" என்ற தாயுமானவரின் பாடலைப் பாடி ஏதோ வியாக்கியானம் செய்துகொண்டிருந்தான் "முஸ்தபா, என்ன கோலம்? என்ன மாறுதல்? இது எங்ஙனம்?" என்று ஆச்சரியத்தால் வினவிக்கொண்டேன். இரண்டு வருடங்கட்குமுன் என்னுடன்கூட அரசாங்க சேவையிற் கடமை பார்த்த நண்பன் முஸ்தபாவுக்கும், இப்போ என்முன் தேகம் உருக்கெட்டுத் தாடி மீசையுடன் தோற்றமளித்த துறவி முஸ்தபாவுக்கும் எவ்விதம் தொடர்பு கூறமுடியும். "வாழ்க்கையில் இது ஒரு தோற்றம். அன்ப, வாழ்வில் எதிர்பாராதவாறு பேரிடியால் தாக்குண்டு தவிக்கும் எனது வரலாற்றை உனக்கு விபரிக்கவே இங்கு வந்தேன். தந்தையாருடன் வேதாந்த விசாரணையில் ஈடுபட்டுக் கதைத்துக்கொண்டிருக்கிறேன்" என முஸ்தபா சுருக்கமாய்ப் பதிலுரைத்தான். தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆழ்ந்த அறிவும், சமய ஆராய்ச்சியிலே திறமையும் பெற்ற எனது நண்பனின் வாக்கு வன்மையில் வசீகரிக்கப்பட்ட எனது தந்தையார் சம்பாஷணை தொடர்ந்து நடைபெறுவதை விரும்பும் நோக்கங் கண்டு யான் மெல்ல நழுவினேன். வெள்ளவத்தை இராமகிருஷ்ண சங்க மண்டபத்தில், சுவாமி நித்தியானந்தாவினி "வாழ்க்கையின் தத்துவம்" என்னும் உபந்நியாச விருந்தில் உண்டு மகிழ்ந்து திரும்பிய எம்மிருவருக்கும், முக்கியமாய் என் மனைவிக்கு, வீட்டில் விருந்தாளியொருவர் வந்திருப்பது மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது. எனது குறிப்பறிந்து லட்சுமி நணபனை உபசரிக்கும் கடமையில் ஈடுபட்டாள்.

ஞாயிற்றுக்கிழமைகளில் இரண்டு மணிக்குத்தான் போசனத்தை எதிர்பார்க்கும் எனக்கு அன்று பகற்சாப்பாடு மத்தியானம் பன்னிரண்டரை மணிக்கே ஆயத்தமாயிருந்தது ஆச்சரியத்தைக் கொடுக்காமலிருக்கவில்லை. தன் கணவனின் நண்பன் விருந்தினனுய் வீட்டில் இருக்கையில் வழக்கம்போலச் சாப்பாட்டைச் சுணக்குவது அழகல்ல என்பதை எண்ணியோ ஏதோ என் வாழ்க்கைத் துணைவி வந்து "சாப்பாடு ஆயத்தம், முஸ்தபாவை அழையுங்களேன்" என்று சொன்னபொழுதுதான் என் து வயிற்றில் பசி தோற்றுவதை உணர்ந்தேன். வேதாந்த விசாரணையும் கிட்டத்தட்ட முடிவுற்றது.

ஒருவாறு வயிற்றைநிரப்பிக்கொண்டு உன் மண்டபத்தில் அமர்ந்தோம். முஸ்தபாவின் பழைய வரலாறுகளை என்னிடமிருந்து அறிந்திருந்த என்மனைவி அவனது வாழ்க்கையில் ஏற்பட்ட அனர்த்தத்தை அறிய ஆவல்கொண்டு எங்களருகில் அமர்ந்தாள். முஸ்தபாவும் தனது வாழ்க்கை விபரத்தைச் சொல்லத் தொடங்கினுள்.

சுலைகா உம்மாவையிட்டும் யான் சொல்வதற்கென்ன இருக்கிறது. என் பூர்வ ஜென்ம புண்ணிய பலனுய் என் மனைவியாய் வாய்த்த சுலைகாவையிட்டு யான் பல முறையும் சொல்லியிருக்கி

றேன். மணமாகி ஒரு வருடத்தால் ஆயிஷா பிறந்தாள். ஆயிஷா பிறந்த விழாவுக்கு நீயும் வந்தாயல்லவா? அன்று என் தாய் தகப்பனாரும் வந்திருந்தார்கள். ஆம், அன்றுதான் பிடித்தது சனியன். எனது பெற்றோருக்குச் சுலைகாவின் முற்போக்குப் பிடிக்கவில்லை. "படித்தவளென்றதினால் இவ்விதம் ஆண்கள் மத்தியில் ஊடாடுவதா? சாதி சமயக் கட்டுப்பாடு இல்லையா? ஒழுக்கம், ஒடுக்கம், ஒழுங்கு இல்லையா? உனக்கு அறிமுகமானவர்கள் என்றால் எல்லோரிடமும் பகிரங்கத்தில் நின்று பேசிச் சிரித்துக் கதைப்பதா? சுலைகாவின் போக்கு வேறானது. அதைக் கட்டுப்படுத்திக்கொள். பிறகு எங்களிலே பிழை சொல்லாதே" என்று எனது தாயார் என்னை எச்சரித்தார். சுலைகா என்ன தவறு செய்துவிட்டாள் என்று எனக்கே விளங்கவில்லை. தாயார் சொல்வதைச் சொல்லிப்போகட்டும் எனப் பேசாதிருந்தேன். யான் அதை அவ்வளவில் மறந்துவிட்டேன். எனது தாயாரின் மனத்தில் மருமகளையிட்டு ஓர் கெட்ட அபிப்பிராயம் வேரூன்றிவிட்டது என்பதையிட்டு யான் அப்பொழுதுகொஞ்சமும் சிந்திக்கவில்லை. பழைய முறைகளைக் குரங்குப் பிடியாய்ப் பிடிப்பவர்கள்; அவர்களைத் திருத்துவதற்கு நாம் ஏன் முற்படவேண்டும் என எண்ணி என் பாட்டில் இருந்துவிட்டேன்.

ஆயிஷாவுக்கு இரண்டு வயது பூர்த்தியாகவில்லை. அதற்கிடையில் நீ மட்டக்களப்பிலிருந்து மாற்றப்பட்டுவிட்டாய்; அதைத் தொடர்ந்து இரண்டு வாரத்தில் யானும் அநுராதபுரத்திற்கு மாற்றப்பட்டேன். செல்வத்திலே பிறந்து, செல்வத்திலே வளர்ந்து, என்னைக் கைப்பிடித்த பின்னும் செல்வம் குறையாதிருந்த என் மனைவியையும், எங்களிருவரது அன்பின் குறியாக அவதரித்த ஆயிஷாவையும் விட்டுப்பிரிய மனமில்லாவிடினும், அநுராதபுரத்திற்கு அவர்களைக்கொண்டு சென்று காய்ச்சலால் வாட்டி வதைக்க எனக்கு மனம் இசையவில்லை. ஆகவே, என் குடும்பத்தை மட்டுக்களப்பில் எனது பெற்றோருடன் விட்டு, யாம் இருந்த வாடகை வீட்டைக் காலி செய்துவிட்டு, யான் அநுராதபுரம் வந்து சேர்ந்தேன். என் இதயராணியான சுலைகாவை விட்டுப் பிரிந்ததனால் ஏற்பட்ட வேதனையைத் தாங்கமுடியாது தவித்தேன். ஆயிஷாவின் மழலை மொழியைக் கேட்பதற்கு அங்கலாய்த்தேன். வாரத்துக்கு மூன்று தடவை கடிதம்வந்துகொண்டேயிருக்கும். சுலைகாவின் கடிதங்களே எனது தனிமையை மறக்கச் செய்து உற்சாகமளித்தன. என் அமைதியற்ற வாழ்வில் என் நாயகியின் கடிதங்கள் எனக்குத் தற்காலிகமான ஆறுதலையும் அமைதியையும் கொடுத்தன. காகிதம் ஒரு நாள் முறை தவறிப் பிந்தி வந்தாலும் என் மனச்சாந்தி குலைந்துவிடும். இக்கடிதங்களே எங்களிருவருக்குமிடையில் ஏற்பட்ட அன்புப் பிணைப்பை இறுகச்செய்து கொண்டு வந்தன.

இப்படியே மாதங்கள் பல கழிந்தன. இதற்கிடையில் யான் மூன்று தடவை மட்டக்களப்புக்குப் போய் வந்தேன். ஆனால், ஆயிஷாவின் பிறந்த தினத்தன்று யான் அங்கு நிற்கமுடியவில்லை. நீ ஆயிஷாவுக்கு அம்முறை அனுப்பிய வாழ்த்துச் செய்தியையும், வெகுமதியையுமிட்டு சுலைகா எனக்கு அடுத்த நாள் எழுதியிருந்தாள். "உங்கள் நண்பர் ஆயிஷாவை மறக்கவில்லை. ஆயிஷாவும் மாமா என்றதை மறக்கவில்லை. அவர் உங்களுக்குக் கடிதம் எழுதவில்லையோ?" என வினவியிருந்தாள். சுலைகா போன்ற ஒரு உத்தமியை உனது சகோதரியாகப்பெறவாய்த்தது உனது அதிர்ஷ்டமல்லவா? அன்புக்குச் சாதி சமய பேதங்கள் உண்டா? அதற்கும் கட்டுப்பாடு உண்டா?

ஒரு நாள் எனது தாயாரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. "மகனே, உனது மனைவி சுலைகா உம்மாவுக்கு எங்களிடம் இருப்பது வில்லங்கம்போல் தோற்றுகிறது. எங்கள் வறுமையை அவளால் சகிக்க முடியவில்லை போலும்! அவளைத் திரிகோணமலைக்கு அவளது பெற்றோரிடம் அனுப்பிவை. அதையே அவள்

விரும்புகிறாள். அவளது முற்போக்குக்கு அவளது பெற்றோர் வீடுதான் சரி. ஆனால்; அங்கு அனுப்புவதற்குமுன் அவளது தகப்பனார் உனக்குக் கட்டித்தருவதாகச் சொல்லிய வீட்டையிட்டு எழுதிக் கேள். வீடு கட்டித்தந்தால் அன்றி அங்கு போவதற்கு அநுமதியாதே'' என்று தாயார் எழுதியிருந்தாள். அக்கடிதத்தினின்றும் என் மனைவியின் போக்கு எனது தாயாருக்குப் பிடிக்கவில்லை; ஆகவே, அவளை அங்கு வைத்திருக்க விருப்பமில்லாமல் அவளது பெற்றோர் வீட்டுக்கு அனுப்பி வைக்க எண்ணுகிறார்கள் என ஊகித்துக்கொண்டேன்.

அடுத்த தினம் என் மனைவியின் கடிதம் வந்தது. 'மாமி என்னை எவ்வளவோ பிரியத்துடன் நடத்தி வந்தவ. ஆயிஷாயின் முதலாண்டு விழாவில் அவசொல்லிய மொழிகள் நினைப்பிலிருக்குந்தானே! அன்று தொடக்கம் இன்று வரையும் என்ன காரியத்திற்கும், ஒடுக்க அடக்கமில்லாத பெண்களை வீட்டில் வைத்து எவ்விதம் ஆறுதலாயிருக்க முடியும்' என்று வசைமாரி பொழிவா. மாமாவுடன் அவ கோபித்தாலும்அதுதான் வார்த்தை. உங்கள் சகோதரியுடன் அவ முரண்பாடுற்றாலும் அதுதான் பேச்சு. அது என்னைக் குறித்துப் பேசுவது எனக்கு விளங்கும். ஆனால், யான் மறு வார்த்தை பேசுவதில்லை. இப்போ இரண்டு தினங்களுக்கு முன் திரிகோண மலையிலிருந்து எனது தங்கையின் கடிதம்வந்தது. அதில் என்னை ஒருக்கால் அங்கு வருமாறு செயினம்பு கேட்டிருந்தாள். சகோதரி எழுதியதையிட்டு மாமிக்குச் சொன்னேன். மாமிக்குக் கோபம் வந்து விட்டது. 'வாக்களித்த பிரகாரம் வீடுகட்டிக்கொடுக்காத உனது பெற்றோர் வீட்டுக்கு நீ போக வேண்டிய அவசிய மில்லை. முதல் வீட்டைக் கட்டித் தரச் சொல்லு. நீ அங்குதான்போ; இங்கிருக்க வேண்டாம் உனக்கு இது தகுதியான வீடல்ல' என்று ஏதோ ஆர்ப்பரித்தா. யான் வாயும் திறக்க வில்லை. மாமிக்கு யான் என்ன தவறு செய்து விட்டேன் என எனக்கு விளங்கவில்லை. நீங்கள் வந்து என்னை அழைத்துப் போகுமளவும் யான் எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு இங்குதான் இருப்பேன் என்று ஓர் நீண்ட கடிதம் வரைந்திருந்தாள்.

இவ்விரு கடிதங்களுமல்ல; ஒன்றன்பின் ஒன்றாக அநேக கடிதங்கள் எனக்கு வந்தன. தாயாரின் கடிதங்களில் மருமகன்மேற் குற்றச் சாட்டுகள் மலிந்து கிடந்தன. ஆனால் சுலைகாவின் கடிதங்களோ அவன் சகிப்புத் தன்மையில் அதிகம் கை தேர்ந்தவன் என்பதைக் காட்டின. ஆனால் எவ்வளவு நாட்களுக்குச் சகிக்கக் கூடும். அதற்கும் ஒரு முடிவு இருக்குந்தானே! என் மனைவியிடமிருந்து ஒரு நாள் ஒரு கடிதம் வந்தது. அதுதான் என் வாழ்வின் ஒளி விளக்கமாயிருந்த சுலைகா எழுதிய கடைசிக் கடிதம். அதைப் பத்திரமாய் வைத்திருக்கிறேன். இதோ வாசித்துப் பார் என என் கையில் ஒரு வெள்ளிப் பேழையில் பத்திரமாய் மடித்து வைத்திருந்த ஒரு கடிதத்தை எனக்கு முஸ்தபா கொடுத்தான். நடுக்கமுறும் கைகளால் அதைப் பற்றி வாசித்தேன்.

''நாதா,

தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை, உங்கள் தாயாரை யான் குறை பேசுவதற்கு இசையேன். என் காலபலன் என்னைப் போட்டு வருத்துகிறது. யான் முந்தி எழுதிய பிரகாரம் நாளை பிரயாணம் பண்ணுகிறேன். நீங்கள் வாடகைக்கு அமர்த்தியிருக்கும் சிறு வீட்டில் யாம் எளிமையாகக் குடித்தனம் பண்ண முடியும் என்று நம்புகிறேன். யான் தனியே பிரயாணம் பண்ணுவதையிட்டு ஆலோசிக்க வேண்டாம். இஸ்மாயிலும் கூடிவருகிறான் தானே! அவன் இருந்தால் வீட்டிற்கு ஆளே தேவையில்லை, ஆகவே கூட்டி வருகின்றேன்.

என்னைத் திரிகோணமலைக்குப் போகுமாறு கேட்டிருக்கிறீர்கள். அவர்கள் வீடு கட்டித் தராவிடினும் பரவாயில்லை

எழுதினீர்கள். யான் அங்கே போவதை உங்கள் தாயார் விரும்பமாட்டார். அத்துடன் எனக்கு உங்கள் அருகிலிருப்பது தான் முக்கியம். வாழ்விலும் தாழ்விலும் நீங்காத அன்புடையராய் யாமிருக்க வேண்டும் என்று பலமுறையும் சொல்வீர்கள். அவ்வித அன்பை மேலும் பெறுவதற்காய் யான் உங்கள் காலடியில் இருக்கவே விரும்புகிறேன்; உங்கள் சிறு வாடகை வீடு எனது மாளிகை; அதுவே சுவர்க்கம். யான் வருவதைத் தடுக்கவேண்டாமெனப் பணிவுடன் கேட்கிறேன். வியாழன் காலை அநுராதபுரம் புகைரத ஸ்தானத்தில் சந்தியுங்கள்.

பிராணபதி, யான் இதையிட்டு மாமி, மாமா, மைத்துனி முதலியோர்க்கும் சொல்லி அவர்களையும் இசையச் செய்துவிட்டேன். நீங்கள் ஒன்றையிட்டும் கவலை கொள்ள வேண்டாம்.

இன்னும் இரண்டு தினங்கள்தான். அடியாளும் உங்கள் செல்வி ஆயிஷாவும் உங்கள் அருகிலிருப்பார்கள். நாதா, என் அன்பு முத்தம். ஆயிஷாவின் ஆசை முத்தங்கள்.

உங்கள் பிரியமுள்ள,
சுலைகா.

வாசித்து முடிந்ததும் முஸ்தபாவை உற்று நோக்கினேன். அவனது குழி விழுந்த இரு கண்களினின்றும் பொலு பொலெனக் கண்ணீர் வழிந்து சொரிந்து கொண்டிருந்தது. என் மனைவியின் முகமும் வேறுபட்டுக் கண்கள் கலக்கமுற்றிருந்தன. முஸ்தபா தொடர்ந்து கூறினன்.

கடிதம் கிடைத்ததும், என் தாயாருக்கும் சுலைகாவுக்கும் ஒற்றுமை யில்லாதபோது ஓரிடத்தில் இருப்பது முறையல்ல என எண்ணி, சுலைகா வருவது தான் தகுந்த வழி என எண்ணினேன். யான் சில தினங்களாக வாடகைக்கு எடுத்து வசித்து வரும் வீட்டை என் மனைவியின் வருகைக்காக ஆயத்தப் பண்ணினேன். வீட்டுத் தளபாடங்கள் வேண்டுவதிலும், அவற்றை முறையே வைத்துக் காப்பாற்றி வருவதிலும் கை தேர்ந்த எனது மனைவி சுலைகாவின் திறமைக்கு முன் எனது ஆயத்தங்கள் எம்மாத்திரம்! ஒருவாறு வேண்டிய ஆயத்தங்களைச் செய்து விட்டுப் படுக்கைக்குச் சென்றேன். இரவு பன்னிரண்டு மணியாகியும் நித்திரை வரவில்லை. என் மனோகரி சுலைகா புகை வண்டியில் பிரயாணஞ் செய்து வருவதையிட்டுக் கற்பனை செய்தேன். யான் சென்று கூட்டிவர லீவு இல்லாததை யிட்டு எண்ணி மனம் வாடினேன். சிறு பிள்ளையுடன் எவ்வித தொல்லைப் படுகிறாளோ என்று புழுங்கினேன். ஆனாலும் முடிவில் சுலைகாவின் சுந்தர வதனத்தை 'நாளைக் காலை காண்பேன் என மனம் பூரிப்படைந்தேன். இரவு இரண்டு அடித்தது. சிறிது நேரத்தால் ஒரு விதமாய்த் தூங்கி விட்டேன்.

கிறீச் கிறீச் என்ற சத்தம்; அம்மம்மா அம்மம்மா என்ற அழுகைக் குரல். ஐயோ, நாதா! இவ் வளவில்... எங்கள் வாழ்வு அற்றுப்போவதா? இவ்விதம் நேரிடுமென்று யான் எண்ணி யிருக்க வில்லையே! பிராணேசா! யான் போக விடை கொடுங்கள். ஆயிஷா, என் கண்ணே! உன்னையும் உனது அப்பாவையும் தவிக்க விட்டுச் செல்கிறேன். ஆருயிர்த் துணைவரே! யான் சென்று வருகின்றேன். என்று என் மனைவியின் குரலில் சில வார்த்தைகள். சட்டெனத் திடுக்கிட்டு எழும்பினேன். மணி நாலரை அடித்தது. இது என்ன கெட்ட சொர்ப்பனம். என எண்ணிக் கவலை யுற்றேன். எனது உடம்பு நடுக்கமெடுத்தது. சுலைகா கனவிலே தோன்றி இவைகளைச் சொல்வதற்குக் காரணம் என்ன என அறியாது திகைத்தேன். இது கனவு மல்ல; நினைவுமல்ல; உண்மையில் என் மனைவி சுலைகா பேசிய மாதிரி இருந்ததே! இது என்ன? எனக் கலங்கினேன்.

அநேக பயங்கர எண்ணங்கள் என் மனத்தில் தோன்ற ஆரம்பித்தன. இது என்ன விந்தை! சுலைகா இவ்விதம் கூக்

குரலிடவும் சொல்லவும் காரணம் என்னவென்பதை அறியாது என் மனம் கலங்கியது. சுலைகா பிரயாணம் செய்யும் புகைவண்டி அனுராதபுரம் வர இன்னும் அரை மணித்தியாலம் இருந்தது. என்றாலும் ஏதோ எண்ணங் கொண்டு கால் மைல் தூரத்திலிருக்கும் புகையிரத ஸ்தானத்துக்கு ஓடோடியும் சென்றேன். அங்கே ஒரே பரபரப்பு. புகையிரதம் புரண்டு விட்டதாம்! பிரயாணிகள் அநேகருக்குச் சேதமாம் என அறிந்தேன். விபத்து ஏற்பட்ட இடம் சேர எண்ணி, ஓர் மோட்டார் வண்டியில் அதி விரைவாகச் சென்றேன். ரத்மலைக்கும் அனுராதபுரிக்கும் இடையில் யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த புகையிரதம் சில புரட்சிக்காரரால் கவிழ்க்கப்பட்டது நினைப்பிலிருக்கின்றதா? அந்த வண்டியிலேதான் எனது சுலைகாவும் பிரயாணஞ் செய்தாள். ஆகவே, என் மனைவியின் பாடு ஏதோ, என் பிள்ளையின் பாடு ஏதோ என எண்ணிக்கொண்டே உடைந்து முறிந்து தகர்ந்திருக்கும் புகையிரதப் பெட்டிகளை நெருங்கினேன். எனது இரண்டரை வயதுக் குழந்தையின் தலையிலிருந்து இரத்தம் சிந்தியவாறு அருகிலே பெருங் காயங்களுடன் படுத்திருந்த இஸ்மாயிலின் மடியிலிருந்து வெதும்பி அழுது கொண்டு நின்றாள். அவளைக் கட்டி அணைத்துத்தூக்கினேன். "அம்மா, அம்மா, அங்கே அப்பா" என்று என் குழந்தை அழுது ஒரு பக்கத்தைச் சுட்டிக் காட்டியது. அங்கு யான் கண்ட காட்சியின் கோரத்தை வர்ணிப்பதெங்ஙனம்! என் மனைவி சுலைகாவின் உடலம் ஒரு பக்கத்தில் நெரிந்து முறிந்து துவண்டு கிடந்தது. என் இதயம் வெடித்து விடும் போலிருந்தது. எனக்கு ஒன்றுமே தெரியவில்லை. என்னையறியாது அலறினேன்; வெதும்பினேன்; புரண்டேன்; சில விநாடியால் மயக்கமடைந்து விட்டேன்.

முஸ்தபாவின் சோக வரலாற்றைக் கேட்டுக்கொண்டிருந்த எனது மனைவியே விம்மி விம்மி அழத் தொடங்கி விட்டாள் என்றால் முஸ்தபாவின் நிலை எவ்விதமாகுமென்று இங்கு கூறவேண்டியதில்லை. அடுத்த அறையில் இருந்த எனது தந்தையாரும் அழுகைக் குரல் கேட்டு அங்கு வந்துவிட்டார். தன் அருமருந்தன்ன மனைவியை இழந்து தவிக்கும் முஷ்தபாவுக்கு ஆறுதல் மொழி கூறிச் சமாதானம் செய்தோம். முஸ்தபா தொடர்ந்து சொன்னது இதுவே.

யான் இனிச் சொல்ல வேண்டியது என்ன இருக்கிறது. சுலைகா என்று மறைந்தாளோ அன்றே உன் நண்பன் முஸ்தபாவும் மறைந்து விட்டான். சுலைகாவின் கணவன் முஸ்தபா அல்ல, அல்ல அவன் சாயலே இப்பொழுது இங்கு இருக்கிறது என்று எண்ணிக் கொள். சுலைகாவின் மரணத்துக்காக யாரை நோவேன். என்னை நோவதா, என் தாயாரை நோவதா, அல்லது வேலை நிறுத்தங்காரணமாய் ரயிலைக் கவிழ்க்கச் சதி செய்த புரட்சிக் கூட்டத்தினரை நோவதா? என் பத்தினி இறந்து விட்டாள். அவளது கடைசிக் கடிதம்தான் எனது அரிய பொக்கிஷம். எங்கள் செல்வக் குழந்தை சுலைகாவின் சகோதரி செயினம்புவுடன் வளர்கிறாள். எனக்கு வாழ்க்கையில் இனி என்ன வேண்டியிருக்கிறது? அரசாங்க சேவையிலிருந்து நான் இளைப்பாறி இப்போ பத்து மாதங்களாகி விட்டன. யான் பரதேசிக் கோலங்கொண்டு விட்டேன். ஆண்டவன் சித்தப்படி நடக்கும். அவன் ஒருவனே எங்கள் வாழ்வை நிர்ணயிக்க முடியும்!.........ஆம், முஸ்தாபா, அவனே வல்லவன் என்றேன்.

———

# நீரறியும் நெருப்பறியும்

—( து. பெரியதம்பி )—

கார்கெழு பருவம் வாய்ப்பக் காமுறு மகளிருள்ளம்
சீர்கெழு கணவன் தன்பால் விரைவுறச் செல்லுமாபோல்
நீர்கெழு பௌவம்நோக்கி நிரைதிரை இறைத்துச்செல்லும்
பார்கெழு புகழின்மிக்க பண்புடை வைகையாறு.

இங்கே இரு பெருக்குகள் ஒப்பிடப் படுகின்றன: ஒன்று, காமுறு மகளிருள்ளப் பெருக்கு; மற்றது, வைகை நதிப் பெருக்கு. பெருக்கு மிகுதியினாலே அவற்றின் ஓட்டமும் மிக வேகமாகிறது. போர்முகம் நோக்கிச்செல்லும் தலைவன், தன் பிரிவு கருதி ஆற்றாத தலைவியைத் தான் கார் காலத்தில் வந்துவிடுவதாகக் கூறி ஆற்றிச் செல்வான். கார்காலம் எப்பொழுது வரும் என் கணவன் என்று வருவான் என ஆவலுடன் எதிர் பார்த்திருப்பாள் தலைவி. ஒரு பொழுதை ஒரு யுகமாகக் கருதி நாட்களைக் கழித்துக்கொண்டு வருவாள். ஒருவிதமாகக் கணவன் கூறிச்சென்ற கார்காலமும் வந்துவிடுகிறது. ஆனால், கார்காலத்தில் வருவதாகக் கூறிச்சென்ற கணவனே வந்தபாடில்லை. இங்கே தனித்திருக்கும் தலைவி அவனை ஆவலுடன் எதிர்பார்த்து அவன் நினைவுடனே இருக்க இந்தப் பொல்லாத கார் காலக் காட்சிகள் அவள் காமக் குறிப்பை இன்னும் மிகுவிக்கின்றன. விலங்குகளும் புட்களும் துணையோடின்புற்று விளையாடுகின்றன; அதைக் காணுகிறாள். 'புல்லை மேய்ந்து கொல்லேற்றுடனே புனிற்றா கன்றை நினைத்து மன்றிற் புகுகின்றது;' இதையும் காணுகிறாள். இவற்றையெல்லாம் காண அவள் காமக் குறிப்பு இன்னு மின்னும் பெருகுகிறது. தீங்குழலிசையைக் கேட்கின்றாள்; பந்தர்முல்லை வந்து மணம் வீசுகின்றது. இவற்றை அனுபவிக்க இன்னுமவள் உணர்ச்சி பெருகுகிறது. உடனே, மிக வேகமாக எத்தனையோ மைல்களுக்கு அப்பால் இருக்குங் காதலனிடம் அவளுள்ளம் பாய்கின்றது. இப்போதான் அவள் மனம் காதலனை நோக்கிச் செல்லுகிறது என்பதல்ல. இதுவரை இத்துணை வேகமாக ஓடவில்லை.

கார் காலத்தில் பிரிந்திருக்கும் கணவனை நோக்கி ஒரு பெண்ணின் உள்ளம் எவ்வளவு வேகமாகச் செல்லுமோ அத்துணை வேகமாக இந்த வைகை நதியும் ஓடுகிறது என்று சேக்கிழார் சுவாமிகள் குறிப்பிடுகிறார்கள். நதியைக் காதலியாகவும், சமுத்திரத்தைக் காதலனாகவும் கற்பித்துக் கூறும் வழக்கமுண்டு. வைகை நதி என்ற காதலிக்கும் கார் காலத்திலே காதல் நினைவு பெருகிவிடுகிறது. வைகை நதியின் வேகம் மனோ வேகத்திற்கு ஒப்பாக இருந்தது என்பதையே ஆசிரியர் இங்கே கூற எண்ணினர் போலும்!

இப்பாட்டில் ஆசிரியர் வைத்த சொல்லடுக்கையும் நாம் சிறிது கவனிக்கவேண்டும். "நிரை திரை இறைத்துச்செல்லும்" என்று கூறுகிற இடத்தில் அதிற் பிறக்கும் ஓசை நயம் ஓரளவிற்காவது நமக்கு நதியின் ஓட்டத்தை நினைவுறுத்தாது விடமாட்டாது.

வைகை நதியிடத்தில் இன்னோர் சிறப்பியல்பு இருக்கின்றது. மற்றெந்த நதிக்கும் கிடையாத ஒரு தனிச் சிறப்பு. பாட்டின் தரமறிந்து மதிப்பீடு செய்ய அதற்கு நிரம்பிய ஆற்றலுண்டு. இதனாற்றான்

போலும் "பார்கெழு புகழின்மிக்க பண்புடை வைகை ஆறு" என்று ஆசிரியர் கூறுகிறார். முன்பு ஒருமுறை சமணர் எண்ணாயிரவரால் இயற்றப்பட்டுத் தொடர்பின்மை காணாது பாண்டியனால் எறியப்பட்ட பாக்களில் நல்லதெனக் கண்ட நாலூறு பாக்களை எதிரேற்றிய பெருமையை அறிவோம். இரண்டாம் முறையாக இன்னொருதரம் இந்த வேகமான நதியின் மதிப்பிடுமாற்றல் புலப்படப்போகின்றது!

புனல்வாதிடச் சமணர்கள் திருஞான சம்பந்த சுவாமிகளை அழைத்தார்கள். அதற்கிணங்கிச் சுவாமிகள், பாண்டியனுந் தேவியும் குலச் சிறையாரும் உடன் வர வைகை நதிக் கரையை அடைந்தார்கள். அவர்கள் வைகை நதியை அடைந்தபோது அந்நதி எவ்வாறு ஓடிக்கொண்டிருந்தது என்பதை மேற்கூறிய பாட்டிற் பார்த்தோம். மனோவேகத்திற் பாயும் இந்நதியிலேதான் துணிந்து இரு பகுதியாரும் தம் ஏடுகளை இட்டார்கள். முதலிற் சமணரே இட்டார்கள். பாவம்!

"படுபொருளின்றி நெல்லிற் பதடிபோல் உள்ளிலார் மெய்
அடுபவர் பொருளை 'அத்திராத்தி' என்றெழுதி ஆற்றில்
கடுகிய புனலைக் கண்டும் அவாவினாற் கையிலேடு
விடுதலும் விரைந்து கொண்டு வேலைமேற் படர்ந்ததன்றே"

அவர்கள் இட்டதுதான் தாமதம் விரைந்து சென்று கடலுட் கலந்துவிட்டது. நதியிலே நீர் விரைந்து செல்வதைக் கண்டாவது "படு பொருளின்றி நெல்லிற் பதடிபோல் உள்ளிலார்" புனல் வாதை நிறுத்தினார்களா? இல்லை, வேகத்தைக்கண்டு ஒருகால் நிறுத்திவிட அவர்கள் மனந் துணிந்ததும் உண்டு. ஆனால், அவா அதை வென்றுவிட்டது. விட்டார்கள் : நதிகொண்டு கடலுட் சேர்ந்துவிட்டது. சமணர்கள் தமக்கு "ஈறு வந்தெய்திற் றென்று" அஞ்சினார்கள். ஏன்? முன்பு "தனிவாதிலழிந்தோமாகில் வெங்கழு ஏற்று வானிவ் வேந்தனே" என்று கூறியிருக்கிறார்கள்! என்றாலும்,

"ஊறுடை நெஞ்சில் அச்சம் வெளிப்பட ஒளிப்பார் போன்று
'மாறு கொண்டிருமிட்டால் வந்தது காண்டும்' என்றார்"

உடனே பிள்ளையாரும் தமது ஏட்டை ஆற்றில் இட்டார்,

"திருவுடைப் பிள்ளையார்தந் திருக்கையால் இட்டஏடு
மருவுறும் பிறவியாற்றில் மாதவர் மனஞ்சென் றாற்போல்
பொருபுனல் வைகை யாற்றில் எதிர்ந்துநீர் கிழித்துப் போகும்
இருநிலத் தோர்கட் கெல்லாம் 'இது பொருள்' என்று காட்டி"

சாதாரண வேகத்துடன் ஓடிக்கொண்டிருக்கும் ஒரு ஆற்றில் பிள்ளையார் இவ் வேட்டை இட்டதாகக் கூறியிருந்தால் அப்பொழுது அவர் பெருமை அத்துணைச் சிறந்ததாக மற்றவர்களாற் கருத முடியாது. ஆகவே, முதலில் நதியின் வேகத்தை மனோவேகத்திற்கு ஒப்பாக வர்ணிக்கின்றார். அதையே நாம் முதற் பாட்டிற் பார்த்தோம். இப்பாட்டிலும் "பொருபுனல் வைகையாற்றில் எதிர்ந்து நீர் கிழித்துப்போகும்" என்று கூறுகிறார். சதா மயக்கத்தையே கொடுக்கும் இவ் வாழ்விலே மாதவர் மனஞ் சலனமடையாது எங்ஙனம் அதன் ஓட்டத்திற்கு மாறாக எதிரேறுமோ அங்ஙனமே இந்த வேகமான நதிக்கு எதிராக அடிகளிட்ட ஏடு எதிரேறியது.

இங்ஙனம் வைகை நதியிலே இவ் வேடு எதிரேறிய சிறப்பைத் தமிழின் பெருமையாக அறிஞர்கள் கூறுகிறார்கள். ஆசிரியர் திருவனந்தைச் சுந்தரம்பிள்ளை அவர்கள்,

"வேகவதிக் கெதிரேற விட்டதொரு சிற்றேடு
காலநதி நினைக்கவராக் காரணத்தி னறிகுறியே"

என்று கூறுகிறார். ஆரிய பாஷை எழுத்து வழக்கத்திலிருந்த போதிலும் கால வெள்ளம் பேச்சு வழக்கினின்றும் அதை அள்ளிச் சென்றுவிட்டது. அங்ஙனம் தமிழ் மொழியையும் அந்தக் கால வெள்ளம் அள்ளிவிடமாட்டாது என்பதையே

சம்பந்த சுவாமிகள் இட்ட ஏட்டை வைகை நதி எதிரேற விட்ட நிகழ்ச்சி குறிப்பிடுகிறதாம்.

'ஒரு தமிழ் ஏடு' என்பதற்கு 'ஒப்பற்ற தமிழ் ஏடு'எனப் பொருள்கொண்டு சமணர் எழுதிய ஏடுகள் என்றும், ஒரு தமிழ் ஏடு எனப் பொருள் கொண்டு திருஞான சம்பந்த சுவாமிகள் இட்ட ஏடு என்றும் இரண்டு விதமாகப் பொருள் கொள்வர். எப்படிப் பொருள் கொண்டபோதிலும் வைகை நதி தமிழின் பெருமையை அறிந்திருந்தது என்பதை மறுக்கமுடியாது.

புனல்வாது நிகழ்வதற்கு முன்பு ஒரு முறை அனல் வாதும் நிகழ்த்தினர்கள். அப்போது சமணர்களால் இடப்பட்ட ஏடு பஞ்சு எரிவது போன்று எரிந்து சாம்பராகிவிட்டது. ஆனல், சம்பந்த சுவாமிகளால் இடப்பட்ட ஏடு அப்படியே பச்சையாக இருந்தது.

"இட்ட எட்டினில் எழுதிய செந்தமிழ்ப் பதிகம்
மட்டுலாங்குழல் வனமுலை மலைமகள் பாகத்
தட்டமூர்த்தியைப் பொருளென வுடைமையால் அமர்ந்து
பட்டதீயிடைப் பச்சையாய் விளங்கிய தன்றே"

நெருப்பு இத்தமிழ் ஏட்டை எரியாமல் விட்டதற்கு ஏற்ற காரணம் கூறுகிறர். சிவபிரானைப் பொருளாக உடைமையால் அது எரியாது விட்டது. அந்த இடத்திலே வெறுமையாக அட்டமூர்த்தி என்று கூருது 'மலைமகள் பாகத்து அட்டமூர்த்தி' என்று கூறுகிறர்; மலைமகள் பாகத்தை ஆசிரியர் கூறியிராவிட்டால் அதிலுள்ள சுவை அவ்வளவாகச் சோபித்திருக்க முடியாது. மலைமகளைப் பாகத்திலே கொள்வதற்கு ஈசன் வெறுப்புக் கொண்டிருந்தால் அவரைப் பொருளாக வுடைய இந்தத் தமிழேடும் ஒருசமயம் எரிந்திருக்கக்கூடும்! சைவ சமயத்தின் பெருமையை ஈசன் மலைமகளை வாம பாகத்திற் கொண்டிருப்பதிலேதான் தங்கியிருக்கிறது. இயற்கைக்கு மாருகப் பெண்ணை வெறுத்தொதுக்கும்படி கூறுகிற சமணருடைய கொள்கையை ஆசிரியர் தோற்ருதவாறு கண்டிக்கிறர். சமணர்களுடைய கொள்கைப்படி எல்லோரும் பெண்ணை வெறுத்தொதுக்கிச் சந்நியாசங் கொண்டுவிட்டால் காலகதியில் மனித வர்க்கமே அழிந்துவிடலாம். அவ்வுண்மையைத் தெளிவுபடுத்தும் நோக்கமாகத்தான் போலும் தீச் சமணர்களிட்ட ஏட்டை எரித்தும், சம்பந்த சுவாமிகள் இட்ட ஏட்டை எரியாதும் விட்டது அந்த வைகை ஆறு.

இவ்விரு நிகழ்ச்சிகளும் மதுரையிலே நடைபெற்றன. மதுரையிலே ஓடுகிற நீரும், அங்கே எரிகிற நெருப்பும் மிகவும் சக்தியுடையனவாக இருக்கின்றன. அவற்றிற்குத் தமிழின் அருமை தெரியும். தமிழ் வளர்த்த மதுரை மாநகரத்திலுள்ளவை அல்லவா? மதுரைப் பதிற்றுப் பத்தந்தாதியிலே பரஞ்சோதி முனிவர் இதை மிக அழகாகச் சொல்லுகிறர்:

"பாரறியு மறிவினுமிப் பார்மேனின்ற
பசுஞானத் தாலுமேட்டிப் பார்க் கொணுத
பேரறிவே சிற்றறிவேற் கிருளை நீக்கும்
பேரொளியே அங்கயற் கண் பிரியாதானே
யாரறிவார் தமிழருமை யென்கின்றேனென்
னறிவீனமன்ருேவுன் மதுரை மூதூர்
நீரறியு நெருப்பறியு மறிவுண்டாக்கி
நீ யறிவித்தா லறியுசிலமுந் தானே."

"ஈழமணி"யின் அடுத்த இதழ்

# விபுலாநந்த அடிகள்

நினைவு மலராக வெளிவரும்.

செய்தியனுப்பியோர்

சி. இராசகோபாலாச்சாரியார்
ஆர். கே. சண்முகம் செட்டியார்
தி. சு. அவிநாசிலிங்கம் செட்டியார்
டக்டர். அ. சிதம்பரநாதன் செட்டியார்
வித்துவான். ஒளவை. துரைசாமிப்பிள்ளை
என். கந்தசாமிப்பிள்ளை
டக்டர். இயன் சாண்டிமன்

கட்டுரையாளர்கள்

சுவாமி சுத்தானந்த பாரதியார்
செட்டிநாட்டரசர். அண்ணாமலைச் செட்டியார்
நாவலர். எஸ். சோமசுந்தர பாரதியார்
தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்
சீ. எம். இராமச்சந்திரன் செட்டியார்
சீனி. வேங்கடசாமி
பெ. ராம. ராம. சித. சிதம்பரம் செட்டியார்
பெ. நா. அப்புஸ்வாமி
பண்டிதர். சே. சோமசுந்தரம்பிள்ளை
P. ஆலாலசுந்தரம் செட்டியார்
சே. வே. ஜம்புலிங்கம் பிள்ளை
வித்துவான். மா. இராஜமாணிக்கம்
அ. பழநியப்ப செட்டியார்
டக்டர். க. கணபதிப்பிள்ளை
வித்துவான். சி. கணேசையர்
க. சோமசுந்தரப் புலவர்
பண்டிதை. இ. பத்மாசனி அம்மையார்
பண்டிதமணி. க. சு. நவநீதகிருஷ்ண பாரதியார்
முதலியார். குல. சபாநாதன்
தென்புலோலியூர், மு. கணபதிப்பிள்ளை
சோம. சரவணபவன்
சோ. நடராஜன்
க. இலக்குமண ஐயர்
வித்துவான். க. இராமலிங்கம்
வித்துவான் க. முருகேசபிள்ளை
அ. வி. மயில்வாகனன்
பண்டிதர். வி. சீ. கந்தையா
பண்டிதர். இ. நமச்சிவாய தேசிகர்
த. இராமநாதபிள்ளை
ச. சோமசுந்தர ஐயர்
சைவப் புலவர். வ. சுப்பிரமணியம்
பொன். சின்னத்துரை
அ. செ. மு.
இறைமணி

இன்னும் பலர் விஷயதானம் செய்திருக்கிறார்கள்.

Edited & Published by Mr. K. K. Murugesa Pillai, 97, Norris Road, Colombo,
at the Ceylon Printers Ltd., Parsons Road, Colombo.